
Regd. No. M. 4392

இந்த பெயரை பின் பற்றுங்கள்

ஸிம்ப்ஸன்



ஸிம்ஸன் முத்திரையுள்ள க்யாஸ்பிளாண்ட் எளிதில் புறப்படச் செய்யுந் தன்மையுள்ளது. தவிர, க்யாஸிலிருந்து பெட்ரோலுக்கோ, க்யாஸும் பெட்ரோலும் சேர்த்து ஓட்டுவதற்கோ, சுலபமாக மாற்ற பிரத்தியேகமாய்ச் செய்யப்பட்ட "ஸ்டான்ஸிம்கோ" "க்யாஸ் மிக்ஸிங் சேம்பர்" என்னும் கருவியை உடையது.

க்யாஸ் எவ்வளவு பரிசுத்தமாக இருக்கிறதோ அவ்வளவு மேன்மையான உழைப்பு

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்.
மவுண்ட்ரோடு, மதறாஸ்.

 1840ல் ஸ்தாபித்த ஓர் இந்திய தொழிற் சாலை

இன்றைய சிறந்த முதலீடு. நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

தி இந்தியன் பாங்க்

லிமிடெட்.

★

தலைமை ஆபீஸ் :

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி,
மவுண்டு ரோடு, மயிலாப்பூர்,
தியாகராய நகர், புரசவாக்கம்.

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும், பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 60,00,000

செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 33,48,561

ரிஸர்வ் நிதி ரூ. 32,00,000

டெபாஸிட்டுகள் ரூ. 10 கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி.

கும்பகோணம்

டி. எஸ். ஆர்.

கம்பெனியின்

உயர்ந்த

- அத்தர்
- அரகஜா
- புனுகு
- ஜவ்வாது
- ஊதுவத்தி
- சுராங்கர்
- ஸுகந்தங்கள்
- பன்னீர்
- பாக்குத்தூள்

முதலியன

★

விவரங்களுக்கு எழுதவும்

மதராஸ் லிமிடெட் ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

★

ஸ்டாக்கிஸ்டுகள் :

என். எஸ். ஏ. பொன்னம்பல நாடார் அண்டு கம்பெனி, மதுரை

கல்கி




ALKI டிஸம்பர் 24,1944


4 அ


Guaranteed
100% Pure
Virginia
Tobacco
MAGNUMS
TENOR
10 CIGARETTES
T90

திருப்தி, அமைதி

ஒரு கப் ... சுறுசுறுப்புடன்.
கேட்பானேன். நரஸஸ் ...
தான்! நல்ல காபி ருசியை
அனுபவிக்க அறிந்தவர்கள்
நரஸஸ் காபி, ருசியையே
விரும்புகிறார்கள்.





சென்னை ராஜதானிக்கு டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

ராணி (மதராஸ்) லிமிடெட்.

மவுண்ட் ரோடு :: மதராஸ்

தந்தி: "AUTOWORKS" டெலிபோன்: 3595

பிராஞ்சுகள்

பெங்களூர் ஸிடி :: திருச்சூர்

காலக்ஷேபம்

சிக்கனம்!

எஜமானி (வேலைக்கு வந்திருக்கும் பெண்ணைப் பார்த்து):—என் வீட்டில் வேலை செய்பவர்கள் மிகவும் சிக்கனமாயிருக்க வேண்டும்.

புதிய பெண்:—சிக்கனமாயிருந்தேனென்ற காரணத்தினால்தான் முந்திய எஜமானி என்னை நீக்கிவிட்டாள்!

எஜமானி:—அதென்ன, ஆச்சரியமாயிருக்கிறதே?

புதிய பெண்:—நான் புடவை வாங்க வேண்டிய பணத்தைச் செலவழிக்காமல், சிக்கனமாக அவளுடைய புடவைகளையே உடுத்திக் கொண்டு வந்தேன்! —ஏ. பி. பார்த்தசாரதி.

★

நல்ல சகுனமா?

முதல் முதல் சங்கீதம் கற்றுக் கொள்ளும் மாணவி:—என்ன, ஸார்! நீங்கள் ராகம் போட்ட உடனே, எங்கிருந்தோ கர்த்தபம் கத்துகிறதே!

பாட்டு வாத்தியார்:—நீ சங்கீதம் கற்றுக் கொள்வதற்கு அது நல்ல சகுனம்!

—ஏ. ஜே. அப்பாவு ஜெயின்.

★

வருந்தும் காரணம்

குமாஸ்தா (நண்பரிடம்):—எங்கள் ஆபீஸர் மாற்றிக்கொண்டு போகிறார். எனக்கு ரொம்ப மனசுக்குச் சங்கடமாயிருக்கிறது.

நண்பர்:—அவர் எல்லோரிடத்திலும் ரொம்பவும் அன்பாக நடந்து கொண்டாராக்கும்?

குமாஸ்தா:—இல்லை; அவருக்குத் தேநீர் விருந்து நடத்துவதற்காக என்னை இரண்டு ரூபாய் கேட்கிறார்கள்!

—அ. இராமமூர்த்தி.

★

அவசியந்தானே!

சர்க்கஸ் மானேஜர் (வேலைக்கு மனுப் போட்டவரைப் பார்த்து):—உமக்கு என்ன வேலை தெரியும்?

வேலைக்கு வந்தவர்:—எனக்கா? நன்றாகச் சாப்பிடத் தெரியும்.

ச. மா:—சரிதான்; ஒரே தடவையில் 25 இட்லி, 16 போண்டா, 29 வடை, இவை தவிர, 13 கப் காப்பி இவைகளை யெல்லாம் சாப்பிட முடியுமா?

வந்தவர்:—ஓ, முடியுமே!

ச. மா:—ரொம்ப சரி! ஆனால் ஞாயிற்றுக் கிழமை மட்டும் இரண்டு காட்சிகள் ஆயிற்றே!

வந்தவர்:—அதற்கென்ன, பரவாயில்லை! ஆனால் நடுவில் மட்டும் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு வரக் கொஞ்சம் அவகாசம் தர வேண்டும்! —வி. லக்ஷ்மணன்.

ருசிகரமான விஷயம்

நண்பர்:—ஸார்! உங்கள் பத்திரிகையில் நேற்று ரொம்ப ருசிகரமான விஷயம் ஒன்று வந்தது. ரொம்ப அபூர்வமாயிருந்தது!......

பத்திரிகை ஆசிரியர் (மகிழ்ச்சியுடன்):—அப்படியா? என்ன விஷயம் அது?

நண்பர்:—என் பையன் நேற்று உங்கள் பத்திரிகையில் 'சுந்தர விலாஸ் காப்பி க்ளப்' விளம்பரத்தைப் பார்த்துவிட்டுத்தான் அங்கேயிருந்து பாதாம் ஹல்வா வாங்கிக் கொண்டு வந்தான்; ரொம்ப நன்றாயிருந்தது!

—கே. கோபாலன்.

★

சரியான பதில்

வேலைக்காக அலையும் ஒரு பையன், ஒரு கம்பெனி மானேஜரை அடைந்தான்.

மானேஜர்:—எவ்வளவு பேர்களுக்கு வேலை காலி இல்லை என்று சொல்வது? இதே பெரிய தொந்தரவாய்ப் போய்விட்டதே! போ, போ!

பையன்:—'வேலை இல்லை' என்று சொல்லும் வேலையையாவது எனக்குக் கொடுங்கள், ஸார்! —எஸ். சீதாராமன்.

★

மருந்தின் உபயோகம்

வந்தவர்:—டாக்டர் ஸார், நீங்கள் நேற்று எனக்கு இருமல் மருந்து என்று சொல்லி ஒரு புட்டியில் கொடுத்தீர்களே, அதில் இன்னொரு புட்டி வேண்டும்.

டாக்டர்:—ஏன், இருமல் இன்னும் சரியாகக் குணமாகவில்லையா?

வந்தவர்:—அந்த மருந்தை என் மனைவி பாத்திரங்களுக்குப் பாலிஷ் போட வைத்துக் கொண்டு விட்டாள். ரொம்ப நன்றாக வெளுக்கிறதாம். இன்னொரு புட்டி கேட்கிறாள்! —கே. ஆர். குருமூர்த்தி.

★

எது நல்லது?

ஒருவர் (வழிப்போக்கரைப் பார்த்து):—ஏன், ஸார்! பஸ்ஸில் போவது நல்லதா, டிராமில் போவது நல்லதா?

வழிப் போக்கர்:—இரண்டும் வேண்டாம்; நடந்து போவதே நல்லது!

—ஏ. பி. ஆர். சாரதி.

★

நல்ல யோசனை!

மாமியார் (மருமகளைப் பார்த்து):—போதும், போதும்! நீ சொன்ன ஹாஸ்யக் கதையைக் கேட்டு, சிரித்துச் சிரித்து என் பாதி உயிர் போய் விட்டதே!

மருமகள்:—அப்படியானால் இன்னொரு தடவை அதையே சொல்லுகிறேன், மாமி!

—ஆ. ஏழுமலை.

★

ஒரே நிலை!

விசாலம்:—ஏண்டி, லோகாம்பு! நீ மூணு வருஷமா, உன் வயசு முப்பதுன்னு சொல்லிண்டிருக்கியே!

லோகாம்பு:—போடி! மத்தவாளைப்போல இன்னிக்கு ஒண்ணு சொல்றது, நாளைக்கு ஒண்ணு சொல்றதுங்கிறது என்கிட்ட கிடையாது!

—கே. கோ.



பிரயாணக் கதை 4



ஆறுமணி நேரமாகிவிட்டது. குழந்தைகளுக்கு பசியெடுப்பது இயற்கைதானே



ஆகாரம்தேட ராமச்சந்திரன் செல்லுகிறார். பக்கத்திலேயே கல வேடிக்கையாக பிளாட்பாரக் கடைக்காரர் இருக்கிறார்





இப்பொழுதெல்லாம் அநேகம்பேர் பிரயாணம் செய்வதால் உணவுப்பண்டங்கள்கூட வேண்டிய அளவு கிடைப்பதில்லை.

அவசியமான பொருள்களை அனுப்ப முதலாவது இடம் அளிக்க வேண்டும். ஆகையால்தான் இன்று பிரயாணம் செய்வது கஷ்டமாக இருக்கிறது.

வீண் பிரயாணம் செய்யாதீர்கள்

இந்தக் குடும்பத்துக்கு என்ன நேர்ந்ததென்பதை அடுத்த வாரக் கதையில் காணுங்கள்.

A88 849TR

கட்டுப்பாட்டு விலையினால்...

உற்பத்தியாளருக்கு நியாயமான விலை கிடைக்கும். சில்லறை வியாபாரிகளுக்கு நியாயமான இலாபங்கிடைக்கும். நீங்களும் எந்தப் பொருளையும் நியாயமான விலைக்கு வாங்கலாம்.

மூன்று விதங்களில் துணி விலை குறைக்கப்பட்டிருக்கிறது

மிக அதிக விலைவைத்து விற்கும் பொருட்டு ஏராளமாகச் சரக்குகளைத் திரட்டி வைத்துக் கொண்டிருந்த வியாபாரிகளை, விலைகளைக் குறைக்கும்படிக் கட்டாயப்படுத்த வேண்டுமென்னும் நோக்கத்தோடுதான் துணி விலைக் கட்டுப் பாட்டுக்கட்டளை பிறந்தது. இதன் பயனாக 270 கோடி கஜம் துணி விற்பனைக்கு வெளியானது. அதேசமயத்தில், நெசவு முதலாளிகளின் பூரண ஒத்துழைப்பின்பேரில் மலிவான துணி உற்பத்தித்திட்டம் ஆரம்பமானது. இதன் பயனாக விலைகள் 100-க்கு 40 பங்கு குறைந்தன. ஒரு வேஷ்டியும் வாங்கமுடியாத நிலைமையிலிருந்தவர்களுக்குக் கஷ்டம் நீங்கியது. இருந்தாலும் அரசாங்கம் திருப்தியடையவில்லை. அதன் பிறகு நீங்கள் மலிவாகத் துணிகள் வாங்கும் பொருட்டு மூன்று விதிகள் கையாளப்பட்டன.

1. 1943ஆம் டிசம்பரில் துணிகள் இன்ன விலைகளுக்குமேல் விற்கப்படாது என்னும் உச்சவிலை ஏற்பட்டது. அது முதல் 100-க்கு 9½ விகிதப்படி இருமுறை விலைகள் குறைந்தன.

2. அரசாங்கத்தாரே 13 ஆலைகளில் உற்பத்தியாகும் சரக்குகளை எடுத்துக் கொண்டு, கட்டுப்பாட்டு விலைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள் மூலம் வினியோகிக்கிறார்கள்.

3. நூல் விலையும் துணிவிலையும் மட்டுமின்றி நெசவு இயந்திரங்களின் விலையும் கட்டுப்பாட்டிற்குள்ளாகியிருக்கிறது. இதனால் துணி உற்பத்தி விலை குறைகிறது. எனவே, நீங்கள் வாங்கும் துணி விலையும் குறைகிறது.

துணிக்கு வியாபாரிகள் அதிகவிலை சொல்லுவார்களானால், கீழ்க்கண்ட முக்கியமான முறைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் அவை உங்களுக்கும் ஆதாயமளிக்கும்

1. எல்லா வகைத் துணிகளின் விலையையும் [illegible] அரசாங்கப் பிரசுரமாகவும் வெளியிட்டிருக்கிறோம். அவரிடம் அந்த ஜாபிதா கிடைக்கும். பகுதித் துணி உச்சவிலை ஜாபிதா வேண்டு எழுதுங்கள். விலை ரூபாய் 3—10—0 தபால் செலவில்லை.

2. ஒரு வியாபாரியை குறித்து பிரியாதுகள் செய்து கொள்ளவேண்டுமானால், உங்கள் ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கு எழுதிக்கொள்ளுங்கள். கட்டுப்பாட்டுக் கட்டளையின்படி அவருக்குப் பூர்த்த அதிகாரமுண்டு. அல்லது மாகாணங்களிலும் சுதேச சமஸ்தானங்களிலும் டில்லி சப்ளை இலாக்காவில் நியமிக்கப்பட்டிருக்கும் ஜவுளி அதிகாரிக்காவது எழுதிக் கொள்ளுங்கள்.

3. அரசாங்கக் கட்டளைப்படி விலைகள் ஒவ்வொரு துணியின் பேரிலும் முத்திரையிடப்பட்டிருக்கிறது.

பிரியாது செய்துகொள்ளத் தயங்காதீர்கள். அப்போதுதான் குற்றவாளிகள் என்று மெய்ப்பிக்கப்படுகிறவர்கள் தண்டனைக்குள்ளாகலாம்.

உண்மையை உணர்ந்து உங்கள் உரிமையைக் கேளுங்கள்

நியூ டில்லி கைத்தொழில் சிவில் சப்ளை இலாக்கா வெளியிட்டது.

AAA 1208 TM

"இந்த என்னால் பொறுக்க முடியவில்லை. நீசனான இந்தக் கீசகனை உடனே வதம் செய்வாய். உங்களுடைய பிரதிக்ஞையைக் காப்பாற்றுவதற்காக நான் விராடனுக்குச் சந்தனம் அரைத்துத் தரும் தாசியாக இருந்து வருகிறேன். மதிப்புக்குரியவரல்லாதவர்களுக்குப் பணிவிடை செய்து வருகிறேன். உனக்கும் குந்தி தேவிக்கும் நான் எப்பொழுதும் பயப்பட்டதில்லை. ஆனால் இப்போது இந்த அந்தப்புரத்தில் நடுங்கிக் கொண்டு பணிவிடை செய்து வருகிறேன். என் கைகளைப் பார்!" என்று சொல்லிச் சந்தனம் அரைத்துத் தழும்பேறின கைகளை பீமனுக்குக் காண்பித்தாள். விருகோதரன் அவள் கைகளை முகத்தில் ஒத்திக் கொண்டான்.

அவளுடைய கண்ணீரைத் துடைத்து விட்டு, "கல்யாணி! நான் இனி யுதிஷ்டிரனுடைய பிரதிக்ஞையையும் அனுசரிக்க மாட்டேன். தனஞ்சயனுடைய யோசனையையும் கவனிக்க மாட்டேன். நீ என்ன சொல்லுகிறாயோ அதைச் செய்வேன். கீசகனை அவன் சகல பந்துக்களோடு இப்போதே கொல்வேன்!" என்று சொல்லி எழுந்தான்.

பிறகு திரௌபதி அவசரப்பட வேண்டாம் என்று பீமனை எச்சரிக்கை செய்து தடுத்தாள். இருவரும் ஒரு யோசனை செய்து முடித்தார்கள். கீசகனை ஏமாற்றி இரவில் தனியாக நடன சாலையில் யாருமில்லாத இடத்திற்கு வரச் சொல்லி, பீமன் அவனை அங்கே வதம் செய்து விடுவதென்று தீர்மானித்தார்கள்.

* * *

மறு நாள் விடிந்ததும், கீசகன் திரௌபதியைப் பார்த்து, "ஸைரந்திரி! அரசனுக் கெதிரில் உன்னை நான் கீழே தள்ளிக் காலால் உதைத்தேன். உனக்கு ஒரு ரக்ஷகனும் முன் வரவில்லை. பெயருக்கு மாத்திரம் இந்த விராடன் மத்ஸ்ய தேசத்துக்கு அரசன். உண்மையில் சேனாபதியாகிய நான்தான் அரசன் என்று அறிவாய். என்னைச் சுகமாக வந்து அடை. உனக்கு நான் தாசனாக இருப்பேன். நீ மகாராணியைப் போல் எல்லா போகங்களையும் அனுபவிப்பாய்!" என்று மறுபடியும் காமாதுரனாக வற்புறுத்தினான். திரௌபதி அவனுக்கு இணங்கிவிட்டதாகக் காட்டிக்கொண்டு, "கீசக! நான் சொல்லுகிற வார்த்தையை உண்மையாக நம்பு. என்னுடன் நீ சேருவதை உன்னுடைய தோழர்களாவது சகோதரர்களாவது யாரும் அறியக் கூடாது. நான் பழிக்குப் பயந்தவள். யாருக்கும் தெரியாமல் காப்பாற்றுவதாகச் சபதம் செயதாயானால் உனக்கு நான் வசப்படுவேன்" என்றாள்.

கீசகன் மகிழ்ச்சி பரவசமாகி விட்டான். அவள் இருக்கும் வீட்டுக்குத் தனியாகத் தான் அன்று வருவதாக ஒப்புக் கொண்டான்.

"நடன சாலையில் பகலில் பெண்கள் நர்த்தனம் பழகுகிறார்கள். இரவில் அவரவர்கள் இருக்குமிடத்திற்குப் போய் விடுகிறார்கள். அங்கே யாரும் இருக்க மாட்டார்கள். இன்றிரவு அந்த இடத்திற்கு நீ வந்து சேர். நான் கதவைத் திறந்து வைத்து அங்கே படுத்திருப்பேன். அவ்விடத்தில் நான் உனக்கு உடன்பட்டவளாவேன்" என்றாள்.

கீசகன் ஆனந்தத்தில் மூழ்கினான்.

அன்றிரவு ஸ்நானம் செய்து நிறைய அலங்காரங்கள் செய்து கொண்டு கதவு திறந்து வைக்கப்பட்டிருந்த நர்த்தன சாலைக்குள் யாரும் தெரியாமல் மெதுவாகப் பிரவேசித்தான். திரௌபதி குறிப்பிட்ட கட்டிலண்டை இருட்டில் சென்றான். கட்டிலின் மேல் மெல்லிய ஒரு வெண்பட்டு வஸ்திரம் தரித்துக் கொண்டு படுத்திருந்த பீமசேனனை ஸைரந்திரி என்று எண்ணிக் கையினால் மெதுவாகத் தொட்டான். உடனே பீமன் எழுந்து கீசகனை சிம்மம் மானைப் பிடிப்பதுபோல் பிடித்துக் கீழே தள்ளினான்.

பிறகு இருட்டில் இருவருக்கும் மல் யுத்தம் நடந்தது. இவன் ஸைரந்திரியின் கந்தர்வர்களில் ஒருவன் என்றே கீசகன் எண்ணினான். கீசகனும் பீமனைப் போலவே மிக்க புலசாலி. அந்தக் காலத்தில் பீமன், பலராமன், கீசகன் மூவர்களும் மல் யுத்தத்தில் சம புகழ் பெற்றவர்கள். வாலி சுக்ரீவர்களுடைய யுத்தத்தைப்போல் பீமனுக்கும் கீசகனுக்கும் போர் நடந்தது. முடிவில் பீமன் கீசகனைக் கொன்று அவன் உடலைக் கசக்கி ஒரே உருண்டைப் பிண்டமாக்கி விட்டு, திரௌபதியிடம் விடை பெற்றுக் கொண்டு விரைவாக மடைப் பள்ளிக்குச் சென்று ஸ்நானஞ் செய்து சந்தனம் பூசிக் கொண்டு திருப்தியுடன் படுத்துக் கொண்டான்.

திரௌபதி நர்த்தன சபைக் காவலாளிகளை எழுப்பி, "கீசகன் என்னை இம்சிக்க வந்தான். என்னுடைய நாதர்களான கந்தர்வர்கள் கீசகனை வதம் செய்து விட்டார்கள். அதர்ம வழியில் ஆசை கொண்ட உங்கள் சேனாபதி கந்தர்வர்களால் கொல்லப்பட்டு இறந்து கிடப்பதைப் பாருங்கள்" என்று சொல்லி உருவம் தெரியாத சவமாகக் கிடக்கும் கீசகனைக் காண்பித்தாள்.

கத்தையும் தேஜஸையும் பார்த்துக் கந்தர்வர்களைப் பற்றி அவள் சொன்னதை எல்லாரும் நம்பி வந்தார்கள். ஆனால் கீசகன் கந்தர்வர்களைப் பொருட்படுத்தவில்லை. பல தடவை திரௌபதியை அடைய முயற்சித்தும் பயன் பெறாமல் கடைசியில் சுதேஷ்ணையிடம் தன்னுடைய ஆசையைத் தெரிவித்தான்.

* * *

"உன்னுடைய ஸைரந்திரியைப் பார்த்தது முதல் எனக்குத் தூக்கமில்லை, சுகமுமில்லை. நீயே என்னைக் காப்பாற்ற வேண்டும். அவளை எப்படியாவது என்னிடம் நீ சேர்ப்பிக்க வேண்டும்" என்று சகோதரியைக் கெஞ்சினான்.

புத்திமதியும் நல்ல வார்த்தைகளும் அவள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். கீசகன் கேட்கவில்லை. முடிவில் சுதேஷ்ணை கீசகன் சொன்னதை ஒப்புக் கொண்டாள். இருவருமாக ஒரு யுக்தி செய்து திரௌபதியை வலையில் சிக்க வைக்கத் தீர்மானித்தார்கள்.

ஒரு நாள் இரவில் கீசகன் வீட்டில் விசேஷமான பணியாரங்களும் மதுபானமும் தயார் செய்து, அந்தச் சமயம் சுதேஷ்ணை ஸைரந்திரியைக் கூப்பிட்டு, "நீ தம்பி கீசகன் வீட்டுக்குப் போய் இன்று அங்கே பக்குவமாகி யிருக்கும் மதுபானத்தை இந்தப் பாத்திரம் நிறைய வாங்கி வா" என்று ஒரு அழகிய பொன் கலசத்தை அவளிடம் கொடுத்தாள்.

"நான் இந்த நேரத்தில் கீசகன் வீட்டுக்குத் தனியாகப் போக மாட்டேன். எனக்குப் பயமாக இருக்கிறது. வேறு யாரையாவது அனுப்புங்கள். எத்தனையோ வேலைக்காரிகள் இருக்கிறார்களே!" என்று சொல்லிப் பலவாறாகத் திரௌபதி வேண்டிக் கொண்டாள்.

சுதேஷ்ணை கேட்கவில்லை. கோபித்துக் கொண்டவள் போல் நடித்து, "நீயே போக வேண்டும். வேறு யாரையும் அனுப்ப முடியாது" என்று திரௌபதியை அனுப்பினாள்.

* * *

கீசகன் வீட்டில் அவள் பயந்தவாறே நடந்தது. காம வெறி கொண்ட அந்த நீசன் திரௌபதியைக் கெஞ்சியும் வற்புறுத்தியும் தொந்தரவு செய்தான்.

"கீழ் ஜாதியைச் சேர்ந்த என்னை ஏன் விரும்புகிறாய்? அதர்மத்தில் ஏன் பிரவேசிக்கிறாய்? கணவனைப் படைத்த என்னை ஏன் தீண்டப் பார்க்கிறாய்? நசித்துப் போவாய். எனக்குக் காவலாக இருக்கும் கந்தர்வர்கள் கோபங் கொண்டு உன்னை வதம் செய்து விடுவார்கள்!" என்று அவன் விருப்பத்தை மறுதலித்தாள்.

எவ்வளவு வற்புறுத்தியும் திரௌபதி கேளாததைக் கண்டு கீசகன் அவளுடைய கையைப் பிடித்து இழுத்தான். திரௌபதி தன் கையிலிருந்த மத்தியப் பாத்திரத்தைக் கீழே போட்டுவிட்டு அவனை உதறித் தள்ளி வெளியே ஓடினாள். கீசகன் கோபம் மேலிட்டு அவளைப் பின் தொடர்ந்தான். ராஜ சபையண்டை முறையிட்டுக் கொண்டு ஓடின அவளைத் தன் அதிகாரத்தினாலும் செல்வாக்கினாலும் மதம் கொண்டு யாரையும் லட்சியம் செய்யாமல், "சீ! தாசி!" என்று சொல்லிப் பல பேரும் பார்க்க உதைத்தான். விராடனைத் தன் வசப்படுத்திக் கொண்டு சகல அதிகாரமும் பெற்றிருந்த சேனைத் தலைவனைக் கண்டு எல்லாரும் பயந்தார்கள். அவன் அக்கிரமத்தைத் தைரியமாக நின்று கண்டிக்க யாரும் முன் வரவில்லை.

* * *

திரௌபதியானவள் தனக்கு நேர்ந்த அவமானத்தையும் இக்கற்ற நிலையையும் நினைத்துத் துயரமும் கோபமும் தாங்க முடியாமல், தாங்கள் இன்னார் என்று உலகத்துக்குத் தெரிந்து விட்டால் நேரிடும் விபத்தையும் பொருட்படுத்தாமல், இரவில் பீமன் படுத்திருந்த இடத்துக்குப் போய் அவனை எழுப்பினாள்.



மானம் காத்தல்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

தருமபுத்திரர் சந்நியாசி உடையும் வேஷமும் தரித்தார். அருச்சுனன் ஒரு நபும்சகனாகவே மாறி விட்டான். மற்றவர்களும் தோற்றம் மாறி யாரும் கண்டு கொள்ளாதவாறு ஆனார்கள். உருவம் மாறி யிருந்தாலும் அவர்களுக்கு இயற்கையான வசீகரத் தோற்றமும் தேஜசும் மட்டும் பழையபடியே இருந்தன. இது எல்லாரையும் வியப்புறச் செய்தது. விராட ராஜனிடம் வேலையில் அமர்வதற்காகப் போன காலத்தில், "இவர்கள் அரசு புரியும் யோக்கியதை படைத்தவர்களாகக் காணப்படுகிறார்கள்; குற்றேவல் செய்யத் தகுந்தவர்களல்ல" என்று ஒவ்வொருவரைப் பற்றியும் விராடன் எண்ணினான். வேலையில் அமர்த்திக் கொள்ள முதலில் தயங்கினான். ஆயினும் பாண்டவர்கள் வற்புறுத்தியதின் மேல் தைரியங் கொண்டு, சந்தோஷமாகவே அவர்கள் கேட்டுக் கொண்ட பணிவிடை ஸ்தானங்களில் அவர்களை அமைத்தான்.

யுதிஷ்டிரன் விராட ராஜனுக்கு ஆஸ்தானத் தோழனாக இருந்து கொண்டு அவனுடன் சொக்கட்டான் ஆடிக் கொண்டு காலம் கழித்து வந்தான். பீமன் மடைப்பள்ளித் தலைவனாக வேலை செய்து வந்தான். அவ்வப்போது பிரசித்தி பெற்ற மல்லர்களுடன் குஸ்தி பிடித்தும் துஷ்ட மிருகங்களைச் சமாளித்தும் அரசனை மகிழ்வித்து வந்தான்.



அருச்சுனன் பிருகந்நளை என்ற பெயருடன் அந்தப்புரப் பெண்களுக்கு, முக்கியமாக விராடன் மகள் உத்தரைக்கும் அவளுடைய தோழிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் நிருத்தியமும் கானமும் வாத்தியங்கள் வாசிக்கவும் கற்பித்து வந்தான். நகுலன் குதிரைகளைப் பழக்குவதிலும் அடக்குவதிலும் அவற்றின் நோய்களுக்குச் சிகிச்சை செய்வதிலும் பாதுகாப்பதிலும் மிகுந்த திறமை காட்டி விராடனுக்குச் சேவை செய்து வந்தான். சகதேவன் பசுக்களையும் காளைகளையும் கவனித்து வந்தான்.

பல தாசிகளுடைய பணிவிடையைப் பெறத் தக்க ராஜகுமாரியான பாஞ்சாலி, சுதேஷ்ணைக்கு ஊழியம் செய்து கொண்டு, அந்தப்புர ஸைரந்திரியாகக் காலம் கழித்தான். பர்த்தாக்களுடைய சத்தியப் பிரதிஜ்ஞையைக் காப்பாற்றும் பொருட்டு மனத்துக்கு ஒவ்வாத குற்றேவல் பணிகளில் ஈடுபட்டான்.

* * *

சுதேஷ்ணையின் சகோதரன் கீசகன் என்கிற பலவான் விராடனுடைய சேனைத் தலைவன். அவனும் அவன் குலத்தவரும் விராடனுடைய படை வீரர்களாக இருந்து விருத்தனான விராட ராஜனுடைய பலத்தை மிகப் பெருக்கினார்கள். மத்ஸ்ய தேசத்திற்கு உண்மை அரசன் கிழவன் விராடன் அல்ல, கீசகனே என்று பாமர ஜனங்கள் சொல்லி வந்தார்கள். அவனுடைய செல்வாக்கு அவ்வளவு ஓங்கிவிட்டிருந்தது. அந்தக் கீசகன் தன் பலத்தாலும் அரசனிடம் தனக்கிருந்த செல்வாக்காலும் மதி இழந்தவனானான். திரௌபதியைக் கண்டது முதல் காம விகாரமடைந்து இவள் ஒரு வேலைக்காரி தானே, இவளை எளிதில் அடையலாம் என்று எண்ணிப் பல தடவை முயற்சி செய்தான். சுதேஷ்ணையிடமாவது மற்றவர்களிடமாவது இதைப் பற்றிச் சொல்லிக் கொள்ள திரௌபதி கூச்சப்பட்டான். தன்னை யாராவது அவமதித்தால் அவர்களைத் தன்னுடைய பதிகளான கந்தர்வர்கள் ரகசியமாக வதம் செய்து விடுவார்கள் என்று சொல்லிக் கொண்டு வந்தான். அவளுடைய ஒழுக்

முத்தையா செட்டியார், ராஜாமணி எம்போரியம், ஏ. ஆர். நடேசன் செட்டியார், எம். என். ராமநாதய்யர்; ஜி. என். ராஜன், ரூ. 0—12—0: கே. அருணாசலம்.

ஆக ரூ. 30—0—0

திருப்பூர், கதர் சில்லறை விற்பனைக் கிளை காதி வஸ்திராலயம் நிர்வாகி ஸ்ரீ ஆர். பெருமாள் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ஷா. ஜம்னாதாஸ் மாதவ்ஜீ, ரூ. 2—0—0: கே. அப்பாவு முதலியார், க. சோமசுந்தரம் பிள்ளை, பி. கே. நாராயணசாமி அய்யர்; ரூ. 1—6—0: ஸ்ரீ எம். நாராயணசாமி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. பி. அருணாசலம், எம். ராமசாமி கவுண்டர், பி. ஜி. பாலசுப்ரமணியம், எம். கிருஷ்ணசாமி, டி. பி. ராமசாமி, கே. வி. ராமசாமி கவுண்டர், என். ராஜு செட்டியார், டி. ஆர். பொன்னுசாமி, என். பி. ராமசாமி, கே. டி. கிருஷ்ணசாமி கவுண்டர், ப. பெரியசாமி கவுண்டர், டி. ஆர். சாமிநாதன்; ரூ. 5—10—0: உண்டியல் மூலம் வசூல்.

ஆக ரூ. 30—0—0.

தன்னாசுனம், ஸ்ரீமதி வள்ளிமயில் நாச்சியார் மூலம்:

ரூ. 10 0 0: ஸ்ரீமதிகள் ஆர். டி. இந்திராதேவி, ஆர். கே. தேவி சௌந்தராணி; ரூ. 5 0 0: ஸ்ரீமான்கள் எம். கே. சுவாமி, வி. துரை சேர்வை. (மணியார்டர் கமிஷன் 0 6 0 நீங்கலாக) ஆக ரூ. 29 10 0

வந்தவாசி, "கல்கி" ஏஜண்ட் ஸ்ரீ ஏ. ராமலிங்கம் மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் வி. கே. வேணுகோபாலன், தான்மெல்ஜெயின்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் மு. திருவரங்கம், கி. செம்பு செட்டியார். ஆக ரூ. 26 0 0

போளூர், கல்கி ஏஜண்ட் ஸ்ரீ கே. சுப்ரமணிய முதலியார் மூலம்:

ரூ. 5 0 0: ஸ்ரீ கே. சுப்ரமணியம்; ரூ. 2 0 0: ஸ்ரீமான்கள் ஏ. பி. பாலசுப்ரமணியம், என். வி. ராகவன், மீனாக்ஷி தயாரிணி, கே. ரங்கநாத குப்தா, என். என். நாகேஸ்வரன்; ரூ. 1 0 0: போளூர் போஸ்ட் மாஸ்டர், மண்டகளத்தூர் ரெவின்யூ இன்ஸ்பெக்டர், வி. நடராஜன், குமாரினாஸ் வைத்திய நய்யர், அப்பாதுரை ஆச்சாரி, ரத்தினம், சளிக்காவடி சீனுவாசய்யர், கர்ணம் தாண்டவராய பிள்ளை, கடலாடி ரெவின்யூ இன்ஸ்பெக்டர், காசிமல்லி நாயுடு.

ஆக ரூ. 25 0 0

கோட்டையூர், பாரதி வாசகசாலை, கம்பன் நூல் நிலையம் ஸ்ரீ ராம. மு. வள்ளியப்ப செட்டியார் மூலம்:

ரூ. 5—0—0: பாரதி வாசகசாலையார்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ராம. மு. வள்ளியப்ப செட்டியார், அ. ராமசாமி செட்டியார், த. கரு. கருப்பஞ் செட்டியார், ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் சித. சொ. ராமசாமி, அ. அ. ராம. சுப்பையா செட்டியார், சுப. காசிச் செட்டியார், சித. அழகப்பச் செட்டியார், பெ. ராம. அ. அண்ணாமலை செட்டியார், அழ. ராமசாமி, சுப. நாராயணன், கி. மு. சின்னையா அம்பலம், வெ. சிதம்பரம் செட்டியார், குமரி நிலையம். ஆக. ரூ. 21—0—0.

தாம்பரம் கிறிஸ்துவ காலேஜ் ஸ்ரீ பி. ஜகதீசன் மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் வ சம்பந்தன், அ. க. பழனிசாமி, கி. ராஜகோபாலன், ப. ஜகதீசன், அ. ரா. வெங்கடராமன், க. ரா. சாரங்கபாணி, ராமராவ், த. க. கிருஷ்ணமூர்த்தி, த. மாணிக்கம், அ. சுப்பையா, ரா. விஜயராகவன், க. சுந்தரேசன், த. ரங்கன், சி. சீனிவாசன், க. துளசிங், ரு. அ. முத்து ரெட்டி, தி. வைத்தியநாதம், ர. வைத்தினாதன்; ரூ 1—8—0: ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை. (தபால் செலவு 0—5—6 நீங்கலாக)

ஆக ரூ. 19—2—6.

கிச்சிப்பூர் பேபர் மில்ஸ் ஸ்ரீ என். கிருஷ்ணன் எம்.ஏ., மூலம்.

ரூ. 4—3—6: ஸ்ரீமான்கள் ராகவ அய்யர், ஜானுப் ஷாபான்கான்; ரூ. 2—8—6: கே. என். நாயுடு. என். கிருஷ்ணு; ரூ. 1—11—0: வி. பி. ராமச்சந்திரா, சக்கரபாணி.

ஆக ரூ. 16—14—0

காரைக்கால், அகில இந்திய சர்க்கா சங்கம் ஸ்ரீ ஆர். சுப்ரமணியம் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஆர். சுப்ரமணியம், ராமநாத அய்யர்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. எம். ஜம்புகேச பிள்ளை, என். கேசவய்யர், கே. மாரிமுத்துப் பிள்ளை, பி. ஸ்ரீனிவாச அய்யர், வி. டி. சோமசுந்தரம் பிள்ளை, வி. அய்யாதுரை, என். சானிந்திரீ, வி. என். கருணாநிதி தேசிகர், ஓ. டி. ஸ்ரீனிவாசம் பிள்ளை. ஆக ரூ. 13—0—0

பெங்களூர், ஸ்ரீ என். ராமதுரை மூலம்:

ரூ. 1 8 0: ஸ்ரீ என். ராமதுரை; ரூ. 1 0 0: ஸ்ரீமான்கள் வி. ஜெயராமன், ஆர். கிருஷ்ணஸ்வாமி, வி. என். ஷண்முகம், எச். வேணுகோபாலன், என். சௌரிராஜலிங்கம், ஆர். சத்தியநாராயணன், டி. என். கோபால கிருஷ்ணன். ஆக ரூ. 8 8 0

புதுப்பட்டி, ஆ. கி. ச. சட்டமுத்துச் செட்டியார் அண்டு பிரதர்ஸ் மூலம்:

ரூ. 1 8 0: ஸ்ரீ ஆ. கி. ச. சட்டமுத்துச் செட்டியார் அண்டு பிரதர்ஸ்; ரூ. 1 0 0: ஸ்ரீமான்கள் அ. ம. அ. மலையாண்டி செட்டியார், அ. மு. ப. அலங்காரம் செட்டியார், அ. சுப்பையா செட்டியார், பி. கே. மாயாண்டி அண்டு பிரதர்ஸ், சொ. மாணிக்கம் செட்டியார், ஏ. ரு. ராமன் செட்டியார்; 0 12 0: ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 8 4 0

சத்யமங்கலம், அகில பாரத சர்க்கா சங்கம், காதி வஸ்திராலயம் ஸ்ரீ கே. பி. ராஜகோபால் மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள், கே. பி. ராஜகோபால், என். என். சுப்பையா, என். ஏ. அங்கப்ப செட்டியார், என். பாலசாமி செட்டியார் ரூ. 3—12—0. ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 7—12—0

பூனா, ஸ்ரீ ஏ. ஜி. பாலசுப்ரமணியன் மூலம்:

ரூ. 1 4 0: ஸ்ரீ ஏ. ஜி. பாலசுப்ரமணியம்; ரூ. 1 0 0: ஸ்ரீமான்கள் கி. பொ. விசுவநாதன், என். ஆர். விசுவநாதன்; ரூ. 1 12 0: ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 5 0 0

பெருந்துறை, கல்கி ஏஜண்ட், ஸ்ரீ பி. எம். நடராஜ முதலியார் மூலம்:

ரூ. 1 0 0: ஸ்ரீமான்கள் பி. எம். நடராஜ முதலியார், இ. பி. வெங்கடாசல முதலியார், டி. பி. லக்ஷ்மண முதலியார், ஆர். ஏ. என். அங்கப்ப முதலியார். ஆக ரூ. 4 0 0

ஏற்கெனவே வசூல்	ரூ. 9505—15—8
ஆக மொத்தம்	ரூ. 12803—9—4

யார், என். வி. அருணாசலம் செட்டியார், வி. வீரமுடி செட்டியார், என். கடலை முத்துக் கோனார், ஆர். எம். சங்கர நாராயணன் செட்டியார், ஆர். ஷண்முகம் செட்டியார், ஆர். நயினார் செட்டியார், என். கே. கடலை முத்துச் செட்டியார், வி. நயினார் செட்டியார், எம். சேதுராமன் செட்டியார், என். பெருமாள் நாடார், பி. சங்கர நாடார், இ. சுப்பையா நாடார், ஆர். எம். புலமாடன் செட்டியார். ஆக ரூ. 80—0—0.

இலங்கை, கலஹா, ஸ்ரீ வை. பெருமாள் பிள்ளை மூலம்:

ரூ. 11—11—0: ஸ்ரீ வை. பெருமாள் பிள்ளை; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் என். பி. முத்துசாமி பிள்ளை, மு. அ. க. ஆண்டி செட்டியார், ஏ. கே. அருணாசலம் பிள்ளை, நா. சோ. அய்யாசாமி ஆச்சாரி, செ. மு. முத்துசாமி பிள்ளை, எம். எம். மரி முத்துப் பிள்ளை, என். கருப்பண்ண பிள்ளை; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஏ. பி. எம். கே. ஆர். கருப்பப் பிள்ளை சன்ஸ், என். என். பி. சிதம்பர நாடார், எம். கே. குமாரசாமி பிள்ளை, ஆர். ராமசாமி நாடார், ஆர். என். ஆர். எம். ராமையா ரெட்டி & கோ., க. ப. நா., என். ரத்தினராஜ் நாடார், ஏ. ஆர். எம். ராமையா, பெ. சிதம்பர நாடார், பி. கே. கந்தசாமி பிள்ளை, பி. மாரியா பிள்ளை, கே. எம். முத்தையா பிள்ளை, ஏ. என். சுப்பையா பிள்ளை & கோ., கே. முத்துசாமி பிள்ளை, கே. செல்லையா பிள்ளை. (மணியார்டர் கமிஷன் ரூ. 1—11—0 நீங்கலாக)

ஆக ரூ. 75—0—0

நேமம், ஸ்ரீமதி என். நீலா அம்மாள் மூலம்:

ரூ. 5—0—0: நேமம், ஸ்ரீமதி நீலா அம்மாள்; ரூ. 3 0 0: ஸ்ரீமான்கள் டாக்டர் ஆர். சுப்ரமணிய அய்யர், டாக்டர் ஆர். கிருஷ்ணசாமி, என். என். எச். பாடசாலை உபாத்தியாயர்கள்; ரூ. 2—0—0: ஸ்ரீமதி சுப்ரமணியன், ஸ்ரீ ஓ. ஆர். முத்துசாமி அய்யர், ஸ்ரீமதி ராஜம்மாள் ஜம்பு; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். கல்யாணசுந்தரம் அய்யர், பஞ்சாயத்து போர்ட் பாடசாலை உபாத்தியாயர்கள், ஓ. என். வால்மீகிநாத அய்யர், கே. என். மணி அய்யர், டி. என். சுந்தரம், கோவிந்த ஜனீராவ், பி. என். ராஜகோபால அய்யர், என். தங்கராஜ நாயுடு, என். கோபால்சாமி, பி. வி. மகாதேவன், டி. கிருஷ்ணமூர்த்தி, ஆர். பால கிருஷ்ணன், என். ராமபத்திரன், எம். நாகராஜன், என். என். ராமச்சந்திரன், என். நீலா, என். கே. வெங்குசாமி, அப்பாவு, ஆர். ஜம்பு அய்யர், பி. கே. நாராயணி, என். சுவுந்தரநாயகம், தம்பாம்பாள் நடேசன், ஆர். கே. ஞானம்பாள், எம். என். சுப்ரமணியன், டி. சுப்பய்யர், என். ஸவிதா, ஓ. என். கிருஷ்ணய்யர், பி. வால்மீகிநாதன், ஓ. நா. சுந்தரம், ஓ. ஜி. கோபாலராமன், ஜி. ராமச்சந்திரன், கணபதி ஐயர், என். கே. ராஜகோபாலாச்சாரி, ஓ. டி. பாபு ராவ், ஸ்ரீமதி டேவிட், ஸ்ரீமதி அகிலா நடராஜன், என். என். கிருஷ்ணமூர்த்தி, என். என். சுப்ரமணியன், ஸ்ரீமதி சிவகாமி நடேசன், ஸ்ரீமதி கமலா நடராஜன்; 10-0-0: ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 70—0—0

உதகமண்டலம் ஏ. ஜி. என். ஏ. காதி வஸ்திராலயம் மானேஜர் மூலம்:

ரூ. 5 0 0: ஸ்ரீ டி. என். ராஜகோபால், ஸ்ரீமதி ராஜராஜேஸ்வரியும் மகாலக்ஷ்மியும் பாரதியும்: ரூ. 2 0 0: ஸ்ரீமான்கள் இ. ஜே. ராமச்சந்திரன், பி. பொன்னு ஆசாரி, டி. காளி கவுடர்; ரூ. 1 4 0: ஸ்ரீ நஞ்சையா கவுடர்; ரூ. 1 0 0: ஸ்ரீமான்கள் எச். அந்ஜா கவுடர், டி. கே. ராஜு, ஜே. ஆண்டி, மாதா கவுடர், டி. என். ராமா கவுடர், டி. பல்லா கவுடர், எம். லிங்கையா, ஜி. தஞ்சா கவுடர், எம். என். நடராஜன், கே. மடியா கவுடர், பு. கோபிநாத ஐயர், வரதராஜ ஐயர், ஜே. எம். ராமன், டி. கே. மாதன், ஜே. மாதா கவுடர், கே. என். மேனன், அ. கந்தராஜ் செட்டியார், என். உச்சி, ஜி. மாதன், எம். ராமா கவுடர், எம். சின்னசாமி, என். ஆர். கோவிந்தராஜன், எம். நடராஜன், ஏ. நாகன், ஆர். கிருஷ்ணசாமி, எம். ஏ. அம்பரோஸ், ஜே. பி. விஜயகராவ்; ரூ. 10 0 0. ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை: (தபால் செலவு நீங்கலாக)

ஆக ரூ. 54 0 0

நாகபுரி, ''கல்கி'' ஏஜண்ட் ஸ்ரீ கே. ஏ. ராவ் அவர்கள் மூலம்:

ரூ. 2 0 0: ஸ்ரீமான்கள் ஜி. என். டி. சாரி, என். கே. எக்ஞநாராயணன், கே. கோபாலகிருஷ்ணன், ஆர். சங்கர நாராயணன், டி. ஆர். சதாசிவம், வி. ஜி. ராமசாமி ஐயர், கே. ஏ. ராவ், ஆர். வெங்கட ராமன். ரூ. 1—4—0: ஸ்ரீமான்கள் ஜி. பி. ராமன், என். சுப்பிரமணியன், சே. ரா. கிருஷ்ணன், என். வைத்தியநாதன் & பிரதர், என். கே. நாராயணன். ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. கணபதி, வி. ஆர். ராவ், கே. ஜி. ராவ், பி. ஆர். செல்லம், ஜி. கோவிந்தராஜன், என். ஜகன்னாத ஐயங்கார், வி. பால சுப்ரமண்யம், பி. ராமசாமி, ஏ. என். சதாசிவ ஐயர், கே. என். ராஜம், என். வெங்கடாசலம், என். வி. ஏ. நாராயணன், பி. என். நீலகந்த் அண்டு கம்பெனி, பி. என். கிருஷ்ணன்.

ஆக ரூ. 36—4—0

காங்கயம், கல்கி ஏஜண்டு ஸ்ரீ கே. ஆர். ரங்கஸ்வாமி மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ கே. வெங்கடாசலம் பிள்ளை; ரூ. 3—0—0: ஸ்ரீ கே. ஆர். ரங்கசாமி அண்டு பிரதர்ஸ். ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் கே. எம். கோபால் செட்டியார், ஆர். என். நாகராஜன், மு. என். லக்ஷ்மணன், கே. பி. ஆர். சாமநாதன், ஜே. சுப்ரமணியம், மு. பி. குப்புசாமி. ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் சோமசுந்தரம், வி. பி. பழனிசாமி, பி. என். ஏ. ஆர். அண்டு சன்ஸ், கே. பி. சரஸ்வதா, கே. ஏ. இப்ராஹிம், நடராஜன், ராஜ கோபால் செட்டியார், என். கிருஷ்ணன், ஆர். பழனிசாமி, எம். சுப்பிரமணியம், ஆர். பி. பழனிசாமி, கே. துரைசாமி கவுண்டர், என். நடராஜன். ரூ. 0—4—0: கே. பழனியப்பன். ஆக ரூ. 33—4—0.

சிவகங்கை, ''கல்கி'' ஏஜண்டு ஸ்ரீ கௌரி & கம்பெனி ஸ்ரீ என். வி. என். மணி மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ கௌரி அண்டு கம்பெனி, ரூ. 3-0-0: ஸ்ரீமான்கள் மு. சாத்தப்ப செட்டியார், வி. கே. என். கண்ணப்ப செட்டியார், ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ராம. கருப்பையா செட்டியார், வி. ஆறுமுக நாடார், டி. என். முத்தையா சேர்வை, ஏ. ஆர். என். உயர்தர எலிமெண்டரி பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், என். வி. என். மணி, ராம. அருணாசலம் செட்டியார்; ரூ. 1—4—0: ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யா சாலை ஆசிரியர்கள் ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ருப. அரு மு

நகர் ஸ்டோர்ஸ், வி. எஸ். வீரப்ப செட்டியார், ஏ. எம். அத்தநாரி செட்டியார், வி. எஸ். ஜி. ராமநாதன், கே. கிருஷ்ணப்பசெட்டியார், ஏ. ஆர். வேலப்பன், ஸ்ரீ மீனாட்சி சுந்தரி ஸ்டோர்ஸ், கே. எஸ். வி. & ஸன்ஸ், எஸ். எஸ். வி. பழனியப்ப செட்டியார் & ஸன்ஸ், வி. ரங்க செட்டியார், அப்பாச்சி முதலியார், கே. ஏ. ஆர். பழனியப்ப செட்டியார், ஆர். ஏ. கே. ஜி. பி. & கோ., கே. ராமய்ய கௌண்டர் ஸன்ஸ் & கோ., வி. எஸ். வெங்கட சுப்ரமணியம், சுப்பரத்தினம். ஆர். பி. எஸ். நாயர். ஏ. பழனிசாமி.

ஆக ரூ. 161—0—0.

அவுரங்காபாத் ஸ்ரீ ஆ. வி. கிருஷ்ணமூர்த்தி —ஸ்ரீ பி. நா. ராமநாதன் மூலம்:

ரூ. 25—0—0: ஸ்ரீ ராமனி; ரூ. 12—14—0: ஸ்ரீ கெ. எஸ். துரைசாமி ஐயர்; ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் பி. நா. ராமநாதன், கே. கிருஷ்ண சாமி ஐயர், மணி அய்யர், டாக்டர் எஸ். எஸ். கிதின்தியான்; ரூ. 5—0—0 : எஸ். நாராயண ஸ்வாமி அய்யர், சா. மு. சுப்பிரமணியன்; ரூ. 3—0—0: ஸ்ரீ பூ. வே. கல்யாணசுந்தரம்; ரூ. 2—0—0 : ஸ்ரீமான்கள் எஸ். ஈசுவரன், கி. ர. லட்சுமணன், டி. எஸ். ரங்கநாதன், கெ. ராஜகோபாலய்யர், ரா. சுப்பிரமணியன், மீ. சே. ராமலிங்கம், க. சொக்கலிங்கம், கெ. சுந்தரராஜன், ரா. சாமாமிருதம், ஜி. ஸ்ரீனிவாஸமூர்த்தி, ப. வே. சஞ்சீவிராம சர்மா; ரூ. 1—10—0 : ஸ்ரீ கணபதி அய்யர் : ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் ப. குணசேகர நாயுடு, ஜனகலக்ஷ்மி நரசிம்மாச்சாரி, கே. வி. சேஷாத்ரி, பரிநாதன், கே. கிருஷ்ண ஸ்வாமி, பாலசுப்ர மணியன், சுப்பிர மணிய அய்யர், மு. துரைசாமி, மு. சந்தானம், நா. விருத்தகேசுவரன், சதாசிவராவ், வெங்கடேசுவரன், வி. எச். சுப்பராவ், ஆர். ஸ்ரீனிவாஸன், ரா. ராமாநுஜம், ம. க. சுப்பிர மணியன், எஸ். சாம்பசிவன், பி. கெ. சுப்பிர மணியன், பி. எஸ். பரமேசுவரன், அ. ராம சேஷன், கே. வி. ராமாநுஜாச்சாரி, பி. நாரா யண அய்யர், எஸ். துரைசாமி பிள்ளை, அ. ஜானகிராமன், ப. வசந்ராவே, எஸ். வி. ராதா கிருஷ்ணன், வி. நாராயணஸ்வாமி, நா. கிருஷ்ணய்யர், பி. வெங்கடராம அய்யர், எஸ். சுப்பராயுடு: ரூ. 5-8-0: ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 150—0—0.

பம்பாய் நேவல் அக்கௌண்ட்ஸ் ஆபீஸ் ஸ்ரீ கே. ஆர். நாராயணன் மூலம்:

ரூ. 5—0—0 : ஸ்ரீமான்கள் கே. ஆர். நாரா யணன், எஸ். சுந்தரம், வி. கே. ஜகன்னாதாச் சாரி. ரூ. 3—0—0 : ஸ்ரீமான்கள் எஸ். பத்ம நாபன், கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி, வி. ராக வன், ஆர். கிருஷ்ணன், பி. லக்ஷ்மிநாரா யணன், பி. சங்கரன், சேது. ரூ. 2—0—0 : ஸ்ரீமான்கள் டி. கே. ராஜம், எம். எஸ். அபயம், எஸ். கோவிந்தராஜன், வி. ராஜலிங்கம், எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஆர். பத்மநாபன், எஸ். ராம சாமி, எம். கிருஷ்ணசாமி, ஆர். பி. சங்கர குருப், எச். சுந்தரம், ஆர். நாராயணன், வப்பை, பி. பி. ராஜகோபாலன், டி. ஜி. ராஜ கோபாலன், பி. விஸ்வநாதன், எம். வி. வைத்தியநாதன், டி. எஸ். ராமரத்தினம், டி. ஜி. ஹரிஹரன், எஸ். சிவசுப்ரமணியம், பி. ஜி. ஸ்ரீனிவாசன், ஏ. வி. கிருஷ்ணன், ஜே. எஸ். சர்மா, ந. கு. அனந்தநாராயணன், எஸ். வெங்கடேசன், வி. எம். கார்த்திக், டி. ஏ. சுந்தரம், எஸ். எஸ். கோதாரே, ஆர். எஸ். சாரங்கநாத், எச். எஸ். ராமசாமி, பி. ஆர். ஜக தீசன், பி. ஆர். சக்ரபாணி, ஜி. ராமசுப்ரமணி யம், இ. நடராஜன், வி. ராகவன், ப. சு. ஹரி ஹரன். ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் கே. எஸ். ராகவன், டி. எஸ். சுவாமிநாதன், எஸ். வெங்கடராமன், எச். எஸ். ஹரிஹரன், ஆர். சங்கரன், ஜி. வெங்கடராமன், ஒரு அன்பர், கே. எஸ். நாராயணசாமி, கே. சக்கரவர்த்தி, ஸ்ரீனிவாசராவ், வி. கே. சார், ஒரு அன்பர், எஸ். பாலசுப்ரமணியன்.

ஆக ரூ. 119—0—0

கர்க்கி ஸ்ரீ எஸ். வி. நடராஜன் மூலம்:

அம்யூனிஷன் பாக்டரி ரூ. 70—14—0-க்கு விவரம்:

ரூ. 3—0—0 : ஸ்ரீமான்கள் வி. சங்கர், கே. சத்தியமூர்த்தி; ரூ. 2—0—0 : ஸ்ரீமான்கள் எம். ரங்கநாதன், ஆர். பி. ஹரன்; ரூ. 1—0—0; ஸ்ரீமான்கள் கே. எஸ். கிருஷ்ணசாமி, எஸ். தியாகராஜன், எச். நாமன், டி. ஏ. ஸ்ரீசைலம், எஸ். ஜயராமன், வி. விஸ்வநாதன், வி. ஆர். சாம்பசிவன், எஸ். மகாதேவன், பி. வி. ஜயச் சந்திரன், எஸ். நாராயணசாமி, எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி, வி. எம். ராமன், எஸ். சுந்தரேசன், ஆர். சுவாமிநாதன், ஆர். நட ராஜன், கே. நனபால், ஜே. வி. முகர்ஜி, எஸ். கே. முகர்ஜி, எஸ். டி. ராவ், ஜே. டபிள்யூ. ப்ரீமென், ஒரு அபிமானி, வி. சங்குண்ணி, பி. கே. சுரேந்திரநாத்; ரூ. 37—14—0 ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை.

அம்யூனிஷன் பாக்டரி அக்கௌண்ட்ஸ் ஆபீஸ் ரூ. 26 0 0 க்கு விவரம்:

ரூ. 2—0—0 : ஸ்ரீ வி. சிவபாதம்; ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் கே. எஸ். ரத்தினம், எஸ். கே. வைத்தியநாத ஐயர், வி. டி. பாஷா, எஸ். இ. சுந்தரராஜன், ஆர். வி. சுப்ரமணியம், எம். ராமசாமி, ஏ. வெங்கடாச் சார், ஆர். எஸ். மணி; ரூ. 16—0—0 ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை.

சீப் இன்ஸ்பெக்டரேட் ஆப் மிலிடரி எக்ஸ்ப்ளோஸிவ்ஸ் ரூ. 21 8 0க்கு விவரம்:

ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் கே. எஸ். ரங்க சாமி, கே. எஸ். வரதாச்சாரி, கே. நாராயண சாமி, எஸ். வி. எஸ். ரத்தினம், வி. ஆர். கல் யாணசுந்தரம், டி. ஆர். வெங்கடேசன், எஸ். பி. சுந்தரம், வி. எஸ். பாலகிருஷ்ணன், ரூ. 13—8—0 ஒரு ரூபாய்க்கு உட்பட்ட நன் கொடை. (தபால்செலவு 1—4—0 நீங்கலாக)

ஆக ரூ. 117—2—0.

கொத்தமங்கலம், நேரு கிளப் காரியதரிசி ஸ்ரீ ராம நாராயணன் மூலம்:

ரூ. 11—0—0 : ஸ்ரீமான்கள் நா. அரு. அருணாசலம் செட்டியார், ராம நாராயணன், அரு. சி. சின்னையா செட்டியார், ராம. அரு. ராம. ராமநாதன் செட்டியார்; ரூ. 10—0—0 : ஸ்ரீமான்கள் சா. மு. ராம. அ. வெ. அருணா சலம் செட்டியார், சி. அ. சி. அருணாசலம் செட்டியார், லெ. பெரி; ராமு. மு; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் பி. எஸ். சுவாமிநாதன், ப. சி. கா. லட்சுமணன் செட்டியார், ப. சி. லெ. பழனியப்ப செட்டியார், லெ. சாத் தப்பன், லெ. பெ. வெங்கடாசலம் செட்டியார்; ரூ. 2—0—0: ஸ்ரீ. ராம. ராம. ராமநாதன்.

ஆக ரூ. 111—0—0

கொழும்பு தினசரி ஏஜண்ட் ஸ்ரீ எஸ். அருணாசலம் செட்டியார் மூலம்:

ரூ. 25—0—0: ஸ்ரீ எஸ். அருணாசலம் செட்டியார், ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் பாலகிருஷ்ண -கேசவன், பி. ஏ., அ. அபிராமன் செட்டியார், கே. அருணாசலம் செட்டியார், வி. நாகலிங்கம் செட்டியார், கே. நாகமணி நடராஜா, ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எம். கே. சுந்தரசாமி செட்டியார், எஸ். பெருமாள் செட்டி

பிள்ளை, கே. எம். மதார் சாகிப், ஏ.எம்.என். எம். சலாவுதீன் மூலம்):—

ரூ. 75—0—0: ஸ்ரீ பி. டி. நாறும் பிள்ளை; ரூ. 26—5—0: ஸ்ரீ ஏ. சூரியநாராயண பிள்ளை ரூ. 25—0—0: ஸ்ரீ ராம.மு.நா. அ. அடைக்கப்ப செட்டியார்; ரூ. 25—0—0: ஸ்ரீ ப. மு. சே. சேவுகன் செட்டியார்; ரூ. 25—0—0: ஜனாப் என்.வி.டி. சம்சுதீன் ராவுத்தர்: ரூ. 21—0—0: ஸ்ரீ ஆர். பி. புன்னைவனம் பிள்ளை; ரூ. 20—0—0: ஸ்ரீ சி. என். பிள்ளை; ரூ. 13—0—0: ஸ்ரீ கே. கே. எம். சாமி அண்டு கோ.

ரூ. 11—0—0: ஸ்ரீமான்கள் கே.எம். முகைதீன் அன் கோ, எஸ். வி. மணி, சி. என். வெங்கிட்டராமய்யா, டி. எம். எஸ். சண்முக சுந்தரம் அன் கோ, ஆர். எம். முத்துசாமி நாயுடு, எம். சாமிநாதப் பிள்ளை, அ.சி. சிவன் பிள்ளை, ரா. ம. ப., அன் கோ, டி.எஸ். பி. சுப்பையா பிள்ளை அன் கோ, கே. எஸ். முருகேசன், சி. வ. அருணாசலம் பிள்ளை, லக்ஷ்மி ஸ்டோர், ஜி. டபிள்யூ.டி. அன் கோ, கமால்தீன் அன் கோ, அ.ப. பக்கீர் முகம்மது ராவுத்தர் அன் கோ, ஏ. கே. பி. கோவிந்தசாமி செட்டியார் அன் கோ, ஏஎம். என்.எம். முகம்மது சலாவுதீன், கே. பி. பெரியநாயகம் பிள்ளை, வி. டி. வி. தெய்வநாயகம் பிள்ளை அன் கோ, ஏ. ராமசாமி, வி. எஸ். சண்முகம் பிள்ளை, ஏ. சுப்பையா, ராஜா பிரஸ், பி.என். எ. முத்துவிநாயகம் பிள்ளை அன் கோ, செ.க. முத்தையா பிள்ளை, உடுப்பி லாட்ஜ் ஆர். எஸ். முத்து செட்டியார்.

ரூ. 6—0—0: ஸ்ரீ ஆ. கந்தசாமிப் பிள்ளை.

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எம். ஸ்ரீரங்கநாதன், ஏ. சுப்பிரமணியன், எஸ். வி. ஏ. ஹரிச்சந்திரா அன் கோ, கே. பி. சுந்தரம், ஏ. சி. நடராஜ், எஸ். சிவசுப்பிரமணிய பிள்ளை, டி. என். முத்துசாமி பிள்ளை, சரவணன் அன் கோ, ஏ. சுப்பையா பிள்ளை, எஸ். வி. எஸ். நயினார் பிள்ளை, டி. காந்திமதிநாதன், எஸ். என். எம். முகம்மது இப்ராகிம், வ. த. வே. நம்பெருமாள் பிள்ளை, இ. கா. கந்தசாமி பிள்ளை, நாகையன் ஸ்டோர், ஆர். எஸ். வி. நல்லசிவன் பிள்ளை, பி. சிதம்பரம், எஸ். பெரியசாமி, எஸ். சோமசுந்தரம், கே. கே. முகைதீன் பிச்சை, எஸ். இ. இப்ராஹிம் சாகிப், மாலிக் அன் கோ, எம். எஸ். டி. கே. எம். பி. அன் கோ, வி. பாபு நடராஜ், எம். அருணாசல முதலியார், ஆ. நல்லசிவன் பிள்ளை, எம். எஸ். எஸ். எம். கணேஷ் ஷண்முகசுந்தரம் பிள்ளை.

ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எம். கருப்பசாமி, ஆ. க. ஷண்முகம் பிள்ளை, ஆ. வேலாயுதம் பிள்ளை, எம். ஷண்முகம், ஏ. வில்வநாதன், அப்துல் காதர், கே. எம். முகம்மது சேக் தாவூது, எம். பீரான், ஏ. கே. மீரான், சி. அ. கனகசபாபதி பிள்ளை, ஏ. என். சந்திரன், எஸ். ஏ. நல்லசிவன் பிள்ளை, எம். எஸ். வி. நல்லசிவன் பிள்ளை, எஸ். சொக்கலிங்கம் பிள்ளை, எம். பரமசிவன் பிள்ளை.

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் அ. குமாரசாமி பிள்ளை, சு. வீரபாகு, ஆர். எஸ். எஸ். சண்முகம் பிள்ளை, தெ. அய்யம்பெருமாள் பிள்ளை, ஆர். சுப்பிரமணியம், வி. எஸ். நெல்லையப்ப பிள்ளை, எம். சி. பாலசிதம்பரம், ஏ. ஆர். எஸ். திருமேனிநாத நாடார், எஸ். நடராஜ பிள்ளை, ஏ. லட்சுமண பிள்ளை, வி. இசக்கியா பிள்ளை, கே. சொக்கலிங்கம் பிள்ளை, சு. க. ஆ. கந்தப்ப பிள்ளை, ஆர். எம். எஸ். சுப்பையா பிள்ளை & கோ., எஸ். சங்கர நாராயண பிள்ளை & கோ., டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை, எஸ். சூரிய நாராயணன், டி. எம். சுப்பிரமணிய பிள்ளை, எஸ். செந்திலாறுமுகம் பிள்ளை, கே. சிவசுப்பிரமணியம், பி. முத்துசாமி நாயுடு, தி. மகாராஜன், எஸ். எம். நெல்லை நாயகம், கே. வீரபாகு, எஸ். எம். சுந்தரம், மு. சி. மு. நா., கே. எம். மீரான்கான், கே. ஏ. அப்துல் ரஹமான், எம். சுப்பையா நாயுடு, டி. எஸ். சுப்பையா, டி. எஸ். மாணிக்கம், கே. அருணாசலம் பிள்ளை, டி. அருணாசலம் பிள்ளை, எஸ். இசக்கியா பிள்ளை, எம். திருப்பதி, எம். ஏ. கிருஷ்ணன்.

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் சு. ஆ. பரமசிவம் பிள்ளை, வி. பழ. கரு. பி. அ., கே. எம். மீரான், கே. எம். சிந்தாமதார், செ. சூரிய நாராயண பிள்ளை, பி. பி. எம். ராமலிங்க நாடார், எம். வீரபாகு பிள்ளை, எஸ். கந்தப்ப பிள்ளை, கணேஷன் & கோ., வி. முருகானந்தம், எஸ். கணபதியா பிள்ளை, ஆர். ஆராவமுதன். ஆக ரூ. 799 8 0

திருப்பூர், கல்கி ஏஜண்டு ராஜன் & ராஜன் கம்பெனி மூலம்:

ரூ. 11—0—0: ஸ்ரீ டி. ஒ. ஆஷர்; ரூ. 6-0-0: ஓ. கே. எஸ். எம் & கோ., ஓ. கே. எஸ். & கோ., அருணாசலம் & கோ., ஸ்ரீமான்கள் கே. ஆர். சன்னமூர்த்தி கௌண்டர், ஏ. ஆர். சாதுராமன் செட்டியார், எ. முருகேச முதலியார் & எம். முத்துசாமி செட்டியார், எஸ். ஆர். பி. முத்துசாமி செட்டியார், டி. எஸ். கே. பிரதர்ஸ்; ரூ. 5—0—0: ராஜி பிரதர்ஸ் காரியாலயத்தார்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் ஜி. கே. பெரியசாமி, கல்லி செட்டியார்; ரூ. 2—8—0: ஸ்ரீமான்கள் ஜி. வி. சுப்ரமணியன், ஜி. வி. கிருஷ்ணன்; ரூ. 2-0-0: ஸ்ரீமான்கள் டி. எஸ். டி. பி. சன்ஸ், எஸ். எம். ஆர். ஏ., பி. கே. எஸ். எம். எஸ். முத்துசாமி செட்டியார், எம். அங்குசாமி செட்டியார், ரத்தினசபாபதி, கபே தி ஜுவலி ஸ்டோர்ஸ், ஆர். காசிவிஸ்வநாதன், ஒரு அபிமானி, எம். கே. எஸ். & கே. ஆர். ஆர். டி., பி. அருணாசலம், கே. சொக்கலிங்க முதலியார் & ஸன்ஸ், பி. ஜி. சின்னு ராவ் & கோ., ஏ. பி. அருணாசலம் செட்டியார் & ஸன்ஸ், கே. ஏ. ஆர். ராஜலிங்கம் செட்டியார், எஸ். ஆர். கணபதி செட்டியார், ஆர். சின்னசாமி அய்யர், ஏ. பழனியப்ப முதலியார் & ஸன்ஸ், ஜம்னா தாஸ் சேட்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆர். சாரங்கபாணி செட்டியார், வி. எஸ். ராதாகிருஷ்ண செட்டியார், பி. ஆர். பி. ஸன்ஸ், எஸ். வி. கிருஷ்ண அய்யர், கே. சங்கரன், கே. எச். கிருஷ்ண அய்யர், பி. ஆர். ராமச்சந்திர அய்யர், டி. முத்துசாமி செட்டியார், எம். மீனாக்ஷிசுந்தரம், ஹனிபா, பி. கே. எஸ். ஆர். எம். & கோ., ஏ. பொன்னுசாமி, கே. எஸ். குமாரசாமி முதலியார், எம். காளியப்ப கௌண்டர், எம். முத்துசாமி கௌண்டர், கே. அவனாசிலிங்கம், ஜோதிலிங்கம், எஸ். கிருஷ்ணசாமி செட்டியார், கே. தர்மலிங்கம், ஆர்ச்சந்த் குலாப்சந்த் & கோ., ஏ. எஸ். பழனிசாமி, வி. வி. ராமகிருஷ்ண அய்யர், வி. எஸ். பி. குழந்தையப்ப செட்டியார் & கோ., எஸ். எம். வி. ஆர். வி. சுப்பண்ண செட்டியார், கே. சபாபதி பண்டாரம், ஆர். சுப்ரமணியம், எஸ். விஸ்வம், வி. பி. முத்தப்ப செட்டியார், வி. அருணாசலம் செட்டியார், நடராஜா கபே ஸ்டோர்ஸ், தனலக்ஷ்மி கபே ஸ்டோர்ஸ், கே. எம். ஏ. எஸ். எம். & ஸன்ஸ், எம். எஸ். முத்துசாமி செட்டியார் & கிருஷ்ணசாமி செட்டியார், ஆர். வி. சொக்கலிங்க முதலியார் & கோ., கே. எம். ஏ. ஆர். & கோ., ஸ்ரீ குமரன்

பாரதியார் ஞாபகார்த்த நிதி

சென்ற வாரத்து வசூல்

* பம்பாய்த் தமிழன்பர்கள், ஸ்ரீ வெ. ராம கிருஷ்ணய்யர் மூலம் 501 0 0

மெஸர்ஸ் டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்டு சன்ஸ் 100 0 0

திருச்சி நியூ ஹாஸ்டல் மாணவர்கள் 83 6 0

ஸ்ரீ எஸ். சுப்பையா, புரொப்ரைட்டர், கணேஷ் கம்பெனி, தியாகராயநகர் 51 0 0

நாட்டரசன் கோட்டை, எஸ். ஆர். எம். ஹைஸ்கூல் உபாத்தியாயர்களும் மாணவர்களும் 25 12 0

ஸ்ரீ வீ. முத்து பழனியப்ப செட்டியார், கம்போடியா 25 0 0

ஸ்ரீ டி. கே. கிருஷ்ணசாமி, ஸ்ரீ சக்தி நாடகசபை, நாகப்பட்டணம் 25 0 0

சென்னை வைசிய ஹாஸ்டல் தமிழ் மாணவர்கள் 24 12 11

ஸ்ரீ எம். முருகப்ப செட்டியார், ஹனேயி 20 0 0

ஸ்ரீ எம். வி. வள்ளியப்பச் செட்டியார், கம்போடியா 15 0 0

ஸ்ரீ ஜி. வி. பட்டாபிராமன், பி. ஏ., தெப்பக்குளம், திருச்சி 15 0 0

கோத்தமங்கலம், செல்வ விநாயகர் பாடசாலை மாணவி மாணவர்கள் மூலம்: 14 5 0

வெள்ளாள ஹாஸ்டல் மாணவர்கள், வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி 11 2 0

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் டி. வி. நாராயணசாமி, கல்கி ஏஜண்டு, கரூர்; ஏ. எஸ். ராஜன், கல்கி ஏஜண்டு, கோவில்பட்டி; கோவை, யூனியன் ஹைஸ்கூல் ஆசிரியர்கள்; கே. என். வெங்கடராம செட்டி, திருச்சி; பி. ரங்கசாமியும், டி. ஆர். ராமசாமியும், குப்பம், சித்தூர்; ராஜகுருநாதன், எஸ்ஸம்பள்ளி ஜமீன்; வி. எஸ். ஜி. ரத்னம், அட்வகேட், கல்கத்தா; ஆர். வி. கமலமும், பி. ருக்மணியும், திருச்செங்கோடு; டி. எஸ். வி. சுப்பிரமணிய ஐயர், கழுகுமலை; ஸ்ரீமதி சுவர்ணாம்பாள், ("குகப்பிரியை") மயிலாப்பூர்; புரொபஸர் கே. ஆர். ஆர். சாஸ்திரி, அனகாபாத்; ஜானகிநாதன், திண்டுக்கல்; ஆர். வி. கோபால், திருச்செங்கோடு; ஏ. சங்கர நாராயண ஐயர், எர்ணாகுளம்; கே. கோபாலன் செட்டியார் & பிரதர்ஸ், பொள்ளாச்சி. ஆக ரூ. 150 0 0

ரூ. 8—0—0: ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். சீனிவாசன், பெங்களூர்; ரூ. 7—12—0: ஆரணி டெக்னிகல் இன்ஸ்டிடியூட் மானேஜர் ஆர். கிருஷ்ணமூர்த்தியும் அவரது மாணவர்களும், திருவண்ணாமலை; ரூ. 6—6—0: அகில இந்திய சர்க்கா சங்கக் காதி உற்பத்திசாலை, தம்பிபூர்; ரூ. 6—0—0: ஸ்ரீ பி. வி. அகிலாண்டம், தென்காசி. ஆக ரூ. 28 2 0

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் வி. ஜி. நரசிம்மன், பங்களூர்; எஸ். சீனிவாசன், பங்களூர்; எஸ். தங்கம், மண்டபம் காம்ப்; டி. கந்தசாமி, துரைச்சாமிபுரம்; லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி, கோட்டயம்; எஸ். கே. கார்த்திகேசு, கல்கி ஏஜண்டு, பாயிண்ட் பெட்ரோ, இலங்கை; ஐ. காசி, ஹயில்தார் கிளார்க்; எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஜப்பல்பூர்; எம். ஆர். கணபதி, கொள்ளன்கொவில்; ஒரு அனுதாபி, தஞ்சாவூர்; பி. பி. பாலசுப்பிரமணியம், சிட்டகாங்; எஸ். விஸ்வநாதய்யர், பாயிண்ட் பெட்ரோ, இலங்கை; வி. ராமகிருஷ்ண செட்டியார், கொழும்பு; எம். ஜி. நடேச அய்யர், உறையூர்; பி. என். ராமச்சந்திரன், பங்களூர்; டி. ஆர். மகாதேவன், சென்னை; மலையாள தம்பதிகள், கோவை ஜில்லா; ஆர். பத்மா, புதுப்பாளையம். ஆக ரூ. 90 0 0

ரூ. 4—0—0: ஸ்ரீமதி உலகநாயகி அண்ணி, திருநெல்வேலி; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எச். பாலசுப்பிரமணியம், அம்பாசமுத்திரம்; எஸ். ஆர். சந்திரன், பூந்தோட்டம்; டி. லக்ஷ்மி நரசிம்மன், எட்டயபுரம்; வி. சுப்பையா, பங்களூர்; ரூ. 2—12—0: ஸ்ரீ ஏ. முகம்மது மொயாக், சேலம்; ரூ. 2—8—0: வானமாமலை ஸ்டோர், திசையன்விளை; வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, திசையன்விளை; ரூ. 2—2—2: ஆர். கிருஷ்ணன், மயிலாப்பூர்.

ஆக ரூ. 25 14 2

ரூ. 2—0—0: எம். ஏ. முகம்மது ஜலாலுதீன், சேலம்; எஸ். ஆர். ரகுநாதன், ஓமலூர்; கே. கோவிந்தராஜன், பெங்களூர்; ஜி. வி. சுப்பிரமணியன், ராசிங்கபுரம்; ஜனாப் வி. எஸ். காஜா மொய்தீன் ராவுத்தர், மடத்துக்குளம்; எஸ். நாராயணனும், எஸ். என். ஜானகிராமனும், கோயம்புத்தூர்; ஏ. வேலாயுதம் ஆச்சாரி, கோபிப்பாளையம்; ராமசுப்பிரமணியம், கோபிப்பாளையம்; நட. ர. பிரதர்ஸ் & ஸன், மேல்பட்டாம்பாக்கம்; ஆர். ராஜா செட்டியார், தஞ்சாவூர்; ஜி. சட்டை ஐயர், தஞ்சாவூர்; இளைஞர் சங்கம், விரையாச்சிலை; சுவாமி விவேகானந்தா வாலிபர் சங்கம், சேவகத்தாபாளையம்; ஆர். பி. எஸ். ராவ், அம்பாலா; எஸ். வி. ரங்கராஜன், பூனா.

ஆக ரூ. 30 0 0

ரூ. 1—4—0: ஸ்ரீ கே. ஆறுமுகம் செட்டியார், கோபிப்பாளையம்; ரூ. 1—1—0: ஸ்ரீமதி சாரதா கோபாலன், புன்னைநல்லூர்கோவில்; எஸ். கனகரத்னம் பிரகாசம், திருச்சி; ரூ. 1—1—1: ஸ்ரீமதி கே. கமலாபாய், மயிலாப்பூர்.

ஆக ரூ. 4 7 1

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கே. குழந்தைவேலு, மண்டபம்; கே. ஆர். வெங்கடராமன், தியாகராயநகர்; வி. மீனாக்ஷிசுந்தர தேசிகர், அம்பாசமுத்திரம்; ஸ்ரீமதி உலகம்மாள், அம்பாசமுத்திரம்; எம். ஆவுடையம்மாள், அம்பாசமுத்திரம்; டி. கே. மணி குருக்கள், திருவண்ணாமலை; பி. எஸ். கந்தசாமி, திருவிடந்தை; கே. பி. பாண்டியன் பிள்ளை, திருவிடந்தை; எஸ். நாகராஜன், திருநெல்வேலி டவுன்; டி. வெங்கடசுப்பையா, திருப்பத்தூர், வடஆற்காடு; வாசுகி, கோயம்புத்தூர்; ஆர். கிருஷ்ணஸ்வாமி, புதுக்கோட்டை; மு. சங்கரலிங்கம், புதுக்கோட்டை; டி. எஸ். பிரகதீசுவரன், பங்களூர்; வி. ஆர். சின்னப்ப முதலியார், ஆடுதுறை; டி. வி. வாசுதேவன், பாலக்காடு, சித்தூர்; அணா 0—8—0: ஸ்ரீ ஜி. கே. சுந்தரம், தமனி.

ஆக ரூ. 16 8 0

கொழும்பு தமிழன்பர்கள் (ஸ்ரீமான்கள் எஸ். டி. மணி, எம். ஸ்ரீரங்கநாதன், பெ. சுப்பையா பிள்ளை, ஆர். பி. புன்னைவனம்

* விவரம் அடுத்த இதழில் வெளியாகும்.



சோதிடந் தேவையில்லை

சமீபத்தில் விலைவாசிகள் உயருமா குறையுமா என்பதுபற்றி யாரும் உங்களுக்குச் சோதிடம் சொல்லவேண்டியதில்லை. 1943-ம் வருஷ அநுபவத்திலிருந்து, விலைவாசிகள் கண்டிப்பாகக் குறையுமென்று அனைவருக்கும் தெளிவாய்த் தெரியும். எங்கு பார்த்தாலும் விலைவாசிகள் குறைவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்தியதனாலும், கொள்ளை லாபமடிக்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதனாலும்தான் இந்த நிலைமை ஏற்பட்டது. விலைவாசிகளின் குறைவு உங்களைப் பாதிக்காதபடி காப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்களுடைய பணத்தை செய்பொருட்கள், பண்டங்கள், நிலம், கட்டடங்கள், நகைகள் முதலியவற்றில் முடக்க இதுவல்ல சமயம். நாட்செல்லச் செல்ல அவற்றின் விலைகள் கட்டாயம் குறையும். இப்போது ரூபாய் 100-க்கு வாங்கும் ஒரு பொருளின் விலை, இன்னும் ஒரு வருஷத்தில், ரூபாய் 70-க்கும் குறைவாக ஆகிவிடும். இக்காலத்திற்கு, இன்ஷியூரன்ஸ், கூட்டுறவு சங்கங்கள், சேமிநிதி, தபாலாபீஸ் சேமிநிதி, அரசாங்கக் கடன் பத்திரங்கள், நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட் ஆகியவையே தலைசிறந்த முதலீடுகளாகும்.

உங்களால் இயன்றவரை
மிச்சப்
படுத்துங்கள்.
மிச்சப் படுத்தியதை
முதலீடு செய்யுங்கள்.

துணி, தோலினால் செய்யப்பட்ட பொருள்கள், நகைகள், மருந்தை, உணவுப் பொருட்கள் முதலியவற்றின் விலைகள் குறைகின்றன. கட்டுப்பாடு விலைகள் பெருக்கமாய் விரைவாக அமுல் நடத்தப்படுகின்றன. விலைவாசிகள் இன்னும் குறைவது நிச்சயம்.

தேசியப் போர்முனையார் விடுக்கும் தேசிய வேண்டுகோள்

AAA 1115 TM

"கண்ணாடி போனதில் கூட எனக்கு வருத்தமில்லை. 'பிரேம்' போனதில் தான் வருத்தமாயிருக்கிறது."

"கண்ணாடியே போறபோது பிரேம் போனால் என்னவாம்?"

"மஞ்சளா, உனக்கு என்ன தெரியும்? நீ அப்படித்தான் சொல்லுவாய்! கண்ணாடி விலை பத்து ரூபாய்; பிரேமின் விலை இருபத்தைந்து ரூபாய், தெரியுமா? கோட்டு கோட்டாகப் பணத்தைக் கொட்டி......!"

"ஆமாம்; பிரமாதப் படித்தாதீர்கள்! மறதியாக எங்கேயோ வைத்து விட்டேன்; தெரியவில்லை. தேடினால் அகப்பட்டுவிடும். அதற்குள்ளே என்னத்துக்காக இப்படிப் பணத்தைக் கொட்டினேனே, காசைக் கொட்டினேனே என்று ஓலமிடுகிறீர்கள்?"

"பணத்தை உன் கையை விட்டு நீ கொடுத்திருந்தாயானால் தெரியும்! கொடுத்தது நான்தானே?" என்று கூறிக் கொண்டே நான் என் அறைக்குச் சென்றேன். அப்பொழுது கூடத்திலிருந்து மஞ்சளா தனக்குத்தானே பேசிக் கொண்டது நன்றாக என் காதில் விழுந்தது.

"காலையிலிருந்து கண்ணாடியைக் கழற்றவே யில்லையே! அவர் ஆபீஸுக்குப் போனதும் பக்கத்துத் தெரு கோமளத்தின் வீட்டுக்குப் போனேன். அங்கே கொஞ்ச நாழி இருந்து விட்டு அம்புஜுவின் அகத்துக்குப் போனேன். ராஜத்தின் வீட்டுக்கு நானும் அம்புஜுவுமாகப் போனோம். அப்பொழுதெல்லாம் கண்ணாடி போட்டுக் கொண்டுதானே இருந்தேன்? மத்தியானம் மிஸஸ் மாதர்பூதம், வீட்டுக்கு வந்திருந்த போது, 'மஞ்சளா, உன் முகத்துக்கு, ஜாடிக்கு மூடி வாய்த்தது போல் மூக்குக் கண்ணாடி பொருத்தமாயிருக்கிறது' என்று கூட மெச்சிக் கொண்டாளே! ஒரு வேளை சாகவின் வீட்டுக்குப் போயிருந்தபோது எங்கேயாவது......? இல்லையே! அதற்கு அப்புறம் சாரதாவின் வீட்டுக்குப் போயிருந்த போது கூட மூக்குக் கண்ணாடியை அவளிடம் காட்டினேனே!"

இப்படி மஞ்சளா தலையைச் சொறிந்து வண்ணம் மூக்குக் கண்ணாடியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது, "மஞ்சளா! இதோ பார், உன் மூக்குக் கண்ணாடி! நம் அறையிலிருக்கும் அலமாரியிலேயே இருந்தது. அலமாரியைப் பார்க்காமலே எல்லா இடத்தையும் தேடி விட்டேன் என்கிறாயே!" என்று கூறிக்கொண்டே நான் மூக்குக் கண்ணாடியை அவளிடம் கொடுத்தேன்.

மஞ்சளாவின் முகத்தில் ஆச்சரியக் குறியுடன் கேள்விக் குறியும் தோன்றியது.

"என்ன ஆச்சரியமாயிருக்கிறது! நான் இத்தனை நாழிகை வீடு முழுவதும் தருவித் தேடிவிட்டேன். அதோடு அலமாரியை மட்டும் இரண்டு டஜன் தடவையாவது தேடியிருப்பேன். அப்பொழுது எனக்கு அகப்படாத மூக்குக் கண்ணாடி உங்களுக்கு எப்படி அகப்பட்டது?"

"என் அருமை மஞ்சளா, இதோ பார். நான் உண்மையைக் கூறினால் கோபித்துக் கொள்ள மாட்டாயே! நான் ஆபீஸுக்குப் போன பிறகு நீ எங்கெங்கே யெல்லாம் போகிறாய், என்னென்ன செய்கிறாய் என்று அறிந்துகொள்ள ஆவலாயிருந்தது. அதற்காக, சாயங்காலம் டிபனுக்கு வந்திருந்த போது உன் மூக்குக் கண்ணாடியை நான் தான் எடுத்து வைத்திருந்தேன். இப்பொழுது உன் தினசரி 'புரோகிராம்' முழுவதும் எனக்குத் தெரிந்து விட்டது. என் சந்தேகமும் தீர்ந்து விட்டது" என்றேன்.

"தேவலையே! துப்பறியக் கூட ஆரம்பித்து விட்டீர்களே!" என்று சொல்லிக் 'கலீர்' என்று சிரித்தாள் மஞ்சளா.

அவள் கையைத் தன்னும் பொற்கைகளைப் பாவுவதற்காக, என் கரங்கள் அவள் கன்னத்தை நெருங்கின!



குடைக்காரர் (நண்பரிடம்):—நீங்கள் எங்கே குடியிருக்கிறீர்கள்?
நண்பர்:—அரிசிக்காரன் தெருவில் இருக்கிறேன்.
குடைக்காரர்:—அரிசிக்காரன் தெருவிலா? அங்கே அரிசிக்கு ரேஷன் உண்டோ?

சந்தேகம் தீர்ந்தது

✧ ஸோமாஸ் ✧

எனக்கு ரொம்ப நாட்களாக ஒரு சந்தேகம் தோன்றி என் மனத்தை அரித்துக் கொண்டே இருந்தது.

மஞ்சுளா என் வீட்டுக்கு வந்து குடித்தனம் பண்ண ஆரம்பித்ததிலிருந்து, அந்தச் சந்தேகமும் என் மனத்தில் ஆரம்பமாகி விட்டது. அதற்குக் காரணம் இல்லாமலுமில்லை.

என் மனைவி மஞ்சுளா சுபாவத்திலேயே ரொம்பக் குஷியாய் இருப்பாள். அவள் வீட்டிலிருந்தால் அறுபத்துமூவர் திருவிழா மாதிரி இருக்கும். கலகலவென்று ஏதாவது பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருப்பாள். அவளுடைய இந்தச் சுபாவம் தான் என் மனத்தில் சந்தேகம் கிளம்பியதற்குக் காரணம். அன்று எப்படியும் அவளைக் கேட்டு அந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொண்டு விடுவது என்று தீர்மானித்து விட்டேன்.

“மஞ்சுளா, எனக்கு ரொம்ப நாட்களாக ஒரு சந்தேகம். நான் ஆபீஸுக்குப் போன பிறகு உனக்கு எப்படிப் பொழுது போகிறது? நான் இராத்திரிதானே வருகிறேன்? அதுவரை நீ என்ன செய்கிறாய்?” என்று கேட்டேன்.

“இதுதானா பிரமாதம்! ஏதாவது நாவல், கிவல் வாசிச்சின்டிருந்தால் பொழுது தன்னாலே போகிறது! அப்படியும் இல்லாவிட்டால் நீங்கள் கல்யாணம் ஆனபிறகு எனக்கு எழுதிய கடிதங்களையெல்லாம் ஒரு தடவை படித்தால் நேரம் போதாதே! இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது, பழைய பத்திரிகைகளை எடுத்து வைத்துக் கொண்டு கொஞ்சம் கண்ணை மூடினால், மணி கிடுகிடுமாய்ப் பறந்து காப்பி போடற நாழி வந்து விடுகிறது” என்றாள் மஞ்சுளா சாகசக் கண்களுடன்.

“ஓஹோ! சரிதான்” என்றேன். எனக்கு இதில் நம்பிக்கை ஏற்படவில்லை. அவளை மேலும் தூண்டிக் கேட்பதற்கும் எனக்கு அப்பொழுது அவகாசமில்லை. ஆபீஸுக்குப் போக சமீறுக்கு நாழிகையாகி விட்டபடியால் அவசரம் அவசரமாகக் கிளம்பி விட்டேன்.

ஒருத்தி நாள் முழுவதும் ஒருவருடனும் பேசாமல் தனியாகக் கழிப்பதென்றால் இது முடிகிற காரியமா? அதுவும் என் மஞ்சுளாவா? ஊஹூம்! நம்பவே முடியாது! மஞ்சுளாவாவது நாள் முழுவதும் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பதாவது!— இப்படி நினைத்துப் பார்த்தபோது, எனக்கு ஆச்சரியத்தினால் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. நல்ல வேளையாகச் சமாளித்துக்கொண்டு ஆபீஸுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

வழக்கம்போல் இரவு ஒன்பது மணிக்கு வீட்டுக்கு வந்தேன். என் அறைக்குள் சென்று உடைகளை மாற்றிக் கொண்டிருந்த போது, மஞ்சுளா எதையோ தீவிரமாகத் தேடுவதில் ஈடுபட்டிருந்தாள். உடைகளை மாற்றிக் கொண்டு நான் கூடத்துக்கு வந்தேன்.

ஒன்றும் புரியாமல், “மஞ்சுளா, என்ன அப்படி விழுந்து விழுந்து தேடுகிறாய்? இங்கே வா!” என்றேன்.

“என் மூக்குக் கண்ணாடியை எங்கேயோ வைத்து விட்டேன். அப்பவே பிடிச்சுத் தேடுகிறேன், அகப்பட மாட்டேன் என்கிறது”—இப்படிச் சொல்லும் பொழுது மஞ்சுளாவின் முகத்தைப் பார்க்க எனக்கே பரிதாபமாயிருந்தது.

“உன்னை டாக்டர் கண்ணாடி போட்டுக் கொள்ளச் சொன்னதும் போதும்; நீ அதைக் கழற்றிக் கழற்றி அலைவதும் போதும். எனக்கு அப்பொழுதே தெரியும். டாக்டர்தான் கண்ணாடியைக் கழற்றவே கூடாது என்றாரே! நீ ஏன் கழற்றுகிறாய்? கண்ணாடி வாங்கி இன்னும் சரியாய் ஒரு வாரம் ஆகவில்லை. அதற்குள் தொலைத்து விட்டாயல்லவா?”

“நான் எங்கே தொலைத்தேன்? வீட்டுக்குள்ளேயேதான் எங்கேயாவது இருக்கும். புதிதாகக் கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறபடியால் வேதனையாயிருக்கிறது. அதனால் அடிக்கடி கழற்றவேண்டி வந்தது.”



கொஹிமா, காபா




பிரதேசங்கள்மேல் நமது வெடி விமானங்கள்

"....இன்று நமது ஆகாய விமானங்கள் விரோதி நாட்டின்மீது பறந்து ஆயிரக்கணக்கான பவுண்டு இடையுள்ள குண்டுகளைப்போட்டு விரோதியின் இடங்களையும், கோட்டைகளையும் துருப்புக்களையும் தகர்த்தன ..."

இது உருவகமானதோர் அறிக்கை. இதனுள்தான் நமது இந்திய விமானிகளின் வீரச் செய்கைகளும் மற்ற வேலைகளின் சரித்திரமும் அடங்கியுள்ளன. நாம் அவர்களிடம் வைத்திருந்த நம்பிக்கையை அவர்கள் ரூபப்படுத்திவிட்டனர். ஆகாயத்திலும், பூமியிலும் உலகிலேயே மோசமான சீதோஷ்ண ஸ்திதியிலும், பயங்கரமான காடுகளிலும் அவர்கள் காண்பித்த வீரம், தீரம், பொறுமை இவைகளை நேரில் கண்டவர்களிடமும், அவர்கள் வேலைகளை அறிந்தவர்களிடமும் அவர்கள் புகழ்ச்சியைப் பெறுகின்றனர்.

இன்று அரக்கானிலும், பர்மாவிலும் விரோதிகள் கைப்பற்றிக்கொண்டிருக்கும் காடுகளின் மீது, இந்திய ஆகாய படையின் சண்டை விமானங்களும், பருந்துப்பாய்ச்சல் வெடிகுண்டு விமானங்களும், ரோந்து விமானங்களும் முழு பலத்துடன் வேலை செய்கின்றன.




இந்திய விமானங்கள் கொஹிமா மீதும் காபா மீதும் ஆதிக்கம் வகித்து வந்தன. இன்று அவைகள் பர்மாமீது பறக்கின்றன. ஹரிக்கேன் விமானங்களும், வல்டி வென்ஜென்ஸ் விமானங்களும் ஜப்பானியர்களுக்கு சாவையும் நாசத்தையும் பொழிகின்றன. இந்திய விமானிகளைப்பற்றி இந்தியா பெருமையடைகிறது.

ஜப்பானியர்களைத் தோற்கடிக்க நம்மால் முடியும்.

தோற்கடித்து வருகிறோமென்பதை இவர்கள் மெய்ப்பிக்கிறார்கள்

தேசிய போர்முனையின் பிரசாரம்

AAA 1308-ATM



தகப்பனார்:—ஐயோ, பாவம்! இந்த நீர் யானைக்கு 'ரொம்பப் பசி போல இருக்கு; அதுக்கு இரண்டு பட்டாணி போடுவோம்!

அப்படி அடித்தால் அதனுடைய தாயாரின் மண்டைதான் உடையும் என்று மற்ற யானைக் குட்டிகள் ஞாபகப்படுத்தவே, அந்த யானைக் குட்டி பேசாமலிருந்தது. உடனே நான்கு யானைக் குட்டிகளும் பலமாக யோசனை செய்து தாங்கள் எழுதும் சித்திரத்தினாலேயே ஈக்களையும் கொசுக்களையும் தங்கள் தாயாரின் தலைமேல் உட்காராதபடி செய்யத் தீர்மானித்தன.

மறு நாள் யானையைப் பார்க்க வந்த ஒரு கரடி, யானையின் தலையைப் பார்த்து விட்டுச் சிரித்தது. "என்ன, கரடியாரே! சிரிக்கிறீர்கள்?" என்று யானை கேட்டது. அதற்குக் கரடி, "ஒன்றுமில்லை. உங்கள் தலையில் சிலந்திப் பூச்சி கூடுகட்டியிருப்பதைக் கூடக் கவனிக்காமல் அவ்வளவு ஸ்வாரஸ்யமாகப் படிக்கிறீர்களே! அதைப் பார்த்துத்தான் சிரித்தேன்" என்று பதில் சொல்லிற்று. அதைக் கேட்ட யானை, "கரடியாரே, நீங்களும் ஏமாந்தீர்களே! என் தலையில் இருப்பது நிஜமான சிலந்திக் கூடு அல்ல. என் தலையில் ஈக்களும் கொசுக்களும் உட்காராதபடி அவைகளை ஏமாற்றுவதற்காக என் குழந்தைகள் சிலந்திக் கூட்டைப் போல ஓர் சித்திரத்தை என் தலையில் எழுதியிருக்கிறார்கள். அதனால் இப்பொழுது ஈக்களும் கொசுக்களும் பயந்து என் தலையில் உட்காருவது இல்லை. ஆனால் கொசுக்கள் மாத்திரம் சும்மா இராமல் என் இரு காதுகளிலும் பாட்டுப் பாடி விட்டுத்தான் போகின்றன" என்று சொல்லிற்று. கரடியும் யானைக் குட்டிகளின் சாமர்த்தியத்தை மெச்சி விட்டுத் தன் வீட்டுக்குச் சென்றது.

அன்று சாயங்காலம் யானையைப் பார்க்க அதன் சிநேகித நரி ஒன்று வந்தது. அப்பொழுதும் யானை ஸ்வாரஸ்யமாக ராமாயணம் படித்துக் கொண்டிருந்தது. யானையைப் பார்த்த நரி, "யானையாரே. உங்கள் தலையைக் கொஞ்சம் தும்பிக்கையினால் தடவிக் கொள்ளுங்கள்" என்று சொல்ல, யானை, "என்ன, என்ன!" என்று அவசரமாகத் துதிக்கையினால் தலையைத் தடவிற்று. உடனே அதன் தலையிலிருந்து பத்துப் பதினைந்து பெரிய சிலந்திப் பூச்சிகள் தொப்பென்று கீழே விழுந்தன. "ஓஹோ! சரிதான்! என் தலையில் எழுதியிருந்த சிலந்திக் கூட்டின் சித்திரத்தைப் பார்த்து நிஜச் சிலந்திக் கூடுதான் என்று எண்ணிச் சிலந்திப் பூச்சிகள் என் தலையில் வந்து சேர்ந்து விட்டன. அதுதான் என்னடா என் தலையில் குறுகுறு என்கிறதே என்று யோசனை செய்தேன்" என்று சற்று அவமானத்துடன் நரியிடம் சொல்லிற்று. நடந்த சமாசாரங்களை அறிந்த நரி சிரித்துக் கொண்டே, "இதற்காக நீங்கள் சிரமப்பட வேண்டாம். ஒரு குல்லாயைத் தலையில் அணிந்து கொண்டால் ஈக்களும் கொசுக்களும் எப்படி உங்கள் தலையில் உட்காரும்?" என்று சொல்ல, யானைக் குட்டிகள் ஓடோடியும் சென்று கடையிலிருந்து ஒரு நல்ல குல்லாய் வாங்கி வந்து தன் தாயார் தலையில் வைத்தன.









யானையும் கொசுவும்

ராஜி

ஒரு யானைக்கு நான்கு குழந்தைகள். அந்த நான்கு யானைக் குட்டிக் குழந்தைகளும் படிப்பில் மிகவும் புத்திசாலிகளாக இருந்தன. படிப்பை விட நான்கு யானைக் குட்டிகளுக்கும் சித்திரம் எழுதுவது என்றால் மிகவும் பிரியம். அவைகள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் சித்திரப் பரீக்ஷையில் யானைக் குட்டிகள் தான் முதல் மார்க் வாங்கும். யானைக் குட்டிகளின் வீட்டுச் சுவரிலெல்லாம் சித்திரங்கள் எழுதப்பட்டிருக்கும். யாராவது வீட்டுக்கு வந்தால் யானை, "பார்த்தீர்களா, என் குழந்தைகளின் விஷமத்தை?" என்று பெருமையாகப் பேசிச் சுவரில் எழுதியிருக்கும் சித்திரங்களைச் சுட்டிக் காண்பிக்கும்.

ஒரு நாள் யானை சாவகாசமாக மூக்கில் மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு ராமாயணத்தைப் படித்துக் கொண்டிருந்தது. யானைக்குப் பக்கத்தில் யானைக் குட்டிகள் வெகு மும்முரமாகச் சித்திரங்கள் வரைந்து கொண்டிருந்தன. அன்று விடுமுறையான தால் யானைக்குட்டிகள் பள்ளிக்கூடம் போகாமல் வீட்டிலேயே இருந்தன. புஸ்தகம் படித்துக் கொண்டிருந்த யானை அடிக்கடி தன் துதிக்கையினால் தன் தலையிலடித்துக் கொண்டிருந்தது. "அடாடா, இந்தக் கொசுக்களின் உபத்திரவமும் ஈக்களின் உபத்திரவமும் பொறுக்க முடியவில்லையே!" என்று சொல்லிற்று. பாவம், வயதான யானை என்ன செய்யும்? கொசுக்களும், ஈக்களும் யானையின் தலையில் உட்கார்ந்தால் அதற்குத் தலையில் ஏதோ குறு குறுவென்று இருந்ததால் அதற்குப் படிக்க முடியவில்லை. தும்பிக் கையினால் அடிக்கடி அவைகளைத் துரத்துவதற்கும் யானையினால் முடியவில்லை.

ஈக்களின் உபத்திரவமும் கொசுக்களின் உபத்திரவமும் தாங்க முடியாமல் தன் குழந்தைகளைப் பார்த்து, "போதும், போதும்; நீங்கள் சித்திரம் வரைவது! என் தலையில் ஈக்களும் கொசுக்களும் உட்கார்ந்து என்னை மிகவும் தொந்தரவு பண்ணுகின்றன. என் உடம்பில் வேறு எங்கு வேண்டுமானாலும் அவை உட்காரட்டும். தலையில் மாத்திரம் அவைகள் உட்காராமலிருந்தால் போதும். அதற்கு நீங்கள் ஏதாவது உபாயம் செய்வீர்களா?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டது. அதைக் கேட்ட ஒரு குட்டி யானை, "இதென்ன பிரமாதம், கொசுக்களும் ஈக்களும் தலையில் உட்காரும் சமயத்தில் ஒரு பெரிய கல்லால் அவைகளை அடிக்கிறேன், பார்!" என்று மார் தட்டிப் பேசியது.









வில்லா திருந்தனர். காதலர்கள் வீட்டை விட்டு ஓடுவது என்ற உபாயத்தை அவர்கள் கேள்விப்பட்டவர்கள்தான். இருப்பினும் குடும்பப் பெயர் கெட்டுப் போய்விடுமே என்று அஞ்சினார்கள். இந்த இளங் காதலர்களின் உள்ளம் தவிப்பதற்குக் காரணம் அம்பலக்காரர்தான் என்று ஊரில் பலர் கூறினார்கள். இவ்வளவு நிகழ்விற்கும் காரணம் செட்டியார்கள்தான் என்று வேலாயுதம் சொல்லுவான்.

மேலும் சில மாதங்கள் சென்றன. ஒரு வளர்பிறை சமயத்தில் அம்பலக்கார வீரனுக்கு இருமல் நோய் லேசாகக் கண்டது. அதோடு அது வளர்பிறை மதிபோல் வளர்ந்தது. பதினைந்து நாட்களுக்குள் இருமல் கிழவனைப் படுக்கையிலேயே கிடத்தி விட்டது. கிழவன் நோயை ரத்துச் செய்ய நாட்டு வைத்தியர்கள், மந்திரவாதிகள், பூசாரிகள் முதலியவர்கள் தங்கள் கை வரிசைகளைக் காட்டினார்கள்.

ஒரு நாள் மாலை கிழவன் தனது ஒரே மகளை அழைத்துக் கன்னத்தோடு கன்னம் வைத்துக்கொண்டு விம்மினான். முத்து சாமியின் இரு கடைக் கண்களிலிருந்தும் கண்ணீர் நீர் ஊற்றுப்போல ஓடிக்கொண்டிருந்தது. என்னமோ சொல்ல வாயசைத்தான். உதடுகள் அசைந்தனவே யன்றி வாயைத் திறக்க முடியவில்லை. கைகளை மெதுவாகத் தூக்கி விரல்களால் ஜாடை காட்டினான். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் செல்லம்மாளுக்கு மட்டும் தெரிந்தது கிழவனின் குறிப்புகள். "மகளே! உன் வாழ்க்கையை வீணாக்கிய பாவியாகிய எனக்கு அந்திய காலம் நெருங்கி விட்டது. இளந் தளிரைக் கிள்ளி யெறிந்தேன். என்னை மன்னிப்பாயா?" என்று கெஞ்சி அழுதான் அந்தக் கிழவன்.

மகளும் ஒன்றும் சொல்ல முடியாமல் தேம்பிக் கொண்டிருந்தாள். இருந்தாற்போலிருந்து மாமனாரின் மரணப் படுக்கையின் விவரத்தைச் சிலர் சொல்லக் கேட்ட வேலாயுதத்தின் மனம் துடிதுடித்தது. ஆனால் கிழவன் சொன்ன சபதம் குறுக்கே நின்று தடுத்தது. இருப்பினும் கிழவனின் சாகும் தறுவாயிலாவது சென்று அவனது மன்னிப்பையும், ஆசீர்வாதத்தையும் அடையலாமென்று எண்ணி ஒரே ஆவேசத்துடன் அம்பலக்காரன் வீடு தேடி ஓடி வந்தான். வேண்டாமென்று பலர் தடுத்தும் பலனில்லை. பாசம் என்ற ஜீவ சக்தி மற்ற விஷயங்களை மறக்கச் செய்தது. இங்கு நீண்ட நேரம் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான் கிழவன். மகள் தனது புடவையின் முந்தானையால் கிழவனின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு விசனப்பட்டுக் கொண்டிருந்தாள். இருந்தாற்போலிருந்து கிழவன் தலையைத் தூக்கி முனகி, "செல்லம்மா!" என்றான் ஒருவித ஆவேசத்தோடு. "அப்பா!" என்று நெருங்கினாள் செல்லம்மாள். ஆனால் பிரயோஜனமில்லை. கிழவன் அன்புடன் விளித்த அந்தக் கடைசி வார்த்தையின் மூலமே அவனது உடலில் வெகு நாட்களாக ஊசலாடிக் கொண்டிருந்த அந்த நூலிழை போன்ற உயிரும் போய் விட்டது.

பலர் தடுத்தும் கேளாமல் மாமனாரைப் பார்க்க ஆவலாக ஓடிவந்த வேலாயுதம் வீட்டுக்குள் நுழைவதற்கும், அம்பலக்காரனின் உயிர் போவதற்கும் சரியாக இருந்தது. வீட்டுக்குள் நுழைந்து மாமனார்மீது புரண்டு புரண்டு அழுதான் வேலாயுதம். தான் வெகு ஆவலுடன் ஓடி வந்தும் கிழவனின் உயிர் போய் விட்டதே யென்றும், அம்பலக்காரக் கிழவனின் கச்சப் பல் வார்த்தை பலித்து விட்டதே யென்றும் வெகுவாகப் பிரலாபித்தான். உயிர் போனாலும் வீரம் பொலிந்திருக்கும் அம்பலக்காரனின் முகத்தைக் கண்டு பயந்து அஞ்சலி செய்து நின்றான் வேலாயுதம்.

மாக வந்தான். வழக்கும் நடந்து கன்னடக்கை ஜாமீனும் வாங்கப்பட்டது.

ஏறக்குறைய ஒரு வருட காலம் சென்றுவிட்டது. பல பெரிய மனிதர்கள் மகளை மாமனார் வீட்டிற்கு அனுப்பி வைக்கும்படி மறைமுகமாகவும் நேர் முகமாகவும் சொல்லிப் பார்த்தார்கள். யார் என்ன சொன்னாலும் கிழவன், "என் உயிருள்ள வரை அவனோடு செல்லம்மாள் பேசவே கூடாது!" என்று கூறி ஒரே அடியாக அடித்து விட்டான். கயிறு எரிந்தாலும் காரம் போகாது என்றபடி அம்பலக்காரனுக்கு வயசு அதிகமானாலும் ரோஷம் குறையவில்லை. அம்பலக்காரன் சற்று மறந்திருந்தாலும் செட்டியார் குத்திக் கொடுக்க மறந்து விடுவாரா?

செல்லம்மாளுக்குத் தன் புருஷனைப் பார்க்க வேண்டுமென்று ஆவல் அதிகம். பல தடவை கனவுகூடக் காண்பாள். வேலாயுதத்திற்கும் மனைவி மீது ஆசையில்லாமல் போகுமா? ஒன்றாக வாழ்ந்த பட்சிகளைப் பிரித்துத் தனித்தனிக் கூண்டில் அடைத்து வைத்தது போலிருந்தது. கீழப்பட்டியிலிருந்து மேலப்பட்டிக்குத் தயிர் கொண்டு வந்து விற்கும் ஒரு கிழவியிடம் செல்லம்மாள் தன் கணவனைப் பற்றி விசாரித்ததுடன், தனது நிலைமையையும் எடுத்துச் சொல்லி அனுப்பினாள். வேலாயுதமும் புத்திசாலி. மனைவியின் நிலை கண்டு வருத்தப்பட்டான். ஒரு பக்கம் தகப்பனார்; மறுபக்கம் கணவன். என்ன செய்வாள் அவள்?

மனைவியைப் பார்க்க வேண்டுமென்று வேலாயுதத்திற்கு ஆவல் அதிகமாயிற்று. கிழவி மூலம் சொல்லியனுப்பி, ஒரு நாள் இரவில் அ ம் ப ல க் கா ர னி ன் வீட்டுத் தோட்டத்தில் செல்லம்மாளைச் சந்தித்தான். சிறையிலிருந்து விடுதலை பெற்றதைப் போல் இருவரும் ஒருவரையொருவர் கண்டு களிப்புற்றனர். காதோடு காதாய்ப் பல விஷயங்களைப் பேசினார்கள். முக்கியமாக வேலாயுதம் செய்ததுதான் தப்பிதம் என்று செல்லம்மாள் அடிக்கடி கூறிக் கேலி செய்தாள்.

பிரதி வெள்ளிக்கிழமையும் அம்பலக்காரன் அவ்வூரிலுள்ள துரோபதையம்மன் கோவிலுக்குச் சென்று இரவு ஒன்பது மணிக்குத் தான் வீடு திரும்புவான். அந்தச் சமயத்தில்தான் அந்தக் கிராமக் காதலர்கள் முள் வேலிக்குப் புறம்பே சந்தித்துப் பேசுவது வழக்கம். இந்த விஷயம் மெதுவாக அம்பலக்காரர் காதிற்கு எட்டியது. எப்படி எட்டிற்று என்று மட்டும் தெரியவில்லை. ஒரு வெள்ளிக்கிழமை அந்த இளம் தம்பதிகள் இருவரும் அளவளாவிப் பேசுவதைத் தானே நேரிலும் பார்த்தான். "அப்படியா சேதி?" என்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான் வேலாயுதத்தின் மேல். அடுத்த க்ஷணம் ஆறடி உயரமுள்ள வேலியை வேலாயுதம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தாண்டி ஓடி விட்டான். எதிர்த்துப் பேசி அவன் தனது உரிமையை நிலை நாட்டலாம். இவையெல்லாம் அவன் மனதிற்கு அச்சமயம் தோன்றவில்லை.

செல்லம்மா விழுந்தடித்துக் கொண்டு வீட்டுள் ஓடினாள். அம்பலக்காரனும் உள்ளே நுழைந்து ஒரு அரிவாளை எடுத்து உயரப் பிடித்தபடி செல்லம்மாளைக் கண்டித்து, முடிவில் "என் உசிரு இந்த உடலிலே இருக்கும்வரை நீ அந்தப் பயலோடு பேசப்படாது; அவனை மனசாலேயும் நினைக்கவும் கூடாது. மீறினே, பெத்த பெண்ணென்னும் பார்க்காமே இந்தக் கொடுவாளாலே உன் தலையைச் சீவிப் போடுவேன்!" என்று கர்ஜித்தான் அந்தக் கிழச் சிங்கம்.

செல்லம்மா அம்பலக்காரன் தெரிவித்த விஷயத்தைத் தயிர்க்காரியிடம் தெரிவித்து, வேலாயுதம் தன் தகப்பனார் கண்ணில் படாமலிருக்கும்படி சொல்லி அனுப்பிவிட்டாள். வேலாயுதத்திற்காக வீண் ரகளை செய்து கொள்வதற்குச் செல்லம்மாவுக்கு இஷ்டமில்லை. தம்பதிகள் ஒருவரையொருவர் நினைத்து ஏங்குவதைத் தவிர வேறு வழி

தையற் கடையில்



"இருடர்கள் ஜாக்கிரதை!" என்ற அறிப்புக்கும் இதற்கும் சம்பந்த மிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் சட்டையே சட்டைப் பையில் கையை விடவில்லை. 'கோட் ஸ்டாண்'டில் மாட்டும் பொழுது தவறி அடுத்த சட்டையின் பைக்குள் கை புகுந்து கொண்டிருக்கிறது!

தார்கள். சேர்வைக்காரர் மகன் வேலாயுதம் (செல்லம்மாவின் கணவன்) ஒரு தள்ளுத் தள்ளி, “என்னடா, சேதி தெரியும்?” என்று கூறிக்கொண்டே எரிப் பலகையை மூடினான். அவ்வளவுதான். இரு பக்கத்து ஆட்களும் மூர்க்கமாகச் சண்டையிட ஆரம்பித்தனர். கத்தி, கழி, மண் வெட்டி, கடப்பாரை முதலியவை ஆயுதங்களாகப் பிரயோகிக்கப்பட்டன. வேலாயுதம் உட்பட நாற்பது பேருக்குப் பலத்த காயம். அம்பலக்காரர் ஆட்களுக்கும் நல்ல அடி. நல்ல காலமாக உயிர்ச் சேதமில்லை.

மறு தினம் போலீசார் ஸ்தலத்திற்கு வந்து பல நாட்களாக விசாரணை செய்தனர். தண்ணீர்ச் சண்டையினால் சேரிட்ட கலகம் என்று போலீசார் விசாரணையை முடிவு செய்து அம்பலக்காரர் பக்கம் அறுபது பேர் மீதும் சேர்வைக்காரரின் ஆட்கள் நாற்பத்திரண்டு பேர் மீதும் வழக்குத் தொடுத்து, அமைதிக்குப் பங்க மேற்படாமலிருக்க நன்னடக்கை ஜாமீன் வாங்கிக் கொண்டு அவர்களை விட்டார்கள். இரு பக்கத்திலும் ஆயிரக் கணக்கில் ரூபாய் செலவாயிற்று. இரண்டு மிராசுதார் செட்டியார்களும் கொஞ்சம் பணம் கொடுத்து உதவினார்கள். வேங்கடகிருஷ்ண செட்டியார் அன்று போட்ட விதை நாளடைவில் குருத்து விட்டு வளர ஆரம்பித்தது. இரண்டு ஊராருக்கும் அடிக்கடி சில்லறைச் சச்சரவுகளும் நடந்து கொண்டே இருந்தன. வெகு பக்குவமாக நடந்து வந்த அம்பலக்காரர்களும், சேர்வைக்காரர்களும் பெருஞ் சச்சரவில் வந்து நிற்க வேண்டியதாயிற்று. காரணம், தாயாதிக் காய்ச்சல்தான்!

இந்தக் கலகம் நடந்த சமயத்தில், செல்லம்மாள் தன் தாயார் வீட்டிற்கு வந்திருந்தாள். கலகத்தில் தன் கணவன் காயமடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டான் என்று கேள்விப்பட்ட செல்லத்தின் உடல் பதை பதைத்தது. தன் கணவனைப் போய்ப் பார்த்து வரவேண்டுமென்று தாயாரிடம் முறையிட்டாள். செல்லம்மாவின் தாயார், மகளின் மனத்தை நன்கு தெரிந்து கொண்டாள். பெண்களின் மன நிலை பெண்களுக்குத் தானே தெரியும்? அதற்கு மேலாக மகள் நிலை தாயாருக்குத் தெரியாதா?

வேலாயுதத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ற மூன்றாவது தினம், அடிதடியைப் பற்றி வேங்கடகிருஷ்ண செட்டியாரிடம் அம்பலக்காரன் கலந்து பேசினான்.

“பணப் பலம் என்னிடமிருக்கிறது. படை பலம் உம்மிடமிருக்கிறது. கடைசிவரைக்கும் ஒரு கை பார்த்துவிடுவோம்” என்று தூக்கி விட்டார் செட்டியார். அம்பலக்காரன் அடியுண்ட சிங்கம்போல் வீடு வந்தான். சற்று சிரம பரிகாரம் செய்து கொண்டான்.

“செல்லம்மா உங்களை ஒரு சேதி கேட்கச் சொன்னாள். ஆஸ்பத்திரியிலே இருக்கிற மருமகப்பிள்ளையைப் பார்க்கணுமிங்கறு.” என்றாள் அம்பலக்காரனின் மனைவி.

“இன்னொருதரம் அவனை மருமகன்னு சொன்னே, உன் நாக்கை அறுத்தெறிவேன். கொஞ்சங்கூட யோசிக்கப் பார்க்காம நம் ஆளுகளை அடிச்சுப் போட்டானும். அவனைப் போய்ப் பார்க்கணுமா? ஆடு பகை; குட்டி உறவு கொண்டாடுகிறதோ?”

“உங்க ஆளுக்களுந்தான் நம்ம மருமகப் பிள்ளைன்னு யோசிக்காம அடிச்சுப்புட்டாணுக! செல்லம் இரண்டு நாளாகப் பச்சைத் தண்ணியை பல்லுமேலே வைக்கலே. போய்ப் பார்க்காட்டி ஊருதான் என்ன சொல்லும்?

“சொல்லும் ஊரு; ஊர் எப்படியும்தான் சொல்லும். ‘அப்பன் சண்டை முகத்திலே நிற்கிறான், மகள் புருசனோடே கொஞ்சப் போயிட்டாள்’ என்றுகூட ஊர் சொல்லும். நீ பேசாமே வாயை மூடிக்கிட்டுப் போ” என்றான் முத்துசாமி அம்பலம்.

மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்த செல்லம்மா முகத்தைத் துணியால் மூடிக் கொண்டு தேம்பிக் கொண்டே போய் ஒரு மூலையில் முடங்கிக் கொண்டாள். அதன் பிறகு வேலாயுதம் ஆஸ்பத்திரியிலிருந்து சுக





"ஒன்று மில்லே! இந்தக் கலியாணம் செய்ததாலே கொஞ்சம் கடன் ஏற்பட்டிருக்கிறது."

"இதுதானே, எவ்வளவு என்று சொல்லுங்கள், கொடுக்கிறேன். நீங்கள் ரசீதுகூட எழுதிக் கொடுக்கவேண்டாம். உங்கள் வாய்ச்சொல்லே ரிஜிஸ்தர் செய்த பத்திரம்தானே!"

"அதற்கில்லேங்க, பணம் ஒன்றும் தேவையில்லே. நாலு காணி நிலம் வாரத்திற்குப் பயிரிடக் கொடுத்தால் அதைக் கொண்டு ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம்" என்றான் அம்பலக்காரன்.

செட்டியார் யோசனையில் ஆழ்ந்தார். நிலங்கள்தான் அங்கு செல்வங் கொழிக்கும் சிந்தாமணி. இதுவரை ஒரு குழி நிலங்கூட ஒருவருக்கும் பயிரிட விட்டதில்லே. அப்படியிருக்க அம்பலக்காரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் சங்கடப்பட்டுக் கடைசியாக ஒரு முடிவிற்கு வந்து ஏரிக்கரையின் கீழ்ப்புறம் உள்ள எட்டு ஏக்கர் நிலத்தை அம்பலக்காரனுக்கு வாரக் குத்தகைக்கு விட்டார். அம்பலக்காரனும் செட்டியாரின் தாராளத் தன்மையைப் புகழ்ந்து குத்தகை ரசீது ஒன்று எழுதிக் கொடுத்து விட்டுத் திரும்பினான்.

வேங்கட கிருஷ்ண செட்டியார் வலிய வந்த அம்பலக்காரனை மடக்கிப் போட்டதைப் பற்றிப் பெருமகிழ்ச்சி அடைந்தார். இனிமேல் தமது சொற்படி அம்பலக்காரன் அடங்கி நடப்பதுடன் கீழப்பட்டி முத்து கிருஷ்ண செட்டியாரையும் சமயம் பார்த்து அவனைக் கொண்டு அடக்கிப் போடலாம் என்று மனப்பால் குடித்தார்.

முத்துசாமி அம்பலம் குத்தகைக்குப் பெற்ற நிலத்தில் பயிரிட்டான். காலா காலத்தில் உரம், நீர் முதலியன செலுத்தி நன்கு கவனித்துப் பயிரிட்டதால் கதிர்கள் தாழை மடல்போல் பீறிட்டுக் கிளம்பின. நெற்கதிர் கழுத்தளவு இருக்கையில், கோடையில் ஏற்பட்ட தண்ணீர்ப் பஞ்சத்தால் ஒரு பகுதி சாவியாகிவிட்டது. அன்று நீர் பாய்ச்சாவிடில் பயிர் முழுதும் சாவியாய்விடும்போலிருந்த நிலைமையைக் கண்டு அம்பலக்காரன் மனம் பதறி செட்டியாரிடம் ஓடி யோசனை கேட்டான். செட்டியார் மிகவும் அனுசரணையாகப் பேசி ஏரிப் பலகையை எடுத்துத் தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளும்படி சொன்னார். அன்றிரவு அம்பலக்காரனின் ஆட்கள் ஏரியின் மேல் பக்கமுள்ள அடைப்புப் பலகையை எடுத்து விட்டு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள்.

அன்று ஏரியிலிருந்து தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளும் முறை கீழப்பட்டி கிராமத்தாருடையது. கீழப்பட்டி மிராசுதார் முத்துகிருஷ்ண செட்டியார் நிலங்களுக்கும், ஆறுமுகஞ் சேர்வையின் நிலங்களுக்கும் தண்ணீர் பாய வேண்டிய முறை. கோடை காலமாதலால் அவர்களுக்கும் நீர்ப் பஞ்சம் அதிகமாக இருந்தது. ஏரியின் கீழ்ப்புறம் ஏரிப் பலகையை எடுத்து விட்டு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள். நீர் பாயும் வாய்க்காலில் வழக்கம் போல் தண்ணீர் காணவில்லே. சேர்வை ஆட்களுக்குக் காரணம் தெரியாமல் ஏரியைச் சுற்றி வந்தார்கள். மேல் புறம் பலகை எடுக்கப்பட்டு நீர் பாய்வதைக் கண்டு கோப மடைந்தார்கள். அன்று அவர்களுக்குத்தான் முறை தண்ணீர் வரவேண்டியது. அது வெகு காலயக் கட்டுப்பாடு. இன்று, நேற்று ஏற்பாடில்லே. அப்படியிருக்க முறை தவறிக் காரியஞ் செய்பவர்களைத் திட்டிக் கொண்டே பலகையை அடைத்தார்கள். அம்பலக்காரனின் ஆட்கள் அவர்களைத் தடுத்து இன்னும் ஒரு மணி நேரத்தில் மூடி விடுவதாகக் கூறினார்கள். மேலப்பட்டி செட்டியார் ஆட்களும், சேர்வைக்காரரின் ஆட்களும் அதற்கு இணங்கவில்லே. "வழக்கத்தை மீறி நடப்பது அயோக்கியத்தனம்" என்று கண்டித்தார்கள். தங்கள் பயிர்கள் காய்ந்துபோகுமென்றும் விட்டுக் கொடுக்க முடியாதென்றும் கண்டிதம் பேசினார்கள். அம்பலக்காரர் ஆட்களுக்குத் தங்களின் பலாபலத்தில் ஆவேசம் வந்துவிட அவர்களும் வீரம் பேசி "ஏரிக் கதவை அடைத்தால் அப்புறம் தெரியும் சேதி!" என்று ஆரவாரித்



சாமி அம்பலத்தின் மகளை ஆறுமுகஞ் சேர்வை மகனுக்கு நல்ல முகூர்த்தத்தில் பாணிக்கிரஹணம் செய்து கொடுத்தார்கள். அதன் பிறகு இரு குடும்பத்தினர்கட்கும் உறவு பலப்பட்டது.

இரண்டு பட்டியிலும் இரண்டு நாட்டாண்மைக்காரர்கள் இருப்பது போலவே, இரு மிராசுதார்களான செட்டியார்களுமிருக்கிறார்கள். மேலப்பட்டியி லிருப்பவர் வேங்கட கிருஷ்ண செட்டியார். கீழப்பட்டியிலிருக்கும் செட்டியாரின் பெயர் முத்துகிருஷ்ண செட்டியார். இருவரும் தாயாதிகள். அவர்களுக்குள்ளே தாயாதிக் காய்ச்சல் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. முன்னோர்கள் எழுதிவைத்த உயிலைப் பற்றி ஒருவரையொருவர் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே யோசித்து வந்தனர். ஒரு செட்டியார் மற்றொரு செட்டியாரின் விவசாயிகளை இரகசியமாகச் சந்தித்துக் கோயில் திருவிழா அப்படி செய்தது சரியல்ல, இந்த வருஷம் தெருக்கூத்து ஏற்பாடு சரியல்ல என்பது போன்ற தகராறுகளைக் கிளப்பி விடுவார்கள். கீழப்பட்டியில் நடப்பன வெல்லாம் மேலப்பட்டிக்காரர்களுக்குத் தகராறாகவும் மேலப்பட்டியில் நடப்பன வெல்லாம் கீழப்பட்டிக்காரர்களுக்குக் குற்றமாகவுமே தெரியும்.


இரு மிராசுதார்களும் பணமும் நில புலமும் உடையவர்களே யன்றி, ஜனக் கட்டுப்பாடு உடையவர்களில்லை. ஆவேசமும், வீரமும் பொருந்திய அம்பலக்காரர்களும், சேர்வை வகுப்பினரும் உதவி செய்தாலொழிய ஒருவர் காரியமும் நிறைவேற வழியில்லை. மேலப்பட்டி செட்டியார் அம்பலக்காரன் முத்துசாமியிடம், கீழப்பட்டி செட்டியாரைப் பற்றி அடிக்கடி புகார் சொல்லி வருவார். கீழப்பட்டி செட்டியார் மேலப்பட்டி செட்டியாரைப் பற்றிப் புகார் சொல்லி வருவார். கல்வி அறிவில்லாதவர்களும் ஏழைகளுமாகிய அந்த இரு நாட்டாண்மைக்காரர்களைத் தங்கள் கையாட்களாகப் போட்டுக்கொண்டு ஒருவர் கொட்டத்தை மற்றவர் அடக்கிவிட வேண்டுமென்பது அவர்களின் அந்தரங்க எண்ணம். ஆனால் அம்பலக்காரரும் சேர்வைக்காரரும் செல்வவந்தர்க ளல்லாவிடினும் சற்று முன் யோசனைக்காரர்கள். ஆதலால் அவர்களின் தாயாதிக் காய்ச்சலென்ற சிக்கலுக்குள் தாங்கள் அகப்பட்டுக் கொள்ளக் கூடாதென்று சர்வ ஜாக்கிரதையாக இருந்தனர்.

ஆனால் முத்துசாமி அம்பலத்தின் மனநிலைமையை யாரறிவார்? தன் கையில் ரொக்கமாகச் சேமித்து வைத்திருந்தது போக, தன் பெண் கலியாணத்திற்கு ரூபாய் ஐயாயிரம் மேற்கொண்டு செலவாகி விட்டது. அதை அவசரக் கடனாக வாங்கித் தான் செலவிட்டான். வாங்கிய கடனை ஒன்றிரண்டு வருஷத்திற்குள் எப்படியும் திருப்பிக் கொடுத்து விட வேண்டியது என்று முடிவு செய்து விட்டான். அம்பலக்காரருக்கு விவசாயத்தைத் தவிர வேறு வருமானமில்லை. செய்து வரும் விவசாயத்தின் கண்டு முதல் வாய்தாவுக்கும் வரிக்கும், மற்ற குடும்பச் செலவிற்குந்தான் சரிக்கட்டி வரும். மேற்கொண்டு வருமானம் வேண்டுமென்றால் கூடுதலான நிலங்கள் பயிர் செய்தல் வேண்டும். முப்போகமும் விளைவு காணும் பகுதி யாதலால், வேறு ஒருவரும் வாரத்திற்கோ, குத்தகைக்கோ பயிரிட நிலம் விட மாட்டார்கள் என்பதும் முத்துசாமிக்குத் தெரியும். முத்துசாமி இவைகளைப் பலவாறு யோசித்துத் தனது ஊர் பெரிய தனக்காரரான வேங்கட கிருஷ்ண செட்டியாரிடம், வாரத்திற்குப் பயிரிட சில ஏக்கர் நிலங்களைக் கேட்கலாமென்ற முடிவிற்கு வந்தான்.

மறு தினம் அதிகாலை முத்துசாமி மிராசுதார் வீட்டை அடைந்தான். அவனைக் கண்ட மிராசுதார் வேங்கட கிருஷ்ண செட்டியார், வெகு மகிழ்ச்சி அடைந்து மனத்தில் பல எண்ணங்களைக் கற்பித்துக் கொண்டார். ஏதோ காரணார்த்தமாகத்தான் அம்பலக்காரர் தம்மிடம் வந்திருப்பார். இந்தச் சமயத்தை நன்கு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற தந்திரக் கருத்துடன், அம்பலக்காரனை வரவேற்று உபசாரம் செய்தார் செட்டியார்.

"உங்க கிட்டத்தான் ஒரு முக்கிய விஷயமாக வந்தேன். வாய் திறந்து கேட்க முடியவில்லை" என்றான் முத்துசாமி.

"பரவாயில்லை. என்ன வேணும் கேளுங்கள். உங்களுக்கெல்லாம் உபகாரம் செய்யத்தானே நானிருக்கிறேன்?"




நச்சுப் பல்

எம்.என்.எம்.பாவலர்

"என் உசிரு இந்த உடலிலே இருக்கும் வரை நீ அந்தப் பயலோடு பேசப்படாது. அவனை மனசாலே நினைக்கவும் கூடாது. மீறினால், பெண்ணென்றும் பார்க்காமல் இந்தக் கொடு வாளாலே உன் தலையைச் சீவிப் போடுவேன். அம்பலக்காரனுக்குப் பெண்ணாப் பிறந்தும் கொஞ்சங்கூட ரோசமில்லையா, உனக்கு? ஜாக்கிரதை! போ! இன்னொரு தரம் அவன் என் கண்ணிலே படட்டும், சொல்றேன்!" என்று கர்ஜித்தான் முத்துசாமி அம்பலம்.

செல்லம்மா முத்துசாமி அம்பலத்தின் ஒரே பெண். செல்லம்மாவுக்கு முன் வாரிசு ஒருவரும் கிடையாது. அதுபோலவே பின் வாரிசும் கிடையாது. அவளை ஆணுக்கு ஆணாகவும் பெண்ணுக்குப் பெண்ணாகவும் வளர்த்து வந்தார்கள் முத்துசாமியும் அவன் மனைவியும். அதற்கடையாளமே செல்லம்மா என்று பெயரிட்டது அவளுக்கு. என்னதான் செல்வமாய் வளர்த்தாலும் தன் மன அபிப்பிராயத்திற்கு விரோதமாக ஒரு ஆண் மகனுடன் செல்லம்மா பேசுவது தப்பிதமாகப்பட்டது முத்துசாமிக்கு. ஆனால் செல்லம்மாவுக்கும் அவள் தாயாருக்கும் அது பிசகாகத் தெரியவில்லை. முத்துசாமி போகிற போக்கு அவர்களுக்குப் பிடிக்கவில்லை யென்றாலும் அவர்களால் என்ன செய்ய முடியும்?

முத்துசாமி அம்பலத்தின் கோபத்தில் ஒரு பக்கம் நியாயமு மிருக்கிறது. அதே சமயத்தில் அநியாயமு மிருக்கிறது. செல்லம்மா ஒரு ஆண் மகனுடன் பேசினது குற்றம்தான் என்றாலும் அவன் வேறு யாருமில்லை. அவன் அவளது சொந்தக் கணவன் தானே! செல்லம்மா வேலாயுதத்திற்குக் கன்னிகாதானமாகக் கொடுக்கப்பட்டவள். தானே இரண்டு வருஷத்திற்கு முன்பு கன்னிகாதானமாகக் கொடுத்த மகளை, கணவனுடன் பேசக் கூடாதென்று முத்துசாமி இன்று கட்டுத்திட்டம் செய்வதும், கழுத்தை அறுப்பேனென்பதும் கொடுமைதான். இவ்விதத் துஷ்டத்தனத்தில் வேலாயுதத்தின் குடும்பத்தினர் ஈடுபடுவோர்கள் என்று முன்பே தெரிந்திருந்தால் முத்துசாமி பெண் கொடுத்திருப்பானா? அதிலும் ஒரே பெண். சொந்தப் புருஷனுடன் பேசவே கூடாது என்று கண்டிதம் செய்யும் அளவிற்கு வேலாயுதம் செய்த தவறு என்ன என்பதையும் நாம் ஆராய வேண்டுமல்லவா?

மேலப்பட்டியில் முத்துசாமி அம்பலம் நாட்டாண்மைக்காரன். ஐந்தாறு அம்பலக்காரர்கள் தலைக்கட்டிற்கும் அவன்தான் அதிகாரஸ்தன். முத்துசாமி உட்காரு என்றால் உட்காருவார்கள், எழுந்திரு என்றால் எழுந்திருப்பார்கள். தப்போ, சரியோ முத்துசாமி அம்பலம் சொல்வதுதான் அவர்களுக்கு வேதவாக்கு.

மேலப்பட்டிக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ளதுதான் கீழப்பட்டி. ராமாயண காலத்தில் இரு பட்டிகளும் ஒரே ஊராக இருந்ததாகவும், சீதை ஸ்நானம் செய்வதற்காக ராமர், தமது வலது கால் பெருவிரலால் ஊருக்கு நடுவே ஒரு பெரிய ஏரியை உண்டாக்கினதாகவும், ஏரிக்குக் கீழ்ப்புறம் இருப்பது கீழப்பட்டி யெனவும், ஏரிக்கு மேற்புறம் இருக்கும் ஊருக்கு மேலப்பட்டி யெனவும் பெயர்கள் ஏற்பட்டதாகவும், கர்ண பரம்பரைக் கதையாக இன்றும் கூறி வருகிறார்கள். அந்த ஏரியின் தண்ணீர் சிறிது மஞ்சள் நிறமாக இருப்பதால் சீதாப் பிராட்டியார் மஞ்சள் குளித்து மூழ்கியதாகக் கூறி அவர்கள் தங்கள் கூற்றுக்கு ஆதாரம் காட்டுவார்கள்.

ஏரிக்குக் கிழக்கே உள்ள கீழப்பட்டியில் ஆறுமுகஞ் சேர்வை அவ்வூருக்கு அதிகாரஸ்தன். பரம்பரையாகவே அவ்வூர் நாட்டாண்மைக்காரன். முத்துசாமி அம்பலத்தைவிட சற்றுப் பூஸ்திதி உடையவன். இரு கிராமத் தலைவர்களும் உறவினர்கள் தான். பந்துக்கள் கலந்து பேசி முத்து

கொண்டானாம்' அந்த வரம் எமனுக முடிந்தது: தனக்கு உரிய மெய் நிறுவிப்போய்: உலகத்தில் யாரும் தசரதனைப்போல் சத்தியத்தைக் காப்பாற்றியதில்லை,—அப்படிக் காப்பாற்றிய சத்தியத்தை உலகத்தில் இருக்கச் செய்துவிட்டுப் போனான்: உம்பரான்: விண்ணுலகத்தை அடைந்தவனானான்.]

தந்தை உயிர் துறந்தான் என்ற செய்தி காதில் விழுந்ததும் ராமனுக்குக் கண்ணும் மனமும் சுழல ஆரம்பித்தன. அப்படியே நிலத்தில் விழுந்தான். சுவாசம் நின்றுவிட்டது. உணர்ச்சியோ இல்லவே இல்லை.

இருநிலம் சேர்ந்தனன்,
இறைஉ யிர்த்திலன்,
உரும்எறி அர(வு)என
உணர்வு நீங்கினன்;
அருமையின் உயிர்வர,
அயாஉ யிர்த்(து),அகம்
பொருமினன் பன்முறை;
புலம்பி னன்அரோ!

[இறை உயிர்த்திலன்: சிறிதும் சுவாசமில்லை; உரும்எறி அரவென உணர்வு நீங்கினன்: இடிவிழுந்த சர்ப்பம்போல் உணர்வற்றவனானான்; அருமையின் உயிர்வர: பக்கத்தில் நின்றவர்கள் மூர்ச்சை தெளிவிப்பதற்கு என்ன என்ன காரியங்களோ செய்தார்கள்,—கடைசியில் ரொம்பக் கஷ்டத்தின் மேல் உணர்ச்சி வந்தது: அயாஉயிர்த்து: ரொம்பவும் பெருமூச்சு விட்டுக் கொண்டு: அகம் பொருமினன் பன்முறை: விட்டு விட்டுப் பல தடவை நெஞ்சு விம்மியது: இப்படி நெடுநேரம் நிகழ்ந்தது: கடைசியில் வாய்விட்டு ஓரே புலம்பலாய்ப் புலம்புகிறான்.]

நாட்டுக்கு எத்தனையோ கஷ்டங்கள் போனாலும் இதர காரணங்களாலும் ஏற்படலாம். ஜனங்கள் இருளுக்குள் கிடந்தவாறாகத் திண்டாடலாம். ஆனால், உன் ஆட்சியில் அவர்களுக்கு யாதொரு கஷ்டமும் இல்லாமல் இருந்ததே!

வேறு

'நந்தாவி ளக்கனைய
நாயகனே, நானிலத்தோர்
தந்தாய்,த னியறத்தின்
தாயே,த யாநிலையே!
எந்தாய்,இ கல்வேந்தர்
ஏறே,இ றந்தனையே!—
அந்தோ!இ னிவாய்மைக்(கு)
ஆருளரே மற்(று)'என்றான்.

[நந்தா விளக்கனைய நாயகனே: குறையாத ஒளியுடைய விளக்கை ஒத்தவனே: தயா நிலையே: கருணைக்கு இருப்பிடமே: எந்தாய்: என் அப்பனே! இகல் வேந்தர் ஏறே: பகையரசருக்குச் சிங்கம் போன்றவனே: இறந்தனையே: உன்னைப் போன்றவர்களுக்குச் சாவு என்பது உண்டா? இனி வாய்மைக்கு ஆர் உளரே மற்று: இனிமேல் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்கு வேறு யார் இருக்கிறார்கள்?]

சோகத்தின் சாயல் செய்யுளின் தொனியிலேயே அற்புதமாய்க் கலந்து கிடக்கிறதல்லவா?





கம்பர் தரும் காட்சி

டி.கே.சி

87. வாய்மைக்கு இனி யார்?

சித்திரகூட பர்வதத்தில் ஒரு காட்சியைப் பார்த்தோம்.

இராமன், தன் பாதத்தில் மூர்ச்சையாய் விழுந்து கிடந்த பரதனை இரு கையாலும் எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு, கண்ணீர் விட்ட வண்ணமாய் நின்றான். வெகு நேரம் அந்த நிலையில் நின்றான். கை கொஞ்சம் தளர்ந்தது.

பரதன் சிறிது விலகிக் கொண்டு எதிரில் நின்றான்.

அவனுடைய சடையையும் மெலிந்த மேனியையும் பார்த்தான் ராமன். பார்க்கச் சகிக்காமல் கண் மூடிக் கொள்ளுகிறது. பிறகு கண்ணைத் திறந்து பார்க்கிறான். மறுபடியும் மூடிக் கொள்ளுகிறது. மறுபடியும் திறந்து பார்க்கிறான்.

> புல்லினன், நின்றவன்
>   புனைந்த வேடத்தைப்
> பல்முறை நோக்கினன்,
>   பலவும் உன்னினான்:
> 'அல்லலின் அழுங்கினை
>   ஐய! வானுடை
> மல்உயர் தோளினான்
>   வலியனோ?' என்றான்.

[புல்லினன்: தழுவி நின்றவனான ராமன்: நின்றவன் புனைந்த வேடத்தை: விலகி நின்ற பரதனது கோலத்தை; பலவும் உன்னினான்: ஏன் இவனுக்கு இவ்வளவு துயரம் என்று என்ன என்னவோ பல காரணங்களை யோசித்தான்; அல்லலின் அழுங்கினை ஐய: பரதனே! அடடா, எவ்வளவு கஷ்டத்துக்கு உள்ளாகி விட்டாய்; வானுடை மல்உயர் தோளினான்: வான் ஏந்தியவனும், மல் யுத்தத்துக்கான தோள் கொண்டுள்ளவனுமான தந்தை தசரத சக்கரவர்த்தி; வலியனோ என்றான்: சௌக்கியமாய் இருக்கிறான் அல்லவா என்று கேட்டான். குறிப்பு:—பரதனது துயரத்தையும் மெலிவையும் பார்த்தவுடனே, எப்படியோ ராமனுக்குத் தந்தையின் ஞாபகம் வந்தது. ஒரு சந்தேகங்கூடப் பிறந்தது. இந்த பாவம் செய்யுளில் அமைந்து இருக்கிறது.]

"தந்தை சௌக்கியந்தான் அல்லவா?" என்று ராமன் கேட்கிறான். பரதன் பதில் சொல்லுகிறான்.

> அரியவன் உரைசெயப்
>   பரதன், 'ஐய! நின்
> பிரிவெனும் பிணியினால்,
>   எனைப் பெற்றஅக்
> கரியவள் வரம்எனும்
>   காலனால், தனக்(கு)
> உரியமெய் நிறுவிப்போய்,—
>   உம்பரான்' என்றான்.

[அரியவன் உரைசெய: ராமன் விசாரிக்க; என்னைப் பெற்ற அக்கரியவள் வரம் எனும் காலனால்: என்னைப் பெற்ற அந்தக் கேடான கைகேயி ஏதோ ஒரு வரத்தை வாங்கிக்



உத்தரவாதமுள்ள வைரம் பொன் வெள்ளி நகைகளுக்கு:-
PAR
P.A.ராஜு செட்டியார் & பிரதர்
போன். 218.A.
கோயமுத்தூர்
தபால் பெட்டி. No. 139.
தந்தி – "ராஜா"

கடித்த மாதவராவ்தான்) தன் எஜமானனின் செருப்பை எடுத்துப் பிராமணர் கையில் கொடுக்கப் போகிறான். சோமநாதம் பிள்ளையை எல்லாரும் 'சோமன்' என்று அழைப்பார்களாதலால் 'சோமன் ஜோடு' என்றால் அவர் அணியும் ஜோடு என்று நினைத்துக் கொண்டு விட்டானாம்!

இன்னும் அநேக இடங்களில் கதைக்குச் சம்பந்தமில்லாத அநேக சம்பவங்கள் நம்மைச் சிரிக்க வைப்பதற்காகவே புகுத்தப்பட்டிருக்கின்றன. இருந்தும், அவை புகுத்தப்பட்ட நல்ல நோக்கத்தைக் கவனிக்கும்போது அதை ஒரு குற்றமாகக் கருதுவதற்கில்லை.

சோமநாதம்பிள்ளை வேஷம் தரித்த ஸ்ரீ சந்தானமும், ஜகதிஷ் வேஷம் தரித்த ஸ்ரீ சகஸ்ரநாமமும் வெகு உணர்ச்சியுடன் நடிக்கிறார்கள். சோமநாதம் பிள்ளை எப்பொழுது பார்த்தாலும் தம் பிள்ளை ஜெயபாலைக் கடிந்து கொண்டே இருக்கிறார். ஜகதிஷூம் எப்பொழுது பார்த்தாலும் தன் மனைவி பத்மாவைக் கடிந்து கொண்டிருக்கிறான். பாவம், இதற்காக இரண்டு பேரும் தொண்டைத் தண்ணீர் வற்றச் சத்தம் போட்டுப் பேச வேண்டியிருக்கிறது.

அவர்கள் போடுகிற சத்தத்துக்கு மேடையிலேயே அவர்கள் கலர் வாங்கிக் குடித்தாலும் பாதகமில்லை. ஜகதிஷாவது "சாராயம் குடிக்கிறேன் பிரம்மாவே" என்ற சாக்கு வைத்துக் கொண்டு கலர் குடித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் பாவம், சோமநாதம் பிள்ளைக்கு அதுவும் இல்லை.

சத்தம் போட்டுப் பேசாத ஜெயபாலும் சாராயம் குடிக்கிறேன் என்று கலர் குடித்துக் கொண்டிருக்கிறான். அதை அவருடைய தம்பியான சிறு பையன் எடுத்துக் கீழே கொட்டி விடுகிறான். இதைப் பார்த்து, "ஐயோ! நல்ல கலரைக் கீழே கொட்டி விடுகிறானே" என்று ஒரு கணம் வருத்தப்பட்டேன். அந்தச் சமயம் மேடை நடிகர்களுக்குக் கலர் சப்ளை செய்யும் ஆசாமி அதே கலரை எனக்கும் கொண்டு வந்து கொடுத்தார். அதைக் குடித்துப் பார்த்த பிறகு அந்தப் பையன் அதைக் கீழே கொட்டினது எவ்வளவு நல்ல காரியம் என்று தெரிந்தது. கலர் அத்தனை மோசம்!

நடிகர்கள் குடித்த கலர்தான் இத்தனை மோசமே யொழிய, நாடகத்தில் கையாளப்பட்ட கலர் (வர்ண) ஜால விசித்திரங்கள் வெகு நன்றாய் இருந்தன.

பொன் விழாவுக்குத் தலைமை வகித்த கொடை வள்ளல் அழகப்பச் செட்டியார் பேசி முடித்ததும் நடிகர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. நாடக சபைக்கு என்று பெரிய, பெரிய வெள்ளிக் கோப்பைகள் வழங்கப்பட்டன. ஆனால் நடிகர்களுக்குக் கிடைத்த தனித் தனிப் பரிசுகளைப் பார்த்தபோது நடந்த விழா பொன் விழாவா, அல்லது வைர விழாவா என்ற சந்தேகம் வந்து விட்டது. ஏனெனில் நடிகர்களுக்கெல்லாம் யாரோ வைர மோதிரங்களாகவே பரிசு அனுப்பியிருந்தார்கள்.

நாடகம் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். வழக்கம்போல் சரசு வீட்டுச் சாவியை வழியில் தொலைத்து விட்டு வந்து விட்டாள். கடைசியில் எப்படியோ மறு சாவி போட்டு வாசல் கதவைத் திறந்தேன். திறந்ததும், முதல் காரியமாக சரசுவைப் பார்த்து, "இது உனக்கு முதல் தடவை. இன்னொரு தடவை சாவியைத் தொலைத்தாயோ, அவ்வளவுதான்!" என்றேன்.

ஹாஸ்ய கலா சக்கரவர்த்தி

பிரம்மஸ்ரீ விகட வித்வான் திருவிசநல்லூர் ராமஸ்வாமி சாஸ்திரிகள் சக்கரவர்த்தியாகிவிட்டார். அதுவும் வெறும் சக்கரவர்த்தி அல்ல, ஹாஸ்ய கலா சக்கரவர்த்தி. சென்ற பல்லாண்டு காலமாகத் தம்முடைய விகடக் கச்சேரிகளால் நம்மை யெல்லாம் சிரிப்பாய்ச் சிரிக்க அடித்ததற்காக எழும்பூர் ஜகன்னாத பக்த சபையார் அவரைச் சக்கரவர்த்தியாக்கி விடுவது என்று தீர்மானித்தார்கள்.

இந்தச் சக்கரவர்த்தியின் முடிசூட்டு விழா சென்ற ஞாயிற்றுக்கிழமை, எழும்பூர் ஜகன்னாத பக்த சபையில், அந்த சபையின் 29-வது ஆண்டு விழாக் கொண்டாட்டத்துடன் கூட நடந்தது. முடிசூட்டு விழாவை ஸ்ரீ வி. வி. ஸ்ரீனிவாச அய்யங்கார் தலைமை வகித்து நடத்தி வைத்தார். ஹாஸ்ய கலா சக்கரவர்த்தியின் அருமை பெருமைகளை ஒரு பாஷையில் சொன்னால் போதாது. குறைந்தது இரண்டு பாஷைகளிலாவது சொல்ல வேண்டும் என்று நினைத்ததுபோல் ஆங்கிலம், தமிழ், ஆகிய இரண்டு பாஷைகளிலும் உள்ள ஒரு உபசாரப் பத்திரம் சக்கரவர்த்திக்கு வாசித்துக் கொடுக்கப்பட்டது. விகட வித்வானை எழுத்தில் பாராட்டியது போதாது என்று ஸ்ரீ பாபநாசம் சிவன் உள்ளிட்ட அநேக நண்பர்கள் அவரை வாய்மொழியாகவும் பாராட்டினார்கள். இத்தனைப் பாராட்டுதலுக்கும், ஹாஸ்ய கலா சக்கரவர்த்தி என்ற பட்டத்துக்கும் தாம் உரியவர் தாம் என்பதை ஹாஸ்ய கலா சக்கரவர்த்தியான ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் தம்முடைய பேச்சினாலும், கச்சேரியாலும் நிரூபித்தார். ஹாஸ்ய கலா சக்கரவர்த்தியும், அவரைச் சக்கரவர்த்தியாக்கிய ஜகன்னாத பக்த சபையும் நீடூழி வாழ்க!

இழந்த காதல்

நாடோடி

நான்கு நாட்களுக்கு முன்னர் அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யரைப் பார்ப்பதற்காகப் போயிருந்தேன். நான் போயிருந்த சமயத்தில் அண்ணாசாமி அய்யர் வீட்டுக் குழந்தைகள் ஏக ஆட்டி அடித்துக் கொண்டிருந்தன. நாற்காலியிலிருந்து கீழே விழுந்து தன் கால் ஒன்றையும், நாற்காலியின் கால் இரண்டையும் ஒடித்தது ஒரு குழந்தை. உடனே அண்ணாசாமி அய்யர் அதைப் பார்த்து, "இது உனக்கு முதல் தடவை. இன்னொரு தடவை நாற்காலியை உடைத்தாயோ, எனக்குக் கெட்ட கோபம் வரும்" என்று சொன்னார்.

இது மாதிரி ஒவ்வொரு குழந்தை பண்ணின ஆட்டிக்கும் அவர், "இது உனக்கு முதல் தடவை" என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஆகவே அவரைப் பார்த்து, "சுவாமி! 'இது உனக்கு முதல் தடவை' என்னும் பதப் பிரயோகத்தைக் கேட்பது இது எனக்கு நூறும் தடவை. இதை எங்கிருந்து பிடித்தீர்கள்?" என்று கேட்டேன். இதைக் கேட்டதும் அண்ணாசாமி அய்யரின் கண்கள் ஆச்சரியத்தினால் விரிந்தன.

"என்ன ஐயா! நீர் இருப்பது இந்தச் சென்னைப் பட்டணம்தானா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆமாம்" என்றேன்.

"இந்த ஊரில் இருந்து கொண்டேதானா இழந்த காதல் நாடகத்தை இன்னும் பார்க்கவில்லை?"

"என்னை யாரும் கூப்பிடவில்லை. அதனால் போகவில்லை."

"ரொம்ப அழகாய் இருக்கிறது! நாடகத்திற்கு வாருங்கள் என்று வெற்றிலை பாக்கு வைத்துக் கூப்பிடுவார்களாக்கும்" என்று குத்தலாகக் கேட்டார் அண்ணாசாமி அய்யர்.

ஆனால் என்ன ஆச்சரியம்! அன்று சாயந்திரம் இந்த நாடகத்துக்குப் பொன் விழா நடப்பதாகவும், அதற்கு நான் கட்டாயம் வந்துதான் ஆக வேண்டும் என்றும் அழைப்பு வந்து விட்டது!

நானும் சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடாமல் சரசு, அனு சமேதம் புறப்பட்டேன்.

"இது உனக்கு முதல் தடவை" என்னும் வாக்கியம் மேற்படி நாடகத்தில் தான் வருகிறது. 'வில்லன்'ஆக நடிக்கும் ஸ்ரீ சகஸ்ரநாமம்தான் அடிக்கடி இந்த வாக்கியத்தைச் சொல்கிறார். ஒரே ஆசாமியிடம் இருபதாவது தடவை சொல்லும் போது கூட, "இது உனக்கு முதல் தடவை" என்கிறார். அப்பொழுது கொட்டகையில் உண்டாகும் சிரிப்பு சொல்லி முடியாது.

சோமநாதம் பிள்ளையிடம் பத்மா என்னும் ஒரு வளர்ப்புப் பெண் வளர்ந்து வருகிறாள். அவளை சோமநாதம் பிள்ளையின் குமாரனான ஜெயபால் காதலிக்கிறான். பத்மாவும் ஜெயபாலையே காதலிக்கிறாள். இருந்தும் சோமநாதம் பிள்ளை பத்மாவை ஜகதீஷ் என்னும் தத்தாரிக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து விடுகிறார். காரணம், பத்மாவின் தகப்பனார் தாம் இறக்கும் போது பத்மாவை ஜகதீஷுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று கூறிவிட்டுப் போனாராம்.

தான் காதலித்த பத்மாவை இழந்ததனால் ஜெயபால் மன முடைந்து குடிக்க ஆரம்பிக்கிறான். தத்தாரியும் மனைவியைக் கவனிக்காமல் குடி முதலிய எல்லாக் கூத்துகளும் அடிக்கிறான். பத்மாவை ஹிம்சைப் படுத்துகிறான். கடைசியில் ஜெயபாலும் பத்மாவும் சகோதர, சகோதரி முறையில் சந்தித்துப் பேசுவதைக் கண்டு சந்தேகித்து, ஜெயபாலின் கண்களைப் பிடுங்கி விடுகிறான். பத்மாவையும் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொல்லுகிறான். இதுதான் கதை.

இந்த அருவருப்புத் தரும் கதையை இந் நாடக சபையார் தங்கள் உணர்ச்சி மிகுந்த நடிப்பினாலும், கண்ணைக் கவரும் சீன் ஜோடனைகளாலும், கண் மூடிக் கண் திறப்பதற்குள் மாறும் 'டர்னிங் சீன்'களாலும் எல்லாரும் ரசிக்கும்படி செய்து விட்டனர்.

லக்ஷ்மிகாந்தனில் நம்மைச் சிரிக்க வைத்தது போலவே இந்த நாடகத்திலும் நடிகர்கள் அங்கங்கே நம்மைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறார்கள்.

கல்யாணத்துக்கு நாள் பார்த்துச் சொல்வதற்காக வந்த பிராமணர் வெறும் கையுடன் போகக்கூடாது என்று சோமநாதம் பிள்ளையை 'சோமன் ஜோடு' கேட்கிறார். உடனே அவருடைய அசட்டு வேலைக்காரன் (வேறு யார்? லக்ஷ்மிகாந்தனில் கோவிந்தனாக

மரக் கட்டைத் தெப்பத்தில் வந்து இறங்கினோம். பாறைகளைப் பார்த்ததும் அந்த மனிதர்களில் ஒருவர் என்ன சொன்னார், தெரியுமா? உங்களைப் போலவே, 'இந்தப் பாறைகளைக் குடைந்து எவ்வளவு அழகான கோயில்கள் அமைக்கலாம்!' என்றார். எனக்கு அதிசயமா யிருந்தது. 'என் குருவும் அப்படித்தான் சொன்னார்!' என்றேன். 'யார் உன் குரு?' என்று அந்த மனிதர் கேட்டார். உங்கள் பெயரைச் சொன்னதும் அவர் மிகவும் ஆச்சரியப் பட்டார். உங்களைக் கூட அவருக்குத் தெரியும் போலிருக்கிறது, குருவே!''

''அப்படி யார், என்னைத் தெரிந்தவர்? பாறைகளைப் பார்த்ததும் கோயில் ஞாபகம் வரக்கூடியவர் நான் அறிந்தவரையில் என்னைத் தவிர ஒரே ஒருவர்தான் உண்டு. அவர் இங்கே வருவதற்கு நியாயம் இல்லையே! வேறு யாரா யிருக்கும்?'' என்றார் ஆயனர்.

''அவர்கள் இந்த ஆற்றங் கரை ஓரத்திலேதான் எங்கேயோ படுத்துத் தூங்கிக்கொண் டிருக்கிறார்கள். நான் தேடிப் பிடித்து அழைத்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் முன்னால் போங்கள், குருவே!'' என்றான் குண்டோதரன்.

இதற்குள் படகுகள் வராக நதியில் பாதிக்கு மேல் கடந்து சென்று விட்டபடியால், மண்டபப் பட்டு வாசிகள் ஒருவருக்கொருவர், ''திரும்பிப் போகலாமா?'' என்று கேட்டுக் கொண்டு, கிராமத்தை நோக்கிக் கிளம்பத் தொடங்கினார்கள். அவர்களுடன் ஆயனரும் சிவகாமியும் புறப்பட்டுச் சென்றார்கள்.

போகும்போது அந்தக் கிராம வாசிகள் மாமல்லரின் அரிய குணங்களைப் பற்றியும், பரஞ்சோதிக்கும் அவருக்கும் உள்ள சிநேகத்தைப் பற்றியும் பாராட்டிப் பேசிக்கொண்டு போனது சிவகாமியின் காதில் விழுந்து கொண்டிருந்தது. மாமல்லரின் பிரிவினால் வறண்டு உலர்ந்து போன அவள் உள்ளத்தில் அந்த வார்த்தைகள் இன்ப மழைத் துளிகளைப் போல் விழுந்து கொண்டிருந்தன.

* * *

ஆயனர் முதலியவர்களைப் பிரிந்து நதிக் கரையோடு சென்ற குண்டோதரன் நிலா வெளிச்சத்தில் அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டே சென்றான். பாறைகள் நிறைந்த இடத்தை அணுகியபோது இன்னும் சர்வ ஜாக்கிரதையாக முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டு சென்றான். சட்டென்று பாறை மறைவிலிருந்து இருவர் வெளிப்பட்டதும் ஒரு கணம் திகைத்து விட்டு, அவர்கள் இன்னார் என்று தெரிந்து கொண்டதும், எதிரில் வணக்கத்துடன் நின்றான்.

''குண்டோதரா! நல்ல காரியம் செய்தாய்! எங்களை இப்படிக் காக்க வைத்து விட்டுப் போயே போய் விட்டாயே? நீ உயிரோடிருக்கிறாயா, அல்லது யமலோகத்துக்கே போய் விட்டாயா என்றே எங்களுக்குச் சந்தேகம் வந்து விட்டது!'' என்றார் ஒற்றர் தலைவர் சத்ருக்னர்.

''எஜமானே! உங்கள் புண்ணியத்தினால் உயிர் பிழைத்தேன். கொஞ்சம் அஜாக்கிரதையா யிருந்திருந்தால், நிஜமாகவே யமலோகத்துக்குப் போயிருப்பேன். இந்தக் கூரிய கத்தி என் நெஞ்சிலே பதிந்திருக்கும்!'' என்று குண்டோதரன் கூறி, நாகவடிவமாகப் பிடி அமைந்திருந்த ஒரு அபூர்வமான சிறு கத்தியை எடுத்து நீட்டினான்.





லாரும் படகில் ஏறிக்கொண்டு விட்டார்கள். பாருங்கள், ஐயா! இராஜ குலத்தினரை மட்டும் நம்பவே கூடாது. மாமல்லர் என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே கிளம்பி விட்டார் பார்த்தீர்களா? ஏதடா, மூன்று நாளாய் உயிர்க்குயிரான சிநேகிதனைப் போலப் பழகினோமே என்ற ஞாபகம் கொஞ்சமாவது இருந்ததா?"

இவ்விதம் மூச்சு விடாமல் குண்டோதரன் பேசியதை யெல்லாம் ஒரு காதினால் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமி, "ஆமாம், குண்டோதரா! இராஜ குலத்தவரை நம்பவே கூடாது தான்!" என்றாள்.

"அப்படி யெல்லாம் சொல்லாதே, சிவகாமி! நமது மாமல்லரைப் போல் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் உலகத்திலேயே இருக்கமாட்டார்கள். அதிருக்கட்டும், குண்டோதரா! நாகநந்தி இந்தக் கிராமத்துக்கு வந்தாரென்று சொல்கிறாய்? நான் பார்க்கவில்லையே?" என்றார்.

"நாகப் பாம்பு அவ்வளவு சுலபமாக வெளியிலே தலை காட்டிவிடுமா? புற்றிலே ஒளிந்து கொண்டிருக்கும்" என்றான் குண்டோதரன்.

"பெரியவர்களைப் பற்றி இப்படியெல்லாம் சொல்லாதே, குண்டோதரா! நாகநந்தி பெரிய மகான். உண்மையில், அவரும் இந்தக் கிராமத்திலேயே தங்கி விட்டால் எனக்கு வெகு சந்தோஷமாயிருக்கும். பாறைக் கோயில்கள் அமைப்பது பற்றி அவர் நல்ல நல்ல யோசனைகள் கூறுவார்" என்றார் ஆயனர்.

பிறகு, "இன்னும் யாரோ இரண்டு பேர் நாகநந்தியைத் தேடிக் கொண்டு வந்தார்கள் என்றாயே; அவர்கள் யார்? இப்போது அவர்கள் எங்கே?" என்று கேட்டார்.

"குருநாதரே! அந்த மனிதர்கள் கூடச் சிற்பக் கலையிலே ரொம்பப் பிரியம் உள்ளவர்கள் போலிருக்கிறது. நம்முடைய பானைத் தெப்பம் பாறையில் மோதி உடைந்ததே, அதே இடத்தில்தான் நாங்களும்

கண்டு, "அப்பனே! இத்
தனை நேரம் எங்கே
போயிருந்தாய்?" என்று
கேட்டார்.

"அதை ஏன் கேட்
கிறீர்கள், போங்கள்!
அக் கரைக்கு நான்
போய்த் தளபதியிடம்
மாமல்லர் இங்கு பத்
திரமா யிருப்பதைத்
தெரிவித்து விட்டுத்
திரும்பினேன். தளபதி
யும் வீரர்களும் படகுகள்
சம்பாதித்துக் கொண்டு
வருவதற்குள்ளே நான்
முன்னால் வந்துவிட
வேண்டுமென்றுதான்
விரைந்து வந்தேன்.
வந்து பார்த்தால், ஆற்
றங்கரையில் நான் கட்டி
விட்டுப் போன பானைத்
தெப்பத்தைக் காணோம்.
மாலை நேரத்து மங்க
லான வெளிச்சத்தில்
யாரோ ஒருவர் தெப்பத்
தைச் செலுத்திக்
கொண்டு இந்தக் கரை
யண்டை வந்து கொண்
டிருந்தது தெரிந்தது.
மொட்டைத் தலையையும்
காவித் துணியையும்
பார்த்தால், புத்த பிக்ஷு
மாதிரி இருந்தது. நம்ம
நாகநந்தி யடிகள்தானாக்
கும் என்று கூப்பிட்டுக்
கூப்பிட்டுப் பார்த்தேன்.
பிக்ஷு திரும்பிப் பார்க்
கவே இல்லை. எனக்கு
அசாத்திய கோபம்
வந்து விட்டது. உலகத்
திலே யுள்ள காவித்



துணி அணிந்த புத்த பிக்ஷுக்களை
யெல்லாம் வாயில் வந்தபடி உரத்த
குரலில் திட்டினேன். என்னுடைய
குரலைக் கேட்டுவிட்டு, நதிக் கரை
யோடு வந்த இரண்டு பேர், என்
னிடம் வந்து 'என்ன அப்பா
சமாசாரம்?' என்று விசாரித்தார்கள்.
நான் விஷயத்தைச் சொன்னேன்.
நாகநந்தி பிக்ஷுவைத் தேடிக்
கொண்டுதான் அவர்களும் வந்
தார்கள் என்று தெரிந்தது. அப்புறம்
நாங்கள் மூன்று பேருமாக மரக்
கட்டைகளையும் கொடிகளையும்
கொண்டு தெப்பம் கட்டிக்கொண்டு
இக் கரைக்கு வந்து சேர்ந்தோம்.
உடனே, அவசர அவசரமாக
நமது மடத்துக்கு ஓடி வந்து பார்த்
தால், அதற்குள் மாமல்லர் புறப்பட்டு
விட்டார் என்றும், நீங்களும் வழி
விடப் போயிருக்கிறீர்கள் என்றும்
தெரிந்தது. மறுபடியும் இவ்விடம்
ஓடி வந்து பார்த்தால், அதற்குள் எல்

"ஆம், தளபதி! என்னைச் சிறைப்படுத்தியே கொண்டு போங்கள். படையெடுத்து வரும் பகைவர்களுக்குப் பயந்து கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளும் நாட்டிலே குமார சக்கரவர்த்தியாயிருப்பதைக் காட்டிலும் சிறையாளியாயிருப்பதே மேல்!" என்று மாமல்லர் கூறி, மார்பில் அணிந்திருந்த ஆபரணங்களையும், இடுப்பில் செருகியிருந்த உடைவாளையும் கழற்றிக் கீழே எறிந்தார்.

அப்போது பரஞ்சோதியும் தமது உடைவாளையும் தலைப்பாகையையும் எடுத்துத் தரையில் எறிந்து விட்டுச் சொன்னார்: "எனக்கும் இந்தத் தளபதி உத்தியோகம் வேண்டியதில்லை. தம்மை நம்பி வந்த படை வீரர்களை நட்டாற்றிலே விட்டு விட்டு, ஒரு நாட்டியக்காரப் பெண்ணின் காதலைத் தேடி ஓடும் குமார சக்கரவர்த்தியின் கீழ்த் தளபதியாயிருப்பதைக் காட்டிலும் 'நமப்பார்வதி பதயே! ஹர ஹர மகாதேவா!' என்று பஜனை செய்து கொண்டு ஊர் ஊராய்ப் போகலாம். இதோ நான் கிளம்புகிறேன். நீங்களும் உங்கள் வீரர்களும் எப்படியாவது போங்கள்!"

மாமல்லர் சற்று நேரம் பூமியையும் சற்று நேரம் வானத்தையும் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "தளபதி! கிளம்புங்கள் போகலாம். நமக்குள் விளையாட்டுச் சண்டை போட்டுக் கொண்டிருப்பதற்கு இது தருணமல்ல. காஞ்சிமா நகரை நெருங்கிப் பகைவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தாமற் போனால் நீங்களும் நானும் கையிலே வாள் பிடித்து என்ன பயன்? நான் என் தந்தையிடம், கோட்டைக் கதவைச் சாத்தக் கூடாதென்றும், காஞ்சிக்கு வெளியே பகைவர்களுடன் போர் நடத்தியே தீர வேண்டும் என்றும் கோரப் போகிறேன். நீர் என்னை ஆமோதிப்பீர் அல்லவா?" என்றார்.

பரஞ்சோதி ஒரு கணம் யோசித்து விட்டு, "ஐயா! மகேந்திர பல்லவர் தங்களைப் பெற்றெடுத்த தந்தை; அவரிடம் சண்டை பிடித்து எதையும் தாங்கள் கேட்கலாம். ஆனால், பல்லவேந்திரர் என்னுடைய தந்தையும், சக்கரவர்த்தியும், சேனாதிபதியும் மட்டும் அல்ல; அவரே என்னுடைய கடவுள். அவருடைய சித்தம் எதுவோ, அதுதான் என்னுடைய விருப்பம். அதற்கு மாறாக என்னால் ஒன்றும் சொல்லவும் முடியாது; செய்யவும் முடியாது. ஆனால் ஒன்று கூறுகிறேன். தங்களுடைய தந்தையின் கட்டளை பெற்றுத் தாங்கள் பகைவர்களுடன் போரிடச் செல்லும் பட்சத்தில், எங்கே, எப்போது, எந்த நிலைமையில் தாங்கள் சென்றாலும் தங்களுக்கு ஒரு அடி முன்னாலே நான் இருப்பேன். என் உடம்பில் உயிர் உள்ளவரையில் இந்த வாக்கை மீற மாட்டேன். ஆனால், நீங்கள் மட்டும், பாதிச் சண்டையின் போது, சிவகாமி தேவியின் காதலை நினைத்துக் கொண்டு, போர்க்களத்திலிருந்து ஓடிவிடக் கூடாது!" என்றார்.

மாமல்லர் புன்னகை புரிந்து, "தளபதி! சிவகாமியின் காதல் போர்க்களத்திலிருந்து புறங்காட்டி ஓடச் செய்யும் காதல் அல்ல; வாருங்கள் போகலாம். வழியில் உங்களுக்கு எல்லாம் விவரமாகச் சொல்கிறேன்" என்றார்.

'உடம்பு இரண்டு; உயிர் ஒன்று' என்று சொல்லக் கூடியவாறு சில தினங்களுக்குள்ளே ஏகமாகிவிட்ட அந்த நண்பர்கள் இருவரும் ஆயத்தமாக நின்ற குதிரைகள் மீதேறிக் 'கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகரை' நோக்கி விரைந்து சென்றார்கள்.

அத்தியாயம் 42

பிழைத்த உயிர்

வராக நதியில் சென்று கொண்டிருந்த படகுகளையே சிவகாமி உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கையில், ஆயனர், பின்னால் மூச்சு வாங்க ஓடி வந்தது யார் என்று திரும்பிப் பார்த்தார். குண்டோதரன் பின்னால் நிற்பதைக்

குதிரைகளுக்குத் தீனி போட்டுக் கவனிக்கும்படி கட்டளை யிட்டேன். ஆறு காத தூரம் ஒரே மூச்சில் நாம் போக வேண்டும் அல்லவா?'' என்றார் தளபதி பரஞ்சோதி.

இருவரும் பல்லவர் படை யருகே சென்றபோது, "பல்லவ குமாரர் வாழ்க! வீர மாமல்லர் வாழ்க வாழ்க!'' என்ற கோஷம் ஆயிரம் கண்டங்களிலிருந்து கிளம்பி நாலா பக்கமும் எதிரொலி செய்தது.

"கண்ணபிரான் எங்கே?'' என்று மாமல்லர் மறுபடியும் கேட்டார்.

"படைகைக் கண்டவுடனே ரதத்தைப் பூட்டிப் புறப்பட ஆயத்தமா யிருக்கும்படி சொல்லி யிருந்தேன்! காஞ்சிக்குப் போவதில் எல்லாரையும் விடத் துடியா யிருப்பவன் கண்ணபிரான்தான்; பாவம்! அவனுக்குக் கமலியே ஞாபகம்......''

இப்படிப் பரஞ்சோதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அணி வகுத்த படையிலிருந்து ஒரு வீரன் முன்னால் வந்து நின்றான்.

"வரதுங்கா! என்ன சேதி?'' என்று பரஞ்சோதி கேட்டார்.

"தளபதி! தாங்கள் இங்கிருந்து சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் இங்கு இரண்டு வீரர்கள் குதிரை மீது வந்தார்கள். அவர்கள் ரதத்துடன் கண்ணபிரானையும் பத்துப் போர் வீரர்களையும் அழைத்துச் சென்றார்கள்......''

"என்ன? கண்ணபிரானை அழைத்துச் சென்றார்களா?'' என்று பரஞ்சோதி பரபரப்புடன் கேட்டார்.

"ஆம்; தளபதி! அவசரமாகக் காஞ்சிக்குப் போக வேண்டும் என்று சொன்னார்கள்......''

"அந்த வீரர்கள் யார்? தெரியாதா?......''

வரதுங்கன் சற்றுத் தயங்கி விட்டு, "தூதுவர்களில் ஒருவர், தமது பெயர் வஜ்ரபாகு என்று சொன்னார். இன்னொருவர் ஒற்றர் படைத் தலைவர் சத்ருக்னர்போலத் தோன்றியது. சிங்க இலச்சினை காட்டியபடியால் கண்ணபிரானையும், வீரர்களையும் அனுப்பினேன். இதோ, தளபதிக்கு அவர்கள் கொடுத்த விடேல் விடுகு*!'' என்று கூறி ஒரு ஓலையை நீட்டினான்.

வஜ்ரபாகு என்று சொன்னவுடனேயே பரஞ்சோதியும் மாமல்லரும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். வந்தவர் சக்கரவர்த்திதான் என்று இருவருக்கும் தெரிந்து போய் விட்டது.

பரஞ்சோதி அவசரமாக ஓலையை வாங்கி நிலா வெளிச்சத்தில் பார்த்தார்.

"அருமைப் புதல்வன் தளபதி பரஞ்சோதிக்கு மகேந்திர போத்தரையர் எழுதுவது: நான் சௌக்யம். துரோகி — பயங்காளி— துர்விநீதன் மழவராயக் கோட்டையில் சிறையில் இருக்கிறான். வாதாபிப் படை திருப்பதியைத் தாண்டி விட்டதாம். மாமல்லனை அழைத்துக் கொண்டு ஒரு கணம் கூட வழியில் தாமதியாமல் காஞ்சி வந்து சேரவும். மாமல்லன் வருவதற்கு மறுத்தால் இந்தக் கட்டளையைக் காட்டி அவனைச் சிறைப் படுத்திக் கொண்டு வரவும்.''

இதற்குக் கீழே விடை வேல் முத்திரை யிட்டிருந்தது. முத்திரைக்குக் கீழே மறுபடியும் எழுதியிருந்தது:

"ஒரு வேளை நீங்கள் வருவதற்குள் கோட்டைக் கதவு சாத்தியாகி விட்டால், புத்தரின் முதுகைத் தியானம் செய்யவும்.''

பரஞ்சோதி படித்துவிட்டு ஓலையை மாமல்லரிடம் கொடுத்தார்.

"இது நிஜ ஓலைதானே! 'வஜ்ரபாகு வேலை' ஒன்றும் நடுவில் நடைபெறவில்லையே?'' என்று சொல்லிக் கொண்டே மாமல்லர் ஓலையை வாங்கிப் பார்த்தார்.

படித்து விட்டுப் பரஞ்சோதியை நோக்கினார்.

"பல்லவ குமாரா! தொந்தரவு கொடுக்காமல் உடனே கிளம்புகிறீர்களா? உங்களைச் சிறைப்படுத்தக் கட்டளை யிடட்டுமா?'' என்று தளபதி பரஞ்சோதி வேடிக்கை கலந்த குரலில் கேட்டார்.

---

* விடை + வேல் + விடுகு: அதாவது, ரிஷபமும் வேலும் அடையாளமிட்ட பல்லவ சக்கரவர்த்தியின் ஆக்ஞை.

சிவகாமியின் சபதம்

அத்தியாயம் 41

வாக்குவாதம்

நள்ளிரவைப் பட்டப் பகலாகச் செய்த பால் நிலவில், படகுகள் வராக நதியைத் தாண்டி அக்கரையை அடைந்தன.

கரை சேரும் வரையில் மாமல்லர் பேசவில்லை. பூர்த்தி யடைந்த காதலினால் கனிந்திருந்த அவருடைய உள்ளம் கனவு லோகத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

யுத்தம் முடிந்த பிறகு,—வாதாபியின் அரக்கர் படையை ஹதம் செய்து அழித்து வெற்றிமாலை சூடிய பிறகு,—காஞ்சியில் தாமும் சிவகாமியும் ஆனந்தமாகக் கழிக்கப் போகும் நாட்களைக் குறித்த மனோ ராஜ்யத்தில் அவர் ஆழ்ந்திருந்தார். பாலாற்றில், இது மாதிரியே வெண்மதி தண்ணிலவைப் பொழியும் இரவுகளில், தானும் சிவகாமியுமாகப் படகிலே ஆனந்தமாய் மிதந்து செல்லப் போகும் நாட்களைப் பற்றி அவர் எண்ணமிட்டார்.

அவர் மனம் அப்போது சிறிதளவும் குறை யில்லாமல் நிறைந்திருந்தது. விடை பெற்றுக் கொண்டு புறப்படும்போது சிவகாமி உற்சாக மில்லாமல் ஒருமாதிரி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்றதையும், அதைக் கண்டு தனக்குக் கோபம் வந்ததையும் எண்ணினார். போர்க் களத்துக்குக் கிளம்புகிற பரபரப்பினால் தான் உற்சாகமாயிருப்பது இயல்புதான்; — ஆனால் சிவகாமி அப்படி யிருக்க முடியுமா; — தம்மைப் பிரிவதில் அவளுக்கு மனச் சோர்வு உண்டாகாமல் இருக்குமா; — அதற்காகத் தமக்குக் கோபம் வந்தது என்ன பைத்தியக்காரத்தனம் என்றெல்லாம் அவர் சிந்தித்தார்.

படகு தடார் என்று கரையில் மோதி நின்றதும், மாமல்லரும் கனவு லோகத்திலிருந்து பூவுலகத்துக்கு வந்தார். கரையில் சற்றுத் தூரத்தில் பறந்து கொண்டிருந்த ரிஷபக் கொடியையும், அதைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த பல்லவர் படையையும் பார்த்தார். தூர்விநீதனைத் தூரத்திக்கொண்டு, தம்முடன் வந்த வீரர்களில் மிகப் பெரும்பான்மையோரும் அங்கிருப்பதைக் கண்டு அவருக்குக் குதூகலம் உண்டாயிற்று.

சட்டென்று மாமல்லருக்குக் கண்ணபிரானின் ஞாபகம் வந்தது. படகிலிருந்து கீழே இறங்கும் போதே, "தளபதி! கண்ணபிரான் எங்கே? அவன் உங்களுடன் வருகிறேன் என்று சொல்லவில்லையா?" என்று கேட்டுக் கொண்டே இறங்கினார்.

"சொல்லாமலிருப்பானா? தானும் வருவதாகத்தான் பிடிவாதம் பிடித்தான். நான் தான் இங்கேயே இருந்து

கல்கி



சிதம்பரம் ஆருத்ரா தரிசனம் 30-12-44

தில்லையம்பலத்தின் திருக் காட்சிகளையும், நடராஜர் ஆலயத்தின் உன்னத கோபுரங்களையும், நிருத்திய சபை, ராஜ சபை முதலிய மண்டபங்களையும், அவைகளின் அற்புத சிற்பங்களையும், சிவ கங்கையில் நீராடும் காட்சியையும், ரத உத்ஸவத்தையும், பஞ்ச மூர்த்திகள் ஊர்வலம் வருவதையும், தேவர்களும் மனிதர்களும் திரு நடனக் காட்சியைக் கண்டு களிப்பதையும் எங்கள் பிலிம்களில் பார்க்கலாம்.



தென்னிந்தியாவின்

திருக்கோயில்களையும் திருவிழாக்களையும்

வெள்ளித்திரையில் கண்டு களியுங்கள்

நம் நாட்டின் சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரங்களையும், புண்ணிய க்ஷேத்திரங்களையும், தேவாலயங்களையும், அவைகளின் அற்புதச் சிற்பங்களையும், படே படே திருவிழாக்களையும், நம் புராதனக் கலாசாரங்களையும் தென்னிந்திய பிரபல காமிரா நிபுணர் ஸ்ரீ என். சங்கர சுப்ரமணிய அய்யர் B.A.B.L. மிகவும் உன்னதமாக சினிமாப் படத்தில் பிடித்திருக்கிறார். இச் சலனப் படங்கள் 16 mm அகலமுள்ள சிறிய சைஸ் பிலிமில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இப் படங்களைப் பார்ப்பதற்கு நீங்கள் அடிபட்டும், மிதிபட்டும், சினிமாக் கொட்டகைகளின் சிகரெட் புகையில் மூச்சுத் திணறவும் வேண்டாம். உங்க வீட்டில் 16 mm சைஸ் வீட்டுப் புரொஜக்டர் இருந்தால் இப் பிலிம்களின் பிரதிகளை நீங்கள் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். இல்லாவிட்டால் உங்கள் வீட்டிலோ, பள்ளிக்கூடத்திலோ, சங்கத்திலோ சொல்ப கட்டணத்திற்கு இப் படங்களை திரையில் காட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம். விபரங்களுக்கும் இன்னும் இதர பாரத நாட்டின் மகிமையைப் பற்றிய பிலிம்களுக்கும் எங்களுக்கு எழுதுங்கள்.

புரொஜக்ஷன் ஆப் இந்தியா பிக்சர்ஸ்

கல்விப் படங்களைத் தயாரிப்பவர்கள்.

2-45, ராயப்பேட்டை ஹைரோடு,

ராயப்பேட்டை :: சென்னை.



வான சஞ்சாரம்

இசைத் தேனீ

ராகம், தானம் பல்லவி இவைகளை விசேஷ யோக்யதையுடன் கையாளுபவர் யாராவது இருக்கிறார்களா யென்றால் அவர் வித்வான்களுக்கு வித்வானான டைகர் வரதாசாரியார்தான். 6௳ சென்னை நிலையம் அவர் பாட்டினால் பெருமை யடைந்தது. ஸஹானாவை ஆலாபனைக்கு எடுத்துக் கொண்டு தானத்திலும் பல்லவியிலும் அதி சாமர்த்தியமான வேலைப்பாடுகளைக் காட்டினார். சாரீர சம்பத்தினால் பாமரரை எளிதில் ரஞ்சிக்கும் தன்மையல்லாது ஞானபாவப் பெருக்கினால் ஞானஸ்தர்களை பிரமிக்க வைக்கும் சங்கீதம். வழக்கம்போல் நுட்பமான பிடிகளும் வக்ர சஞ்சாரங்களும் உள்படக் கற்பனை நிறைந்ததா யிருந்தது. வயலின் பக்கவாத்தியம் வாசித்தவர் திறமைசாலியாயினும் சிறிது பொறுமையுடன் பின்னணியாய் வாசித்திருந்தால் மேம்பட்டிருக்கும்.

சென்ற வார முதல்தர கானங்களில், சென்னையில் பாடிய சாத்தூர் சுப்பிரமணியனது ஒன்று. நன்கு உதவும் அவர் சாரீரம், சாதாரண மேடைக் கச்சேரிகளை விட, ரேடியோவில் தெளிவாயும், கனிப்பாயும் கேட்டது. ஸிம்மேந்திரமத்யமும் தோடியும், மனம் கவர்ந்தன. ஸ்ரீரஞ்சனியும், அடாணாவும் அழகா யிருந்தன. நல்ல 'பிளான்', விளைவு குழைவுகள், பிர்க்காப் பொழிவு, கற்பனை நிறைந்த சரளமான சஞ்சாரங்கள், எல்லாம் அமைந்திருந்தன. தோடியில் மேல் பஞ்சமம் வரை அநாயாசமாகப் பறந்தார். கோடீச்வரய்யரின் 'உன்னையல்லால்' கிருதி ரொம்ப ஜோரா யிருந்தது.

13௳ திருச்சியில் பாடிய எம். சுப்பய்யா முதலியாருக்கு நல்ல உதவுபடியுள்ள சாரீரம். கரஹரப்ரியா, ஹரிகாம்போதி ராகங்கள் கவனத்தை யிழுத்தன. சாஹித்யத் தெளிவும் தென்பட்டது.


15௳ கச்சேரிகளில் சென்னையில் வீணையுடன் இழைந்து பாடிய என். சொக்கம்மாளின் கானமே சிறப்பா யிருந்தது. கனிப்பான குரல். மேல் ஸ்தாயியில் அடக்கி காலாக்குப் படுத்தினார். சரளமான பிடிகளுடன், மத்யம காலத்தில் முடுக்கும், தெளிவும் தென்பட்டன. பைரவியில் அதி சுகபாவம் கண்டது. நிரவல் ஸ்வரங்களும் ரொம்ப விமரிசையா யிருந்தன.

அன்று இரவு சென்னையில் டி. ஞானம்பாளுக்குப் பதிலாக சுந்தரி தம்பி ஒரு மணி நேரம் பொழிந்த சங்கீதம் கர்ணாமிருதமாய் இருந்தது. பாடியதெல்லாம் கணீரென்று கேட்டது. நல்ல வேலைப்பாடுகளுடன் சாருகேசி, கல்யாணி ராகங்களையும் பல உருப்படிகளையும் ஒரு கை பார்த்தார்.

16௳ சென்னையில் கேட்ட டி.ஆர். மஹாலிங்கத்தின் வேணுகானம் உயர்ந்த ரகமாயிருந்ததென்று சொல்லத் தேவையில்லை. வழக்கம்போல் நுட்பமான கற்பனைகளுடன் ஹரிகாம்போதி, ஆனந்த பைரவி, மோஹன ராகங்கள் நல் வடிவங்களாய் வெளிவந்தன. கடைசியில் கேட்ட ராகமாலிகையும் விமரிசையா யிருந்தது.

17௳ சென்னையில் மீனாக்ஷி ராமகிருஷ்ணனின் கானம் எதிர்பார்த்தபடி ரஞ்சகமா யிருந்தது. கமகங்களை அஸ்திவாரமாகக் கொண்டது. பல அழகு அம்சங்கள் பொருந்தி யமைந்தது. ஆரபி, பைரவி, மோஹனம் ராகங்கள் நல்ல பாணியுடன் விளங்கின. உருப்படிகளும் கச்சிதமா யிருந்தன.

சென்ற வாரக் கச்சேரிகளில் 18௳ திருச்சியில் பாடிய முடிகொண்டான் வெங்கடராமய்யரே முதன்மையாய் இலங்கியது. 'வீணியர்' வித்வான். அபார ஞானம். கற்பனைக்கும் உழைப்புக்கும் அளவில்லை. ராகங்களில் காணும் வெரும் 'பிளானும்' வேலைப்பாடுகளும் அபூர்வம். ஷண்முகப்ரியா, சங்கராபரணம் இவைகளுக்குப் பின் பந்துவராளியில் தன் கை வரிசை முழுவதையும் காட்டினார். 'முத்துக்குமா ரய்யனே' உருப்படியில் சங்கதிக்கு மேல் சங்கதியாக மூச்சு விடாமல் அளந்தார். கமகப் பொழிவு, இழையும் பிடிகள், நீண்ட கார்வைகள், சாதக பிர்க்கா எல்லாம் தென்பட்டன. ஆனால் சரக்கில்லாமல் திண்டாடுபவர்களுக்கு நேர்மாறாக பெருமித ஞானபாவ வேலைப்பாடுகளில் உழன்று போதிய பாணி யளவில்லாது சிரமப் படுகிறார். தொண்டையும் நிரந்தரமாய்ப் போதிய ரஞ்சகம் கொடுப்பதில்லை. அபார யோக்யதைக்குத் தக்கவாறு மேடைப் பிராபல்யம் அவருக்கில்லாதது அவர் குற்றமல்ல. ரஸிகர்களின் குற்றமேயாகும்.



யுத்தத்திற்குப் பிறகு புனர் நிர்மாணம்

உங்கள் சொந்த ஊரிலேயே

ஆரம்பமாகட்டும்

யுத்தத்திற்குப் பிறகு அமைய வேண்டிய திட்டத்தைக் குறித்தே உலகம் முழுவதும் ஈடுபட்டிருக்கிறது. நீங்களும் உங்கள் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும்:— உங்கள் ஊருக்கும், குடும்பத்திற்கும், உங்களுக்கு உரிய திட்டம். இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பணம் தேவை. அந்தப் பணத்தைச் சேமித்துப் பத்திரமாகப் போட்டு வைப்பதற்கு இதுவே சமயம்.

சேமித்த பணத்தைக் கொண்டு செய்வதென்ன?

100க்கு 3 வட்டி விக்டரிலோனில் போட்டு வையுங்கள். மகா பத்திரமானது. இது இந்தியாவின் செல்வம் ஆதாரமாகும். எப்போதும் விற்பனையாகக் கூடியது. அரை வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும். 1957௵ அசல் தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.

நம் நாட்டிற்கு உதவுவதெப்படி?

இப்போதே செய்யுங்கள். விக்டரிலோன் பத்திரங்களில் போட்டு வையுங்கள். பண்டங்களின் விலைவாசிகள் குறையும்படி செய்யும் உங்கள் பணத்திற்கு எதிர்காலத்தில் அதிக மதிப்பை யுண்டாக்கும். உண்மையிலே அது ஒவ்வொருவருக்கும் உதவியா யிருக்கும்.

இந்தக் கடனைப் பற்றிய சில உண்மைகள்.

1. அசல் தொகைக்கே கடன் பத்திரங்கள் விற்கப்பட்டு 1957-ம் ௵ செப்டம்பர் 1௳ தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.
2. மறு அறிக்கை வரை கடன் பத்திரங்கள் விற்கப்படும்.
3. அரை வருஷத்திற்கு ஒரு முறை மார்ச் மாதம் 1-ம் தேதியும் செப்டம்பர் மாதம் 1-ம் தேதியும் வட்டி கொடுக்கப்படும்.
4. வாங்குவது எளிது. உங்கள் பாங்கர்களுக்காவது, பம்பாய், கல்கத்தா, சென்னை, டில்லி, கான்பூர் ஆகிய ஊர்களிலுள்ள இந்திய ரிசர்வ் பாங்கிகளுக்காவது மற்ற ஊர்களிலுள்ள இந்திய இம்பீரியல் பாங்கிகளுக்காவது அரசாங்க கஜானாக்களுக்காவது மனுச் செய்து கொள்ளுங்கள்.

செலவைக்குறைத்து. சேமிப்பைப்பெருக்கி

1957-ம் வருஷத்திய 3% வட்டி

விக்டரி லோன்

பத்திரத்தில் போட்டு வையுங்கள்

இந்திய அரசாங்க நிதி இலாகா வெளியிட்டது.

AAA 1152 TM

வில்லை. ஏன், நமது அன்பார்ந்த "கல்கி" நேயர்களைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்களில் சிலராவது, "இப்படி ஏராளமான பக்கங்களைப் பாரதியார் நிதியே அடைத்துக் கொண்டு விட்டால், நாங்கள் என்னத்தைப் படிக்கிறது?" என்று கேட்கலாம், கேட்கும் உரிமை அவர்களுக்கு உண்டு.

"பாரதியார் நிதிக்குப் பணம் கொடுத்த புண்ணியவான்களின் பெயர்களைத்தான் படியுங்களேன்,—கொஞ்சம் சின்ன எழுத்தாக இருந்தாலும் இருக்கட்டும் என்று!" என்பதாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பாரதியார் நிதிக்குப் பணம் கொடுப்பதோடு கூட, "கல்கி"யின் பக்கங்களைக் கொடுப்பதும் நமது நேயர்கள் செய்யும் தியாகமாயிருக்கட்டும்; அவர்கள் நமது தேசிய மகா கவிக்கு அளிக்கும் காணிக்கையாக இருக்கட்டும்.

* * *

இந்த வாரத்து வசூல் ஜாபிதாவில் "இண்டியன் எக்ஸ்பிரஸ்" "தினமணி" பத்திரிகையின் சார்பாக ஸ்ரீ ராமநாத் கோயங்கா அவர்கள் அளித்திருக்கும் ரூ. 500 நன்கொடையைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

முந்தைய இதழில், இசையரசு ஸ்ரீ தண்டபாணி தேசிகரும், கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையும் பாரதியார் நிதிக்கு அளித்த நன்கொடைகள் வெளியாகியிருக்கின்றன. இந்த வாரத்து வசூலில் கான சரஸ்வதி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளின் நன்கொடை சேர்ந்திருக்கிறது.

தமிழ் நாட்டுச் சங்கீத வித்வான்கள் பாரதியாருக்குப் பெரிதும் கடமைப் பட்டவர்கள். பாரதியாருடைய கீதங்களினாலேயே பெயரும் புகழும் அடைந்து பிரசித்தியான வித்வான்களும் உண்டு.

பாரதியாரிடம் அவர்களுக்குள்ள பக்தியைத் தெரிவித்துக் கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்பதை எல்லா சங்கீத வித்வான்களுக்கும் ஞாபகப் படுத்தி வைக்கிறேன்.

பாரதியாரைப் போலவே எட்டயபுரத்தில் பிறந்த பிரமுகரும், பாரதியாருடன் நெருங்கிப் பழகிய அருமை நண்பர்களில் ஒருவருமான ஸ்ரீ எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல். அவர்கள் அளித்துள்ள ரூ. 100 நன்கொடையையும் விசேஷமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த வாரத்து வசூல்

ஸ்ரீ ராமநாத கோயங்கா, ஆசிரியர், தினமணி—இந்தியன் எக்ஸ்பிரஸ், சென்னை	ரூ. 500	0	0
ஸ்ரீ ஆர். எம். ராமநாதன் செட்டியார், ஸ்டுடியோஸ் லிமிடெட், சென்னை	ரூ. 151	0	0
ஸ்ரீ பி. என். செட்டி, வாஹினி பிக்சர்ஸ், தியாகராயநகர்	ரூ. 110	0	0
தமிழ்க் கழகம், எஞ்ஜினியரிங் காலேஜ், கிண்டி	ரூ. 113	0	0
ஸ்ரீ எஸ். சோமசுந்தர பாரதி எம். ஏ. பி. எல்., பசுமலை	ரூ. 100	0	0
கான சரஸ்வதி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள், நுங்கம்பாக்கம்	ரூ. 50	0	0
சிட்டாகாங் ஸ்ரீ சி. ஆர். வெங்கடராமன் மூலம்	35	0	0
ஆசிரியர்கள், மாணவர்கள், நாடார் உயர்தர பாடசாலை, பொறையார்	29	0	0
ஸ்ரீ ஜி. கோவிந்தன், பரமக்குடி	25	6	3
ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் எம். எல். ஏ. கோயம்புத்தூர்	25	0	0
ஸ்ரீ எஸ். சந்திரஜ நாடார், கொம்மடிக் கோட்டை, திருநெல்வேலி	25	0	0
டாக்டர் ஆர். மகாலிங்கம், கும்பகோணம்	25	0	0
ஸ்ரீ கே. எஸ். ராமச்சந்திரன், திலக் நகரம், கான்பூர்	21	0	0
ஸ்ரீ எஸ். வி. கோபாலன், இரயில் ஷாப், சேலம் ஜங்ஷன்	16	0	0
வஸந்தன், துணை ஆசிரியர் 'கல்கி', சென்னை	15	1	3
சாவி, உதவி ஆசிரியர், 'கல்கி'	15	0	0
ஸ்ரீ எஸ். வெங்கடராமன், கோயமுத்தூர்	15	0	0
ஸ்ரீ எம். சென்னப்பன், பெங்களூர்	11	0	0
ராஜீ - சாமா, மயிலாப்பூர்	11	0	0
சிவகாசி, எஸ். எச். என். விக்டோரியா ஹைஸ்கூல், மாணவ மாணவிகள் (ஸ்ரீ எஸ். ஆறுமுகஸ்வாமி மூலம்)	10	14	0

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் பாபநாசம் சிவன், மயிலாப்பூர்; ஒரு அபிமானி, நாகப்பட்டணம்; கே. டி. வெந்திவேலு முதலியார், கோபிசெட்டிப்பாளையம்; ஸ்ரீமதி சாரதா கிருஷ்ணன், நெல்லிச்சேரி; ஏ. சேஷாத்திரி சர்மா, ஆசிரியர், "செட்டி நாடு" காரைக்குடி; வி. நாராயணசாமி, சென்னை; எஸ். ஆழ்வார், போஸ்ட்மாஸ்டர், மூலக்கரை பட்டி; பா. சு. ஸ்ரீநிவாஸன், தூத்துக்குடி; டி. கே. ரங்கநாதனும் நண்பர்களும், காஞ்சீபுரம்; ஏ. விஸ்வநாத கௌடர், கணபதி போஸ்டு, கோயமுத்தூர்; குமாரி ஔவை மன்று மகேஸ்வரி ராஜா சங்கரலிங்கம், [illegible]; டி. கே. நித்நாரப்பன், மந்தனம் பாறை, தென்காசி; சி. வை. சின்னப்ப நாயுடு, மிட்டாதார், சின்னக்காரப்பட்டி, கந்திலி போஸ்டு; கே. ஆர். கல்யாணராம ஐயர், ராணிப்பேட்டை; பி. பி. பார்த்தசாரதி அய்யங்கார், 'காஷியர்' கல்கி. ஆக ரூ. 150—0—0

* பத்து ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடை மொத்தம்	ரூ. 110—4—0
* அன்பர்கள் மூலம் வந்த நன்கொடை மொத்தம்	ரூ. 634—10—6
ஏற்கனவே வசூல்	ரூ. 12803—9—4
ஆக மொத்தம்	ரூ. 15007—13—4

* விவரம் அடுத்த இதழில் வெளியாகும்.

பாரதிக்குப் பதினையாயிரம்

பாரதியார் நிதிக்காக வருகிற மணியார்டர்கள், செக்குகளைக் கையெழுத்திட்டு வாங்குவதிலும், அவற்றுக்குக் கணக்கு எழுதிப் பாங்கிக்கு அனுப்புவதிலும், ஜாபிதா தயாரித்து அச்சுக்குக் கொடுப்பதிலும் நமது காரியாலய உத்தியோகஸ்தர்கள் படுகிற சிரமத்தைப் பார்த்து விட்டு, "காடோடி" ஒரு அருமையான யோசனை சொன்னார்:—"இந்தக் கணக்கு நோட்டுகளை—(அதாவது நன்கொடையாளர் பெயர் விலாசம் தொகை எழுதப் பெற்ற நோட்டுக்களை)—பாரதியார் ஞாபகார்த்த வாசகசாலையில் காட்சிப் பொருள்களாக வைத்து விட்டால் என்ன?" என்று கேட்டார். "பேஷான யோசனை!" என்று நானும் ஆமோதித்தேன்.

["காடோடி"யின் பெயரும் ஒரு இருபத்தைந்து ரூபாய்க்கு முன்னால் அந்தக் கணக்கு நோட்டில் ஏறிய பிறகுதான், மேற்படி யோசனையை அவர் கூறினார். எனினும் நான் தப்பர்த்தம் செய்து கொள்ளவில்லை. காக்கை உட்கார்ந்ததும் பனம் பழம் விழுந்ததும் சரியாப் போச்சு! அவ்வளவுதான்!]

பின்னே, எதற்காக இந்த விஷயத்தைச் சொன்னேன் என்றால், தமிழ் மக்களுக்கெல்லாம் முன்னதாகவே 'நோட்டீஸ்' கொடுத்து விடுவதற்காகத்தான்.

எட்டயபுரத்தில் பாரதி ஞாபகார்த்தமாகக் கட்டிடமும் அதில் நூல் நிலையமும் ஏற்படப்போவது நிச்சயம். அந்தக் கட்டிடத்தில் மேற்படி நிலையத்துக்காக நன்கொடை உதவியவர்களின் பெயர்கள் எல்லாம் அடங்கிய கணக்குப் புத்தகங்கள், மற்றக் காட்சிப் பொருள்களுடனே சேர்த்து வைக்கப்படலாம். தங்களுடைய பெயர்களும் அந்தக் கணக்குப் புத்தகங்களில் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் தயவு செய்து முந்திக் கொள்ள வேண்டும். நிதி வசூலை முடித்துவிட்ட பிறகு, "அடாடா! முன்னமே கொடுக்காமல் போனோமே!" என்று கவலைப்படுவதில் பயனில்லை.

• • •

நிதி வசூலை முடிப்பது என்ற பிரஸ்தாபம் வந்ததும், "சரி; எப்போது முடிக்க உத்தேசம்?" என்று கேட்கக் கூடும். உண்மையில், அதைப் பற்றி இன்னும் நான் உத்தேசிக்கவே தொடங்கவில்லை.

பல அன்பர்கள் "நிதி வசூலைச் சட்புட்டென்று முடித்துவிட வேண்டாம்; நடக்கிற வரையில் நடக்கட்டும்!" என்று எழுதியிருக்கிறார்கள். உண்மைதான்: தமிழர்களுக்கும் அவர்கள் போற்றுகிற மகா கவிக்கும் குறுக்கே நான் ஏன் நிற்க வேண்டும்? நடக்கிற வரையில் தாராளமாய் நடக்கட்டும் என்றே முடிவு செய்திருக்கிறேன்.

முக்கியமாக, தமிழகத்தில் வாழும் தமிழ் மக்களை முன்னிட்டே, வசூல் முடிவு நாளைத் தள்ளிப்போட வேண்டியதாயிருக்கிறது. இப்போது திடீரென்று நிறுத்தி விட்டால், பாரதியார் ஞாபகார்த்த நிலையத்தை நிறுவிய பெருமையைப் பெரும்பாலும் இலங்கையிலும், வடஇந்தியாவிலும் உள்ள தமிழர்களே அடித்துக் கொண்டு போய்விடுவார்கள்போ லிருக்கிறது!

'அவுரங்காபாத்' என்ற பெயர் ஞாபகம் இருக்கிறதா? ஆம்; எல்லோரா, அஜந்தா யாத்திரைக் கட்டுரைகளில் கண்ட அவுரங்காபாத்தைத்தான் சொல்கிறேன். ஊர் சின்ன ஊர்; அதிலுள்ள தமிழர்களும் சிலர்தான். ஆயினும் அவர்கள் ரூ. 150—0—0 வசூலித்து பாரதியார் நிதிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

கர்க்கியில் இராணுவத் தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகளுக்குள்ளே கூடத் தமிழன்பும் பாரதி பக்தியும் வியாபித்து அங்கிருந்தும் பணம் வந்திருக்கிறது.

ஆனால், தமிழகத்தின் விஷயம் என்ன? பாரதியார் பிறந்த திருநெல்வேலி ஜில்லா, வும் தேசிய ஆர்வம் நிறைந்த தஞ்சாவூர் கோயமுத்தூர் ஜில்லாக்களும் தமிழன்பு மிகுந்த ராமநாதபுரம் ஜில்லாவும் பாரதியார் நிதி விஷயத்தில் தங்களுடைய கடமையை நன்கு நிறைவேற்றி விட்டதாகச் சொல்ல முடியாது. அவர்களையெல்லாம் உத்தேசித்து நிதி வசூல் முடிவு தேதியைத் தள்ளிப் போடுகிறேன். அப்புறம் அவர்களுடைய இஷ்டம், உசிதம், சௌகரியம் எப்படியோ, அப்படிச் செய்யட்டும்!

• • •

பாரதியார் நிதி திருப்திகரமாக வசூலாகும் விஷயத்தில், கொஞ்சம் அதிருப்தியடையக்கூடியவர்களும் இல்லாமற் போக

ருஷியாவின் சிநேகத்தையோ விரோதத்தையோ சமயம் வரும்போது காரியாம்சத்திலேதான் நாம் பார்க்க முடியும்.

கிரீஸில் பொது உடைமைக்காரர்களைப் பிரிட்டிஷார் அடக்க முயல்வது பற்றி இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் எத்தனையோ கண்டனங்கள் வெளியாகியிருக்கின்றன. ஆனால், ருஷியா மௌனம் சாதிக்கிறது! இதனால் ருஷியாவுக்குக் கிரேக்கப் பொது உடைமைக்காரர்களிடம் விரோதம் என்று அர்த்தமா?

பிரான்ஸையும் டிகாலையும் பற்றி ருஷியா வாய் திறந்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. ஆனால் டிகால் எதற்காக ருஷியாவுக்கு விழுந்தடித்து ஓடி சிநேக உடன்படிக்கை செய்து கொண்டு வந்தார்?

யுத்தம் முடியும் சமயத்திலும், முடிந்த பிற்பாடு பிரிட்டனுக்கும் ருஷியாவுக்கும் உலக ஆதிக்யப் போட்டி நடைபெறும் என்று அரசியல் அறிவுடையவர்கள் யாரும் ஊகிக்கலாம்.

அந்த நிலைமையில் ருஷியாவின் சிநேகபாவம் இந்தியாவுக்குப் பயன்படக் கூடும் என்றும் ஊகிக்கலாம்.

இது எப்படியிருந்தாலும், ருஷியா இந்தியாவின் சுதந்திரத்தைப் பற்றி இது வரை ஒன்றும் பேசாதபடியால், ருஷியா இந்தியாவுக்கு விரோதி என்று தீர்மானிக்க வேண்டியதில்லை.

"நம்மைப் பற்றிச் சாதகமாகப் பேசாதவர்கள் எல்லாம் நமக்கு விரோதிகள்" என்று தீர்மானிப்பது இராஜதந்திர ஞானியமாகும். அப்படித் தீர்மானிப்பதாயிருந்தால், கூடிய சீக்கிரத்தில் உலகம் முழுவதையும் நமது விரோதிகளாக்கிக் கொண்டு விடலாம்.

"நமக்கு விரோதமாகப் பேசாதவர்கள் எல்லாம் நமக்கு சிநேகிதர்கள்" என்று வைத்துக் கொண்டு காரியம் செய்வதுதான் இராஜ தந்திரமும் விவேகமும் ஆகும்.

* * *

ஆகக் கூடி, இந்தியாவின் சுதந்திரம் சித்தியாவதற்குத் தேச பக்தி, தியாக புத்தி இவைகளுடன் இராஜ தந்திரமும் கொஞ்சம் கட்டாயம் வேண்டும், — அதாவது சரியான சமயத்தில் சரியான காரியத்தைத் தீர்மானித்துச் செய்யும் அறிவும் திறமையும் வேண்டும் என்று நாம் வற்புறுத்த விரும்புகிறோம்.

யர்கள்தான்; வெளியேறியவர்களும் அப்படித்தான். இவர்களுக்குள் சண்டை என்பது என்ன வேடிக்கை!

இதோடு போகப் போகிறதில்லை. கம்யூனிஸ்டுகளுக்கு அநேக இடங்களில் திறமையான அமைப்புக்கள் இருக்கின்றன. காங்கிரஸுக்கு அங்கத்தினர் சேர்க்கும் காலம் வரும்போது, இரு கட்சியினரும் அங்கத்தினர் சேர்ப்பார்கள். தேர்தல் சண்டைகளும் மூளும். இதெல்லாம் எவ்வளவு விபரீதமாக வளரும் என்று சொல்ல முடியாது. நாடெங்கும் வைதிக காங்கிரஸ்காரர்களுக்கும் பொது உடைமைக் காங்கிரஸ் காரர்களுக்கும் தடபுடலான சண்டைகள் நடக்கும் காட்சியைப் பொது ஜனங்கள் கண்டு துக்கப்படும் காலம் வரக் கூடும்.

சண்டைக்கு விதை இப்போதுதான் போட்டிருக்கிறது; அறுவடையின் போது அமர்க்களம்தான்!

இந்த இலட்சணத்தில் பிரிட்டிஷாரோடு சண்டை போட்டுச் சுதந்திரம் பெறவேண்டிய அவசியத்தையே இரு கட்சியாரும் மறந்து போனால் அதில் ஆச்சரியம் ஒன்று மிராது.

சீனா தேசம் பெரிய தேசம்; அந்நாட்டின் பெரும் பகுதி இன்னும் சுதந்திரமாக இருந்து வருகிறது. ஆனாலும் சீனா, ஜப்பானுடைய ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிச் சென்ற பத்து வருஷ காலமாகத் திணறித் திண்டாடிக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன?

அந்நாட்டில் கோமிண்டாங் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நடந்து வரும் போராட்டந்தான்! இரு கட்சியாருக்கும் சீனாவை அன்னிய ஆதிக்யத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்ற ஆத்திரம் இருந்தும் தங்களுக்குள் ஒற்றுமைப் படாதபடியால்தான் சீனா இன்றைக்கு இந்தக் கதியை அடைந்திருக்கிறது. சீனாவைக் காட்டிலும் கேடான நிலையில் அன்னிய ஆட்சியின் கீழ் இருந்து வரும் இந்தியாவில் ஏற்கனவே எத்தனையோ வேற்றுமைகளும் பிளவுகளும் இருக்கின்றன. இப்போது இந்தப் புதிய பிளவை உண்டாக்கி முடிவில்லாத சண்டைக்கு ஏற்பாடு செய்வது, தேசத்தை இன்னும் வெகு காலம் அடிமையாக வைத்திருப்பதற்கே ஏற்பாடு செய்வதாகும்.

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"

என்று பாரதியார் பாடியது இன்னும் நம் விஷயத்தில் பலன் தரவில்லையென்றே ஏற்படுகிறது.

* * *

இராஜ தந்திரத்தைப் பயன்படுத்த வேண்டிய இரண்டாவது காரியம், வெளி நாடுகளில் நமக்கு சிநேகிதர்களை அதிகமாக்கிக் கொள்வது என்று குறிப்பிட்டோம்.

இந்தக் காலத்தில் எப்பேர்ப்பட்ட வல்லரசானாலும் பிறநாடுகளின் சிநேகமின்றி வாழ முடியாது; சுதந்திரத்தையும் காப்பாற்றிக் கொள்ள முடியாது.

இப்படிப்பட்ட நிலைமையில் இந்தியாவுக்கு வெளி நாடுகளின் சிநேகம் அவசியம் என்று சொல்லவும் வேண்டுமா? அப்படி நமக்கு சிநேகிதர்களாகக் கூடியவர்கள் யார் என்று பார்த்து அவர்களுடைய சிநேகத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

யுத்தம் முடிந்து சமாதான மகாநாடுகள் கூடும்போது, ருஷியாவும் அமெரிக்காவும் இந்தியாவின் பக்கத்தில் இருக்குமானால் எவ்வளவோ அநுகூலம் உண்டு.

இதைத்தான் நாம் முன்னொரு இதழில் குறிப்பிட்டு, "இந்தக் கம்யூனிஸ்ட் வேட்டையினால் ருஷியாவின் சிநேகபாவம் பாதிக்கப் படலாம்" என்று எழுதியிருந்தோம்.

சில நண்பர்களுக்கு இதைப் பற்றி ஒரு பெரிய சந்தேகம் தோன்றி நமக்குக் கடிதமும் எழுதியிருக்கிறார்கள்.

"ருஷியா இதுவரை இந்தியாவைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சாதகமாகச் சொல்லவில்லையே? அப்பேர்ப்பட்ட ருஷியாவுக்காக நாம் ஏன் சலுகை காட்ட வேண்டும்?" என்று அவர்கள் கேட்கிறார்கள்.

முதலாவது, ருஷியாவின் சிநேகத்தை நாம் விரும்புவது நம்முடைய நன்மைக்காகவே யல்லாமல் ருஷியாவின் நன்மைக்காக அல்ல. நம்முடைய சிநேகம் ருஷியாவுக்கு ஒன்றும் சாதித்து விடப் போவதும் இல்லை.

இரண்டாவது, ருஷியா இந்தியாவின் சுதந்திரத்தை ஆதரித்து ஏதாவது சொல்லியிருக்கிறதா, இல்லையா என்று நாம் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள மார்க்கம் இல்லை.

மூன்றாவது, ருஷியாவுக்கும் ருஷியாவின் தலைவர் ஸ்டாலினுக்கும் வெறும் பேச்சில் நம்பிக்கை கிடையாது என்பது பிரசித்தமானது.

நமக்குள் பிரிவினைக்கும் வேற்றுமைக்கும் இன்னும் எத்தனையோ இயற்கை, செயற்கைக் காரணங்கள் இருக்கின்றன.

இப்படியெல்லாமிருக்கும்போது, பிரிட்டிஷாரை எதிர்த்து நின்று இந்தியா சுதந்திரம் அடைவதில் ஊக்கமுள்ளவர்கள் அனைவரையுமாவது ஒன்று திரட்டி ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ளுதல் எவ்வளவு அவசியமானது?

ஆனால், தற்சமயம் தேசத்தில் என்ன நடக்கிறதென்று பாருங்கள்!

சுதந்திரம் கோருகிற தேசத் தொண்டர்களுக்குள்ளே ஒரு புதிய பிரிவினையை ஏற்படுத்தி, நாடெங்கும் கட்சிச் சண்டைகளை ஏற்படுத்துவதற்குத் தீவிர முயற்சி நடந்து வருகிறது.

பம்பாய்த் தேசபக்தர் ஸ்ரீ எஸ். கே. பாடீலின் தலைமையில், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் ஊழியர்களில் ஒரு பகுதியார் அரியலூரில் கூடி, புதிய காங்கிரஸ் சங்கங்களிலிருந்து கம்யூனிஸ்டுகளை விலக்குவது என்ற யோசனையை ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்கள்.

"நிர்மாண திட்டத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் மட்டுந்தான் சேரலாம்" "ஆகஸ்டு தீர்மானத்தை ஒப்புக்கொள்கிறவர்கள்தான் சேரலாம்" "அஹிம்சையில் நம்பிக்கையுள்ளவர்கள்தான் சேரலாம்" அல்லது "ஸ்ரீ முத்துரங்க முதலியாரிடம் சர்டிபிகேட் பெற்றவர்கள்தான் சேரலாம்" என்று கூடத் தீர்மானங்கள் செய்திருந்தாலும் பாதகமில்லை. காரியாம்சத்தில் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொள்ளாமலே நடத்திக் கொண்டு போனால் அதற்காக யாரும் துக்கப்பட வேண்டியதில்லை.

எந்தக் கூட்டத்தாருக்கும் தங்களுக்குள் சங்கம் ஏற்படுத்திக் கொள்ள உரிமை உண்டு. இன்னாரைத்தான் சேர்த்துக் கொள்வது என்று தீர்மானிக்கவும் உரிமை உண்டு. காங்கிரஸ் பெயரை இவர்கள் உபயோகித்துக் கொண்டு தனிச் சங்கம் வைத்துக் கொள்வதைக்கூட நாம் ஆட்சேபிக்கப் போவதில்லை.

ஆனால், கம்யூனிஸ்டு கட்சியார் என்று குறிப்பிட்டு விலக்குவதினால் தேசத்தில் மகத்தான விபரீதம் விளையப் போகிறதென்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

கம்யூனிஸ்டு கட்சியாரின் முறைகளையோ, அவர்களுடைய மார்க்ஸீய வைதிகத்தையோ, மாஸ்கோவை அவர்கள் குரு பீடமாகக் கொள்வதையோ நாம் ஒப்புக் கொள்ளவில்லை.

ஆனால் கம்யூனிஸ்டு கட்சியாரைப் பற்றி இரண்டு மூன்று விஷயங்களை யாரும் மறுக்க முடியாது:—

(1) கம்யூனிஸ்டு கட்சியாரின் முடிவான இலட்சியங்கள் உத்தமமானவை; காந்தி மகானின் இலட்சியங்களுடன் ஒத்து நிற்பவை.

(2) இந்தியாவை பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்து சுதந்திர ஆட்சியை ஸ்தாபிக்க வேண்டுமென்பதில் கம்யூனிஸ்ட் கட்சியார் வேறு யாருக்கும் பின் வாங்கியவர்கள் அல்ல.

(3) கம்யூனிஸ்ட் கட்சியில் பெரும்பாலோர் சுயநலம் அற்ற தியாகிகள்.

இப்படிப்பட்ட கூட்டத்தாரைக் "காங்கிரஸ் சங்கங்களிலிருந்து விலக்குகிறோம்" என்று தம்பட்டம் அடித்துச் செய்வது உசிதமா, நியாயமா என்பதெல்லாம் ஒருபுறமிருக்க, இதைப் போல் இராஜ தந்திர சூனியமான, விவேகமற்ற காரியம் வேறு கிடையாது என்று நாம் கருதுகிறோம். இதன் பயனாக, நாட்டில் ஏற்கனவே இருக்கும் பிளவுகளும் வேற்றுமைகளும் போதாதென்று புதியதொரு பிளவு ஏற்பட்டு நாளுக்கு நாள் பெரிதாகப் போகிறது. தேச விடுதலைக்காகச் சகலத்தையும் தியாகம் செய்தவர்களும், செய்யத் தயாராயிருப்பவர்களுமான தொண்டர்களிடையே பெருஞ் சண்டை தோன்றி நாளுக்கு நாள் முற்றப் போகிறது. தேச விடுதலைக்காக அதிகார வர்க்கத்துடன் போராடுவதில் செலவழிக்க வேண்டிய சக்தியெல்லாம் சகோதரச் சண்டையில் அநியாயமாய் வீணாகப் போகிறது.

இதற்கெல்லாம் அறிகுறி ஏற்கனவே திருநெல்வேலியில் தோன்றியிருப்பதைக் காண்கிறோம்.

சென்ற 17-12-44ல் திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ்காரர்கள் கூடி நிர்மாண திட்டத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் எல்லாரையும் கொண்ட சங்கம் ஸ்தாபிப்பது என்று தீர்மானித்தார்கள். கம்யூனிஸ்டுகளை விலக்க வேண்டுமென்று கொண்டு வந்த பிரேரணை இந்தக் கூட்டத்தில் நிறைவேறவில்லை. எனவே, அந்தப் பிரேரணைக்குச் சாதகமாயிருந்தவர்கள் கூட்டத்திலிருந்து வெளியேறி விட்டார்கள்.

கூட்டத்தில் பாக்கியிருந்தவர்களும் தியாகங்கள் செய்த சிறந்த தேச ஊழி

எனவே, நியாயத்தை ஜயிக்கப் பண்ணுவதற்குத் தியாக புத்தி மட்டும் இருந்தால் போதாது; சாதாரண புத்தியும் அவசியம் வேண்டும்.

அதாவது காரண காரியங்களை ஆராய்ந்து சரியான காலத்தில் சரியான காரியத்தைச் செய்யும் அறிவுத் திறமை வேண்டும்.

இராஜரீக விவகாரங்களில் இந்த அறிவுத் திறமையைத்தான் ''இராஜ தந்திரம்'' என்பார்கள்.

இந்தக் காலத்தில், மேனாட்டு இராஜ தந்திரப் போக்கைப் பார்த்து வரும் நமக்கு, ''இராஜ தந்திரம்'' என்றால், ''போக்கிரித்தனம்; முடிச்சுமாறித் தனம்'' முதலிய கெட்ட பொருள்கள் தான் மனதில் உதயமாகின்றன.

ஆனால் இராஜ தந்திரம் என்பதற்கு நல்ல பொருளும் உண்டு. அந்த நல்ல பொருள் கொண்ட இராஜ தந்திரம். இராஜரீக காரியங்களில் வெற்றி யடைவதற்கு அவசியம் வேண்டும்.

மோட்ச சாம்ராஜ்யத்தை அடைவது நமது நோக்கமாயிருந்தால், அதற்கு பக்தியும் தியாகமும் மட்டும் இருந்தால் போதும்.

ஆனால் பூலோக ராஜ்யத்தை அடைவதற்கும் ஆள்வதற்கும் கொஞ்சம் இராஜ தந்திரம் கட்டாயம் வேண்டும்.

* * *

யுத்தங்களில் ஜயிப்பதற்கும், ஜயத்தின் பலனை நிலை நாட்டிக் கொள்வதற்கும் யுத்த தந்திரம் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு இராஜ தந்திரமும் அவசியம் என்பதற்குச் சமீபத்தில் ஒரு உதாரணம் கிடைத்திருக்கிறது.

சர்ச்சில் இந்த யுத்தத்தை எவ்வளவோ வீர தீர தந்திரங்களுடன் நடத்தி எல்லாரும் பார்த்துப் பிரமிக்கும் படியான வெற்றிகளை அடைந்திருக்கிறார். கணக்கற்ற புகழுரைகளையும் அடைந்திருக்கிறார். ஆனாலும், கடைசியாக கிரீஸ் விஷயத்தில் அவர் செய்து விட்ட இராஜதந்திரப் பிசகானது அவருடைய புகழுக்குக் களங்கம் உண்டு பண்ணி விட்டது. அவருடைய பழைய வெற்றிகளை யெல்லாம் மறக்கும்படி செய்து விட்டது. இப்படிச் சர்ச்சிலுக்கும் பிரிட்டனுக்கும் ஓரளவு அபகீர்த்தி ஏற்பட்டிருக்கும் சமயம் பார்த்து, ஜெர்மானியர் பெல்ஜியத்துக்குள் புனர் பிரவேசம் செய்திருப்பதில் ஹிட்லருடைய யுத்த தந்திரத்துடன் இராஜ தந்திரமும் அடங்கியிருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

இனி, இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கை விஷயத்தில் இராஜதந்திரம் எப்படி உபயோகப்படக் கூடுமென்று பார்க்கலாம்.

இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையில் நியாயமும் தர்மமும் பூரணமாக இருந்தும், தேச மக்களுக்குத் தியாகம் செய்யும் சக்தி இருந்தும், உலகம் போற்றக்கூடிய உத்தமத் தலைவர்கள் வாய்த்திருந்தும், இந்தியா இன்னும் ஏன் சுதந்திரம் பெறவில்லை யென்று கேட்டால், இரண்டு காரியங்களில் நாம் இராஜ தந்திரத்தைச் சரிவர உபயோகப் படுத்தாததுதான் காரணம்.

பிடிவாதமுள்ள பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெறுவது இலேசான காரியமல்ல வென்பது எல்லாரும் அறிந்ததே.

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற வேண்டுமானால், (1) உள் நாட்டில் நமது சக்திகளை யெல்லாம் திரட்டிச் சேர்த்துக் கொள்ள வேண்டும்; (2) வெளி நாடுகளில் நமக்குக் கிடைக்கக் கூடிய உதவிகளை யெல்லாம் திரட்டி உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த இரண்டு துறைகளிலும் நாம் எப்போதும் எதிரிடையாகவே காரியம் செய்து கொண்டிருக்கிறோம். அதாவது உள்நாட்டில் நமது பலத்தைச் சிதற விட்டு வீணாக்கி யிருக்கிறோம். வெளி நாட்டில் நமக்குள்ள சில சிநேகிதர்களையும் கை விட்டிருக்கிறோம்.

இந்தியாவில் நமக்குள்ள பலமெல்லாம் ஜனத்தொகையின் பலம் ஒன்று தான். நாற்பது கோடி ஜனங்கள் ஒற்றுமையாயிருந்தால், அதுவே மகத்தான பலமாகும். அதைக் கொண்டு நம்முடைய சுதந்திரத்தை அடைவது மட்டும் அல்ல, — உலகத்தையே வென்று ஆட்சி புரியலாம்.

ஆனால், அந்த நாற்பது கோடி ஜனங்கள் கூட்டம் கூட்டமாகப் பிரிந்து நின்றால், அப்போது நமது ஜனத்தொகையே நமது பலவீனமாக முடிகிறது. அதைக் காட்டிலும் கேடு வேறு கிடையாது.

துரதிர்ஷ்ட வசமாக, இந்தியாவிலுள்ள ஜனங்கள் எத்தனையோ கூட்டமாகப் பிரிந்து நிற்கிறார்கள். இந்தியாவின் சுதந்திரத்துக்காக அவர்களை ஒன்று சேர்ப்பது பிரம்மப் பிரயத்தனமாயிருக்கிறது.

முஸ்லிம் லீக்கைச் சமரசப்படுத்த எவ்வளவோ விதமாக யெல்லாம் முயன்றும் கைகூடவில்லை.

சுதந்திரத்துக்கு என்ன வேண்டும்?

இராஜ ராஜ சோழனும் இராஜேந்திர சோழனும் சிங்காதனத் தமர்ந்து செங்கோல் செலுத்திய தஞ்சாவூரில் மகாராஷ்டிர மன்னர்களும் கொலுவிற்றிருந்து அரசு புரிந்தார்கள்.

மகாராஷ்டிர மன்னர்களில் கடைசி மன்னன் அரசு புரிந்தபோது, நவாபின் படைகள் தஞ்சாவூர் மீது படையெடுத்து வந்தன. ராஜாவானவர் அரண்மனைப் பூஜை அறையில் அமர்ந்து பூஜை செய்து கொண்டிருந்த போது, கோட்டைக் காவலர்கள் ஓடி வந்து, "நவாபின் படைகள் கோட்டை மதிலை அணுகிவிட்டன!" என்று சொன்னார்கள்.

பகவானுடைய பூஜைக்கு உபயோகப்பட்ட துளசி தீர்த்த பாத்திரத்தை எடுத்து ராஜா கோட்டைக் காவலர்களிடம் கொடுத்தார். "இந்தத் துளசி தீர்த்தத்தைக் கோட்டை மதிலைச் சுற்றித் தெளித்து விடு! பகைவர்கள் உள்ளே வருவதைப் பார்த்து விடுகிறேன்!" என்றார்.

அவ்விதமே துளசி தீர்த்தம் தெளிக்கப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. நவாபின் படை கோட்டை மதிலைத் தாண்டி உள்ளே வரத்தான் செய்தது. தஞ்சாவூர் மகாராஷ்டிர ராஜ்யம் அஸ்தமித்தது.

தஞ்சாவூர் ராஜா கோட்டை மதிலைச் சுற்றித் துளசி தீர்த்தத்தைத் தெளிக்கச் சொன்னபோது, இரண்டு காரியங்களை மறந்துவிட்டார்.

தெளித்தது துளசி தீர்த்தம் என்பது ராஜாவுக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் தெரியுமே தவிர, நவாபின் படைகளுக்குத் தெரியாது!

எந்தக் கிருஷ்ண பகவானை ராஜா பூஜை செய்தாரோ, அதே கிருஷ்ண பகவான் அர்ச்சுனனை யுத்தம் செய்யச் சொன்னாரே தவிர, பூஜை செய்யச் சொல்லவில்லை!

"சத்தியமேவ ஜயதே" என்பது சத்தியமான வாக்கியம்.

பாண்டவர்களின் கட்சியிலே சத்தியம் இருந்தபடியால்தான் அவர்கள் கட்சி ஜயமடைந்தது.

ஆனால், பாண்டவர்களின் கட்சியிலிருந்த சத்தியம் சுயமாகவே ஜயித்துவிடவில்லை. அந்தச் சத்தியத்தை ஜயிக்கப் பண்ணுவதற்கு எத்தனை எத்தனையோ வீரர்கள் உயிரைக் கொடுக்க வேண்டியிருந்தது. அது மட்டும் போதவில்லை. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா எத்தனையோ தந்திர மந்திரங்களையும் கையாள வேண்டியிருந்தது.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன வென்றால், சத்தியமும் நியாயமும் எந்தக் கட்சியில் இருக்கிறதோ, அந்தக் கட்சிக்காரர்கள் சரியான யுத்த தந்திரங்களையும் தெரிந்து கொண்டு கையாள வேண்டும் என்பதுதான்.

* * *

இப்போது இந்தியாவின் சுதந்திரப் பிரச்னையைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டு கவனிக்கலாம்.

இந்தியா சுதந்திரம் கோருவது மிகவும் நியாயமான கோரிக்கை; அதில் சந்தேகமே இல்லை.

ஆனால் உலகத்தில் எப்போதும் நியாயமே ஜயிப்பதாக இருந்தால், பிரிட்டிஷார் இந்தியாவுக்குள் வந்திருக்கவே நியாயமில்லை. பிளாஸிச் சண்டையிலேயே அவர்கள் தோல்வியுற்று மூட்டையைக் கட்டிக் கொண்டு போயிருக்க வேண்டும்.


இன்னும் முன்னால் போனோமானால், கஜினி முகம்மதுவும், முடத் தைமூரும் இந்தியாவுக்குள்ளே வந்து கொள்ளையடித்துக் கொண்டு போனது எவ்விதத்திலும் நியாயம் இல்லை.

நியாயம் ஜயிக்க வேண்டுமானால், அதை நிலை நாட்டுவதற்காக உறுதியுடன் போராடவும் கஷ்ட நஷ்டங்களைச் சகித்துக் கொள்ளவும் தயாராயிருக்க வேண்டும்.


அதாவது நியாயத்தை ஜயிக்கப் பண்ணுவதற்குத் தியாக புத்தி வேண்டும். ஆனால் தியாக புத்தி மட்டும் இருந்தால் போதுமா?

இந்தியாவிலே தியாக புத்தி இல்லையென்றோ, குறைவு என்றோ சொல்ல முடியாது. சென்ற இருபத்தைந்து வருஷ காலத்தில் தேசத்தின் சுதந்திரத்துக்காக லட்சக் கணக்கான தேசபக்தத் தொண்டர்கள் எத்தனையோ தியாகம் செய்திருக்கிறார்கள்; கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள்.


நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்மன்



டிகாலே ருஷ்யாவுக்கு விஜயம் செய்ததன் பலனாய் பிரெஞ்சு-ருஷ்ய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.



"பர்மாக்காரர்கள் பிரிட்டிஷ்காரர்களைப் பூமாலை போட்டு வரவேற்கும் காலம் ஒருநாள் வந்தே தீரும்" என்று இந்தியா மந்திரி அமெரி கூறுகிறார். அப்போது ஒருவேளை சர்ச்சிலும் அமெரியுமே பர்மியர் வேஷத்தில் காட்சி அளிக்கலாம்.

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 21

என்ன சேதி?

"நீர்மேல் எழுத்து"

பிரசித்தி பெற்ற அட்லாண்டிக் சாஸனத்தைப் பற்றி நாம் கொண்டிருந்த கொஞ்ச நஞ்சம் நம்பிக்கையையும் இனி தாராளமாய்க் கை விட்டு விடலாம். அந்த சாஸனம் இந்த தேசத்துக்குப் பொருந்துமா, அந்த தேசத்துக்குப் பொருந்துமா என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமும் இனி கிடையாது. அது இந்தியா தேசத்துக்குப் பொருந்தாது என்றும் யுத்தத்தில் அடிமைப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் சர்ச்சில் துரை கூறினாரல்லவா? அப்படியானால், போலந்து எல்லை விஷயமாகவும் கிரீஸ் தகராறு சம்பந்தமாகவும் அந்த சாஸனம் என்ன செய்யப் போகிறது என்ற கேள்வி சமீபத்தில் எழுந்து உலகத்தை ஒரு கலக்குக் கலக்கி யிருக்கிறது. இந்த சமயம் பார்த்து அமெரிக்காவில் சிலர் "ரூஸ்வெல்ட்டும்—சர்ச்சிலும் சேர்ந்து கையெழுத்திட்ட அந்த அட்லாண்டிக் சாஸனம் எங்கே, எங்கே?" என்று அலைந்தார்கள். அமெரிக்காவிலுள்ள தேசியக் காட்சிச் சாலையில் இம்மாதிரி முக்கியமான தஸ்தாவேஜுகளெல்லாம் வைக்கப்படுவது வழக்கமாம். அங்கே அட்லாண்டிக் சாஸனம் மட்டும் காணவில்லையாம். இது ஏன் என்பதற்கு ரூஸ்வெல்ட் சமாதானம் கூறியிருக்கிறார்! "அட்லாண்டிக் சாஸனம் என்று ஒரு தஸ்தாவேஜே தயாராகவில்லை. அதில் நானும் சர்ச்சிலும் கையெழுத்திடவும் இல்லை" என்று ரூஸ்வெல்ட் ஒரு 'வி' குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். ரொம்ப சரி; அட்லாண்டிக் சாஸனத்தைப் பற்றி நாம் முன்னம் எழுதிய போது, அதை "நீர்மேல் எழுத்து" என்று குறிப்பிட்டது ரொம்ப ரொம்ப சரியாய்ப் போய் விட்டதல்லவா?

ஒரு வாரம் விடுமுறை

"கல்கி" காரியாலயத்தினர், "கல்கி" வாசகர்கள் அனைவருக்கும் அடுத்த வாரம் விடுமுறை. டிசம்பர் 31உ ஞாயிற்றுக்கிழமை "கல்கி" இதழ் வெளியாகாது. வங்காளத்தில் பல பத்திரிகைகள் வருஷத்துக்கு ஒரு வாரம் விடுமுறை விடுவதுபோல் நாமும் விட வேண்டும் என்னும் விருப்பத்தை நிறைவேற்ற சர்க்கார் கோட்டா உத்திரவு ஒருவாறு உதவி புரிந்திருக்கிறது. மாதத்தில் ஐந்து ஞாயிற்றுக்கிழமை வரும் மாதத்திலும், நாலு இதழ்களுக்குரிய காகிதந்தான் சர்க்கார் அனுமதிக்கிறார்கள். அதிகப்படியாக ஒரு இதழுக்குக் 'கோட்டா' வேண்டும் என்னும் நமது வற்புறுத்தலுக்கு முடிவான பதில் இன்னும் வரவில்லை. எல்லாவற்றையும் உத்தேசித்து நானது 1944-ம் வருஷம் கடைசி வாரத்தில் நேயர்களுக்கு விடுமுறை அளித்துவிடத் தீர்மானித்திருக்கிறோம். "கல்கி" அடுத்த இதழ் 1945-ம் வருஷம் ஜனவரி 7உ வெளியாகி, அப்புறம் வழக்கம்போல் பிரதி ஞாயிற்றுக் கிழமையும் வெளியாகி வரும். புது வருஷத்துக் "கல்கி"யின் முதல் இதழ் சிறப்பாக வெளிவரும் என்று சொல்ல வேண்டியதில்லை.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "அன்று வந்தாள்?" என்னும் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: என். ஜி. ராஜன். அயன்புரம்.


Happy & clean
Shaves with
Vita
MADE IN U.S.A.
FINEST SURGICAL STEEL
Vita
BLADES
விடா ப்ளேட்கள் மிக நேர்த்தியான
சர்ஜிகல் எஃகினால் எலெக்ட்ரோ உஷ்ண
மானியால், கெட்டியாகவும், நல்ல
டெம்பருடனும் மென்மையதாகவும் செய்
யப்பட்டு மும்முறை பரிக்ஷிக்கப்பட்டது.
கண்ட்ரோல் விலைக்கு
எங்கும் விற்கப்படுகிறது.
NEW YORK TRADING CO.,
FORT : BOMBAY.

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 இதழ் 21 | 1944 டிசம்பர் 24 | தாரண ௵ மார்கழி 10

என்ன செதி?	...	7
நிகழ்ச்சிச் சித்திரம்	உம்பன்	8
சுதந்திரத்துக்கு என்ன வேண்டும்?	...	10
பாரதிக்குப் பதினையாயிரம்	...	15
வான சஞ்சாரம்	இசைத்தேனீ	16-C
சிவகாமியின் சபதம்	கல்கி	17
இழந்த காதல்	நாடோடி	23
வாய்மைக்கு இனி யார்?	டி. கே. சி.	26
நச்சுப் பல்	எம். என். எம். பாவலர்	28
பாப்பா மலர்	ராஜி	34
சந்தேகம் தீர்ந்தது	லோபால்	37
பாரதியார் ஞாபகார்த்த நிதி	...	41
மானம் காத்தல்	ராஜாஜி	46
காலக்ஷேபம்	...	51

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



எல்லாரும் கேட்ட கதை :—ஒரு சங்கீத வித்வான் பாடிக் கொண்டிருந்தார். அதை ஒரு கோனார் பார்த்தார். "ஐயையோ! இந்த மாதிரிதான் போன வாரம் ஒரு ஆட்டுக் குட்டிக்கு இழுத்தது. சூடு போட்டோம்; பிழைத்தது. இவருக்கும் ஒரு சூடு போட்டால் பிழைப்பாரே!" என்று பரிதவித்தார்.

கோனாருக்கு இம்மாதிரி சங்கடம் உண்டாகும்படி சங்கீத வித்வான்கள் உடம்பை முறித்துப் பாடுவதற்குக் காரணம் சரீர வசதி இல்லாமைதான். சரீர வசதி பூரணமாயுள்ள சங்கீத வித்வானுக்கு நம் காலத்தில் சிறந்த உதாரணமாய் விளங்குகிறவர் செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்கள். செம்பை பாடுகிறபோது பாருங்கள்! அவருடைய உள்ளத்திலே பொங்கும் சங்கீதானந்தம் எப்படி அவருடைய முகத்திலும் பிரதிபலிக்கிறது? என்ன குதூகலம்! என்ன முகமலர்ச்சி!

பூர்வ ஜன்மத்தில் பகவானுக்குக் குடம் குடமாகத் தேனபிஷேகம் செய்து இனிமை குன்றாத சரீரத்தைப் பெற்ற பாக்யசாலி, இந்த ஜன்மத்தில் அரிய சாதகங்களைச் செய்து சங்கீத சம்பத்தைப் பூரணமாய் அடைந்திருக்கிறார். "கான கந்தர்வர்" "சங்கீத சம்ராட்" என்னும் பட்டங்கள் செம்பையின் விஷயத்தில் மிகவும் பொருத்தமானவை.

அத்தகைய மகா வித்வான் நாளை 24-ல் தமிழிசை விழாவில் (ஸெண்ட் மேரீஸ் ஹாலில்) தக்க பக்க வாத்தியங்களுடன் கச்சேரி செய்கிறார் என்பதை நேயர்களுக்கு மீண்டும் ஒரு முறை ஞாபகப் படுத்துகிறோம்.



சாக்கின் மேன்மையைக்குறிப்பது
கரும் பூனை மார்க்
AROMATIC CHEMICAL & OIL CO
சோப்பு, வாசனை சாமான்கள், சோடா பானம், பெப்பர்மின்டு தயாரிப்பவர்கள். கரும் பூனை மார்க் பொருள்கள், தங்கள் தயாரிப்புகளுக்கு மிகச் சிறந்தவை என பார்த்து தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.
AROMATIC CHEMICALS
AMINJIKARAI MADRAS



22 - 12 - 1944 முதல்
சென்னை
ஸ்டார்
டாக்கிஸில்
V. சாந்தாராம் &
ராஜ்கமல்
இவர்களின் மகோன்னத
பக்தி ரசம் ததும்பும்
உன்னதத் தயாரிப்பு !
பக்த மாலி
மாஸ்டர்
கிருஷ்ணராவ்
பேபி நளினி
அமீர் கர்னாடகி
நடிப்பது
தினசரி 3 காட்சிகள்
Producer
V. Shantaram's
Mali

ரேணுகாதேவி நாடக மண்டலி

கிருஸ்துமஸ் விடுமுறைக்காக அற்புத நாடகம்
டிசம்பர் 30உ சனி வாரம் இரவு 9-30 மணி முதல்
பெங்களூரில் 200 நாட்கள் நடைபெற்ற பிரபல நாடகம்
தினசரி நடைபெறும்!
சிம்ஹாவின்

சம்சார நௌகா

(தமிழில்)

நடிகர்கள்

B. R. பந்துலு
சொக்கலிங்க பாகவதர்
ஸ்ரீனிவாஸ்
கல்யாணம்

ஆண்டாள்
விஜயாள்
சகுந்தலா
மதுரம்

மற்றும் இதர பிரபல சினிமா நடிகர்கள் நடிப்பது

சௌந்தர்ய மஹால் - கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்
சனி, புதன், இரவு 9-30 மணிக்கு
ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன், மாலை 6-30 மணிக்கு
பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நாடகம் கிடையாது

எல்லா இனத்தாரும் விரும்பும் உன்னதப் படம்!

காதம்பரி (ஹிந்தி)

(சாந்தா ஆப்டே & பாரிசன்யால்)



இது "சிறுவன் சிறுமியை சந்தி"க்கும் கதையல்ல. "மனமில்லாத மணத்"தின் கதையல்ல

ஆனால்

"காதம்பரி"- விண்ணிலும் மண்ணிலும் பூரணமான பொருத்தமான
காதல் சித்திரம்!

★

உங்கள் பூரண ஆதரவு பெற்று

சென்னை வெலிங்டனில்

23-12-44-ல் வெளி வருகிறது

(இது நட்டின் கம்பெனியாரின் ஓர் உன்னத வெளியீடு!)